V2,11:5147 L6n
N79
103099

# பாஞ்சாலங்குறிச்சிப் போர்

(ஓர் உண்மை விளக்கம்)

எஸ். என். கே. ராஜன்

தமிழரசி பதிப்பகம்

85, சல்லிவன்ஸ் கார்டன் ரோடு,
மயிலாப்பூர் : : சென்னை-600 004

முதற் பதிப்பு: மார்ச்—1979
உரிமை பதிப்பகத்தாருக்கே

N79

ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
103099

சர்வ தேசக் குழந்தைகள்
ஆண்டு வெளியீடு

விலை ரூ. 5-50

அச்சிட்டோர்:
வீரபத்திரர் அச்சகம்,
சென்னை—600 014.

# முன்னுரை

ஆதிக்க வெறி கொண்டு சுதேச மன்னர்களுடன் அக்கிரமமாகப் போரிட்ட ஆங்கிலேயர்களை ஆக்ரோஷமாக எதிர்த்தவன், தமிழ் நாட்டுச் சுத்த வீரன் வீர பாண்டியக் கட்டபொம்மன்.

அவன் கட்டி ஆண்ட இரும்பு நிகர் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை ஆங்கிலேயர்களால் தகர்த்துத் தரை மட்டமாக்கப்பட்டது.

அதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவன் மேஜர் ஜான் பானர்மென்.

வெள்ளையருக்கு வரி கொடா இயக்கத்தை வலுவாக நடத்திய வீரபாண்டியக் கட்டபொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை, பானர்மென் தலைமையில் வந்த கிழக்கிந்தியக் கம்பெனிப் படைகளால் 1799-ம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள் முற்றுகை யிடப்பட்டது. அதே ஆண்டு, அதே மாதம் ஒன்பதாம் நாள்—அதாவது நான்கு நாட்களுக்குப் பிறகு—கைப்பற்றப்பட்டது!

கைப்பற்றப்பட்ட சில நாட்களில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தகர்த்துத் தரை மட்டமாக்கப் பட்டது!

மேஜர் ஜான் பானர்மெனின் கண்டிப்பான கட்டளைப்படி தகர்த்துத் தரை மட்டமாக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை மீண்டும் 1801-ம் ஆண்டு ஃபெப்ருவரி மாதம் வீரபாண்டியக் கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரையின் ஊக்கத்தாலும், நாட்டுப் பற்று மிகக் கொண்ட பாஞ்சைப்பதி மக்களின் பேரார்வத்தாலும் இரண்டே வாரங்களில் முன்னை விடப் பன்மடங்கு வலிமை மிக்கதாகக் கட்டப்பட்டது.

அவ்வாறு மிக மிகக் குறுகிய காலமான பதினைந்தே நாட்களில் கட்டப்பட்ட அந்தப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு— ஊமைத்துரையின் சலியாத ஊக்கத்தால் எழுந்த அக் கோட்டைக்கு— "ஊமையன் கோட்டை" என்று பெயரிடப்பட்டது.

"ஊமையன் கோட்டை" என்று பெயரிடப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை, ஊமைத்துரையின் ஆட்சிக் காலத்தில் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் என்னும் ஆங்கிலத் தளபதியின் தலைமையில், மேஜர் காலின்ஸ் மெக்காலே என்னும் படைத் தலைவனின் துணையுடன் வந்த ஆங்கிலக் கம்பெனிப் படைகளால் 1801-ம் ஆண்டு மே மாதம் தகர்த்துத் தரை மட்டமாக்கப்பட்டது!

இவ்வாறு இருமுறை நடந்த பாஞ்சாலங் குறிச்சிப் போர்களில் முறையே வீரபாண்டியக் கட்டபொம்மனும், அவனுடைய இளவல் ஊமைத்துரையும் காட்டிய வீர தீர சாகசச் செயல்களைப் பற்றியும், வெறும் மண்ணால் கட்டப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக்



கோட்டை, கம்பெனிப் படைகள் நடத்திய கடுமையான முற்றுகைகள், மற்றும் பொங்கிச் சீறிய பீரங்கிக் குண்டுகளின் தாக்குதல்கள் ஆகியவற்றைத் தாங்கிச் சமாளித்த வலிமையைப் பற்றியும் பாஞ்சாலங்குறிச்சியின் பகைவர்களான வெள்ளையரே வியந்து பாராட்டியிருக்கின்றனர்!

இரண்டாம் முறை ஊமைத்துரைக்கு எதிராக நடந்த போரை—ஊமையன் கோட்டை என்றழைக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் மேல் நடந்திய போரைப் பற்றிய உண்மை விளக்கங்கள் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் எழுதிய "எனது போர் நினைவுகள்" என்னும் குறிப்புகளில் விரிவாகக் காணப்படுகின்றன.

இரண்டாவது போரான 'ஊமையன் கோட்டை' என்னும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைப் போரை முன்னின்று நடத்திய கர்னல் ஜேம்ஸ்வெல்ஷுக்குத் துணை நின்றவன் மேஜர் காலின்ஸ்மெக்காலே.

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் போர் முனைகளில் கண்டவைகளைக் குறையோ மிகையோ இன்றி அப்படியே உள்ளது உள்ளபடி எழுதித் தன் மேலதிகாரிகளுக்குச் சமர்ப்பித்தான்.

அவன் சமர்ப்பித்த குறிப்புகளில் ஊமைத்துரையும், அவனுடைய விடுதலைப் புரட்சிப் படை வீரர்களும் போரில் காட்டிய வீரம், தீரம், திறமை, தந்திரம், சாகசம் ஆகியவற்றைப் பற்றியும், கோட்டைச் சுவர் தகர்ந்ததும் கோட்டைக்குள் புகுந்து,

புரட்சிப் படை வீரர்களால் படுகாயப் படுத்தப்பட்டு வீழ்ந்த வெள்ளையர் படை வீரர்களின் மேல் ஊமைத் துரையும், அவரைச் சார்ந்தவர்களும்காட்டிய கருணையைப் பற்றியும் ஒளிவு மறைவு ஏதுமின்றி, உள்ளது உள்ளபடி உண்மை வடிவில் எழுதியுள்ளான்.

அவ்வாறு கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் எழுதிய போர் நினைவுக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு, என் கைவண்ணத்தை—கற்பனையை அல்ல, வர்ணனையை—அங்கங்கே கொஞ்சம் கொஞ்சம் கலந்து, விரிவாக எழுதியுள்ளேன் இந் நூலில்.

இதனைப் பாஞ்சாலங்குறிச்சிப் போர் பற்றிய நேர்முக வர்ணனை என்றாலும் பொருந்தும்.

ஆனால் ஒரு சிறு மாறுதல்.

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் சொல்வதுபோல 'தன்மை'யில் எழுதிய குறிப்புகளை இதில் 'படர்க்கையில்' மாற்றி எழுதியிருக்கிறேன். அவ்வளவுதான்!

இரண்டாவது பாஞ்சாலங்குறிச்சிப் போரின் உண்மை வரலாற்றைப் படித்து ரசிக்கும்படி வாசக அன்பர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

**எஸ். என். கே. ராஜன்**

# பதிப்புரை

பாஞ்சைப் பதி—வீரம் விளைத்த நிலம். மரணத்தை விட மானமே பெரிதாக எண்ணிய மறவர்கள் வாழ்ந்த பூமி.

பல்லாயிரம் மைல்களுக் கப்பாலிருந்து வாணிபம் செய்ய வந்த பரங்கியர் கூட்டம், 'வரி வசூலிக்கும் உரிமை' என்ற பெயரிலே நயவஞ்சக நாடகமாடி, குறுநில மன்னர்களையும், பாளையக்காரர்களையும் அடிபணிய வைத்துக் கொண்டிருந்த நேரம்...

சொந்த நாட்டினரையே காட்டிக் கொடுக்கவும் தயங்காத எட்டப்பன் போன்ற சிலர், வெள்ளையருக்கு வெண்சாமரம் வீசி கைக்கூலிகளாயினர்.

எதிர்ப்பு ஏதுமின்றி சரணடைந்தனர் சில பாளையக்காரர்கள். இவர்களுக்கு மத்தியிலே "வரியா? யாருக்கு யார் வரி கட்டுவது?" என்று வீர கர்ஜனைப் புரிந்தனர், தென்பாண்டி மறவர்களாம்—வீர பாண்டியக் கட்டபொம்மனும், அவர் தம் இளவல் ஊமைத் துரையும்.

இந்த கர்ஜனைதான் பாரத மண்ணிலே வெள்ளையருக்கு எதிராக எழுந்த முதல் குரல். சுதந்திரம் கருக் கொள்வதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன் — ஏன்? — 'முதல் சுதந்திரப் போர்' என வர்ணிக்கப் படும் 'சிப்பாய் கலகம்' தோன்றுவதற்கு முன்னதாகவே எழுப்பப்பட்ட தன்மானப் போர்க் குரல் — தமிழ் மறவர்களின் குரல்தான் எனில் மிகையாகாது.

தன்மானப் போருக்குத் தலைமை ஏற்று, சேனைத் தலைமையாக்கி செங்குருதி நீர் தேக்கி—ஆனை மிதிக்கும் அந்த அருஞ் சேரும் — பாஞ்சைப் போர்க்களத்தில் பரங்கியர் தம் முடி நட்டு, இறுதியில் தங்கள் இன்னுயிரை ஈந்த பாஞ்சை மறவர்களின் வரலாறு ஒரு வீரக் காவியம்—ஜீவக் காவியம்!

நாட்டுப் பற்றும், தியாகமும், சுதந்திர வேட்கையும் அருகி வரும் இந்நாளில், இத்தகைய விடுதலை வரலாறுகள், நூல் வடிவம் பெறுவது அவசியமாகிறது.

'பாஞ்சாலங்குறிச்சிப் போர்' எனும் இவ்வரலாற்று நூல் அந்த வழியிலே ஓர் சிறு முயற்சியே. வெறும் கதை வடிவமாக மட்டுமல்லாமல், வரலாற்றுக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு, எளிய நடையில் சுவைப்பட விளக்கியுள்ளார் ஆசிரிய நண்பர், திரு. எஸ். என். கே. ராஜன் அவர்கள். அவர் தம் சீரிய முயற்சி பாராட்டத்தக்கது.

குறிப்பாக இன்றையப் பள்ளி மாணவர்களுக்கு இத்தகைய நூல்கள் இன்றியமையாதது. அப்போது தான் நாம் பெற்ற சுதந்திரத்தின் அருமையும், அதைப் பெறுவதற்காக நம் முன்னோர்கள் பட்ட அவதியும் நன்கு விளங்கும்.

ஒளி படைத்தக் கண்ணினாய், வீறு கொண்ட நெஞ்சினாய், ஒப்பாரும் மிக்காரும் மற்று விளங்கும் இளைய பாரதத்தினர்க்கு—நாளைய வரலாற்றைச் சமைக்கப் போகும் நல்லிளஞ் சிங்கங்களுக்கு, இந் நூலைப் பெருமையுடன் அளிக்கிறோம்.

—மு. செல்வராசன்

# போருக்கு முன்...

தென்னகத்தில் பாஞ்சாலங்குறிச்சியை நிறுவிய ஆதிகெட்டி பொம்மு நாயகரின் சந்ததியில் நாற்பத்தாறுவது வாரிசாக, 1760-ம் ஆண்டு பட்டத்திற்கு வந்த ஜெகவீர கட்டபொம்மனுக்கும், அவரது மனைவி சண்முகக்கனி என்னும் ஆறுமுகத்தம்மையாருக்கும் நாற்பத்தேழாவது பட்டத்தரசின் வாரிசாக அருமைத் திருமைந்தராய், 1760-ம் ஆண்டு, ஜனவரித் திங்கள், மூன்றும் நாள் பிறந்த வீரபாண்டியக் கட்டபொம்மன், 1790-ம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதம் இரண்டாம் நாள் அரியணை ஏறினார்.

வீரபாண்டியக் கட்டபொம்மன் பாஞ்சைப் பதியை அரசோச்சியது ஒன்பதாண்டு காலமே! ஆனாலும், முத்தமிழ்க் கவிஞர் போற்ற, குடிமக்கள் களிபேருவகை அடைய பாஞ்சாலங்குறிச்சியை நீதி, நேர்மை மிக்கப் பாங்குடன் ஆட்சி புரிந்து, தென்பாண்டி நாட்டின் தனிப் பெரும் தலைவராய், வீரம் செறிந்த மறவர் குல மன்னராய்த் திகழ்ந்தார்.

ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வாணிகம் செய்ய இந்தியாவில் காலடி எடுத்து வைத்த ஆங்

கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் வடநாட்டு வாணிகம் போதாதென்று, தென்னுட்டிலும் நுழைந்தனர்.

அவ்வாறு நுழைந்தவர்கள் அப்போதைய நாட்டு நிலைமையை நன்கு உய்த்துணர்ந்து, தென்னுட்டை ஆங்காங்கே ஆண்டு கொண்டிருந்த நவாபுகளிடையே நிலவிய ஒற்றுமையின்மை என்ற பலவீனத்தைப் பயன்படுத்தி, பிரித்தாளும் சூழ்ச்சியைப் பக்குவமாகக் கையாண்டு, அவர்களிடையே விரோதத்தை வக்கிரமாக உண்டு பண்ணினர்.

அதன் காரணமாக அவர்களிடம் வரி வசூலிக்கும் வஞ்சக உரிமையையும் மெள்ள மெள்ள அடைந்தனர்.

அதே எண்ணத்தில்—நவாபுகளால் உண்டாக்கப்பட்ட நப்பாசையில்—வரி வாங்கும் உரிமைக் குரலைத் தமிழ் மன்னர்களிடமும் எழுப்பினர்.

அவர்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர் விரபாண்டியக் கட்டபொம்மன்!

வெள்ளையரின் வரி வாங்கும் உரிமைக் குரலைக் கேட்டு வெகுண்டெழுந்தார் வீரபாண்டியன். வாணிகம் செய்ய வந்தவன் வரி கேட்பதா என்று வீர முழக்கமிட்டார்!

வீரபாண்டியக் கட்டபொம்மனின் வரிகொடா இயக்கத்தால் வெள்ளையரின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டார்!

கிஸ்தி கட்டமாட்டேன்—என்று கடுஞ் சினத்தோடு கூறிய கட்டபொம்மன் மேல் கொடும் பகை மூண்டது கம்பெனியாருக்கு.



அவரைப் பழி வாங்கும் பாதக எண்ணம் வெள்ளையரின் உள்ளத்தில் உதித்தது!

அதன் பலனுக மூண்டெழுந்தது மூர்க்கமான போர்த் தீ!

அத் தீய்க்குத் தூபம் போட்டனர் பாஞ்சைப்பதி பாருக்குப் பகைவரான—வெள்ளையரின் அடிவருடிகளான—எட்டயபுரத்து ஜமீன்தார் எட்டப்ப நாயக்கனும், புதுக்கோட்டை அதிபதி விஜயரகுநாதத்தொண்டைமானும்.

அதன் முடிவு?

பாஞ்சாலங்குறிச்சிப் போர்!

கிழக்கிந்தியக் கம்பெனியின் அப்போதையத் தளபதியாக இருந்தவர் மேஜர்ஜான் பானர்மென்.

வரி கொடுக்க முடியாது என்று அடம் பிடித்த வீரபாண்டியக் கட்டபொம்மனின் வீர முழக்கம் மேஜர் ஜான் பானர்மெனின் கோபத்தைக் கிளறியது.

முடிவாக பானர்மென் படைகளுடன் வந்து 1799-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் நாள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டார்.

முற்றுகையிட்ட நான்கே நாட்களில்—ஒன்பதாம் தேதி—கோட்டையைக் கைப்பற்றி, பின்னர் அதைத் தகர்த்துத் தரைமட்டமாக்கினர்.

கோட்டை முற்றுகையின் இடையில்—ஏழாம் தேதி—இரவு பத்தரை மணிக்குத் தன் தம்பி ஊமைத்

துரையுடன் கோட்டையிலிருந்து தப்பியோடினார் கட்டபொம்மன்.

தப்பியோடியவர்கள் புதுக்கோட்டைத் தலைவனான விஜயரகுநாதத் தொண்டைமானிடம் தஞ்சம் புகுந்தனர் – அவன் விஷம் நிறைந்த நச்சுப் பாம்பு என்பதை அறியாதவர்களாய்!

வஞ்சகனான விஜயரகுநாதன்— கம்பெனியாரின் கைப்பாவையாக ஆடிய தொண்டைமான்—வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தந்திரமாக வெள்ளையருக்குக் காட்டிக் கொடுத்து விட்டான்.

தஞ்சம் கோரியவருக்கு வஞ்சகம் செய்தான் விஜயரகுநாதன்! அபயம் என்று வந்தவரை ஆபத்தில் சிக்க வைத்து விட்டான் அயோக்கியன்!

வீரபாண்டியக் கட்டபொம்மன் வெள்ளையரால் கைதாக்கப்பட்டார்!

அவருடன் இருந்த ஊமைத்துரை எப்படியோ சாமர்த்தியமாகத் தப்பிவிட்டார்!

1799–ம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள் பதினாறும் நாள்...காலை பத்து மணி!

கயத்தாறு என்னும் இடத்தில் பகிரங்க விசாரணை என்னும் கண் துடைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது – ஆங்கிலேயத் தளபதியான மேஜர்ஜான் பானர்மென்னால்.

குற்றங்கள் பல சாட்டப்பட்டு, தூக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டது தென்பாண்டி வீரனுக்கு!

புளியமரம் ஒன்றில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த தூக்குக் கயிற்றில், மாற்றானைக் கொண்டு



அதன் சுருக்கைத் தன் கழுத்தில் மாட்ட விட மனமொப்பாத மானியான வீரபாண்டியக் கட்டபொம்மன், கண்டவர் கதிகலங்க, பார்த்தவர் பதறித் துடிக்க, கேட்டவர் கொதித்தெழ, தானே சுருக்கைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு வீர மரணம் எய்தினார்!

வீரபாண்டியக் கட்டபொம்மன் வீர சொர்க்கம் புகுந்த பின் பதினாறு மாதங்கள் கழிந்தன!

கட்டபொம்மனின் இளவல்களான ஊமைத்துரை என்று ஊரார் போற்றிய தளவாய் குமாரசாமியும், சுப்பையா என்றும், சிவத்தையா என்றும் சிறப்பாக அழைக்கப்பட்ட துரைசிங்கமும் பரங்கியரால் பிடிக்கப்பட்டு, பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அதைச் சகியாத பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்து வீர மறவர்கள் 1801–ம் ஆண்டு, ஜனவரித் திங்கள், பதினாறாம் நாள் ஓட்டநத்தம் என்னும் குக்கிராமத்தில் கொப்பாடி சுப்பிரமணியநாயக்கர், தூத்துக்குடி சிவத்தையா ஆகியோரின் தலைமையில் கூடினர்.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஊமைத்துரையையும், துரைசிங்கத்தையும் விடுவிக்க விரிவான திட்டங்கள் தீட்டினர்.

அத் திட்டத்தின்படி அதே ஆண்டு, ஃபெப்ரவரி மாதம், இரண்டாம் நாள் வீர மறவர்கள் விறகு புல்லுக்கட்டு, காய்கறி, தயிர் முதலானவற்றை விற்பவர் போலவும், தப்பட்டை அடித்துக் கொண்டு ஆடுபவர் போலவும், பிச்சைக்காரர் போலவும், துறவிகள் போலவும், வேடமிட்டு, பாளையங்கோட்டைக்குச் சென்றனர்.

அன்றிரவு அவர்கள் தங்கள் வேட்டுத் திறன்களைச் சிறைக் கோட்டக் காவலர்களான வெள்ளையரிடம் காட்டி, தந்திரமாகவும், திறமையாகவும் ஊமைத் துரையையும், துரைசிங்கத்தையும் மீட்டு வந்தனர்!

சிறை மீண்ட ஊமைத்துரையும், துரை சிங்கமும் நாட்டுப் பற்று மிகக் கொண்ட இருபத்தையாயிரம் வீரர்களின் துணிவான துணையுடன், மேஜர்ஜான் பானர்மென்னால் தரைமட்டமாக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை இரண்டே வாரங்களில் கட்டி முடித்தனர்.

ஊமைத்துரை அக் கோட்டையைக் கட்டப் பெரு முயற்சி எடுத்துக் கொண்ட காரணத்தால் அதற்கு 'ஊமையன் கோட்டை' என்று பெயரிட்டனர். ஆனால் அதை விரும்பாத ஊமைத்துரை, தான் நிர் மாணித்த கோட்டைக்குப் பழைய பெயரான 'பாஞ் சாலங்குறிச்சிக் கோட்டை' என்றே பெயரிட்டு அழைக்கச் சொன்னார். அதேபோல அது அழைக்கப் படலாயிற்று.

ஆண்டுக் கணக்கில் அரும் பாடுபட்டு அமைக்கப் பட வேண்டிய கோட்டை இரண்டே வாரங்களில் எழுப்பப்பட்டது என்றால், அம் மக்களின் நாட்டுப் பற்றுக்கும், பேரார்வத்திற்கும், மனோதிடத்திற்கும் எல்லை வகுக்க முடியுமா?

அத்துடன் கோட்டையை நிர்மாணிக்கக் காரண கர்த்தாவாக இருந்த ஊமைத்துரையின் மேல் அவர் களுக்கு எத்தகைய அன்பும், அபிமானமும், நம்பிக் கையும் இருந்திருக்க வேண்டும்?



இரண்டே வாரங்களில் கோட்டை கட்டி முடிக் கப்பட்டாலும், அவசியம் நிமித்தம், அவசரத்தில் எழுப் பப்பட்ட கோட்டையானாலும், முன்பிருந்த கோட்டை யைக் காட்டிலும் அக் கோட்டை பன்மடங்கு பலம் மிக வாய்ந்தது என்பதைப் பின்னால் நடந்த பீரங்கித் தாக்குதல்கள் மெய்ப்பித்தன!

பனஞ்சாறு ஊற்றிப் பிசைந்த மண் கொண்டு கட்டப்பட்டது அக் கோட்டை. பீரங்கிக் குண்டுகள் பாய்ந்தால் உட்புகுந்து விடாவண்ணம் வைக்கோல், மூங்கில் முதலியன சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன கோட்டைச் சுவர்கள்.

பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து ஊமைத் துரையும், சிவத்தையாவும் அவர்களின் அன்புக்குப் பாத்திரமான குடி மக்களால் தந்திரமாகத் தப்புவிக்கப் பட்ட செய்தியையும், இரண்டே வாரங்களில் பாஞ் சாலங்குறிச்சியில் புதியதொரு கோட்டை கட்டி முடிக்கப்பட்டதையும் கிழக்கிந்தியக் கம்பெனியார் கேள்விப்பட்டனர்.

உடனே கோட்டையின் தன்மையையும், நிலை மையையும் அறிந்து வர ஒற்றர்களை ஏவினான் கம் பெனியாரின் அப்போதையப் படைத் தலைவனான மேஜர்காலின்ஸ் மெக்காலே.

ஒற்றர்கள் இரவோடு இரவாகச் சென்று, உள வறிந்து வந்து, கோட்டை முன்னைவிடப் பன்மடங்கு பலம் மிகக் கொண்டதாக இருப்பதாகவும், கோட் டையில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட வீரர்கள் தங்கி யிருப்பதாகவும், அவர்கள் கம்பெனியாரைத் தாக்கத்

திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகவும் மெக்காலேயிடம் கூறினர்.

உடனே மேஜர்காலின்ஸ் மெக்காலே அச் செய்தியைத் தன் உயர் அதிகாரியான கர்னல்ஜேம்ஸ் வெல்ஷிடம் தெரிவித்தான்.

அச் செய்தியைக் கேட்ட கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ், மேஜர்காலின்ஸ் மெக்காலேயின் துணையுடன், ஆங்கிலேயக் கம்பெனியின் எழுபத்து நான்காவது படைப் பிரிவை அழைத்துக் கொண்டு, புதிய பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைத் தகர்த்தெறிய, 1801-ம் ஆண்டு, மார்ச் திங்கள், முப்பத்தோராம் நாள் வந்து, பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தில் முகாமிட்டான்.

மேலும் அவன் தனக்குத் துணையாக நின்று போர் புரியக் கேப்டன் சார்லஸ்டிராட்டர் என்பவனின் தலைமையில் ஒரு படைப் பிரிவையும், பாஞ்சாலங் குறிச்சியின் பரம வைரியான எட்டப்பனின் படை வீரர்களையும் வரவழைத்தான்.

அப்படைகள் அனைத்தும் சேர்ந்து ஊமையன் கோட்டை என்னும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை மறு நாள் தாக்கத் தயாராயின!

# கோட்டையைப் பார்த்து கேலிப் பேச்சு!

**1801-ம் ஆண்டு...**

வெள்ளையர் வழக்கப்படி ஒருவரை ஒருவர் 'முட்டாள்' செய்து கொள்ளும் நாள்...

ஆம்!... 'ஏப்ரல் ஃபூல்' நாளான ஏப்ரல் மாதம் ஒன்றும் தேதி!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டுப் பிடிக்க வெள்ளையர் படைத் தளபதி கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ், படைப்பிரிவுத் தலைவன் மேஜர் காலின்ஸ் மெக்காலே ஆகியோரின் தலைமையில் அனுப்பப்பட்ட எழுபத்து நான்காவது படைப் பிரிவு-தொள்ளாயிரம் துப்பாக்கி வீரர்கள், மற்றும் குதிரைப் படை பீரங்கிப்படை ஆகியவற்றைக் கொண்ட படைப் பிரிவுகள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் முன் அணிவகுத்து நின்றன.

ஆங்கிலேயரின் படைக்கு உதவியாகப் பாஞ்சாலங்குறிச்சியின் மேல் வெஞ்சினம் கொண்ட வஞ்சகனும் எட்டயபுரத்து எட்டப்ப நாயகனின் படையும் பக்கபலமாகச் சேர்ந்து கொண்டது.

ஐந்நூறு அடி நீளமும், முந்நூறு அடி அகலமும், பன்னிரண்டு அடி உயரமும் கொண்ட, மண்ணால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைக் கண்டதும் வெள்ளையர்

படை வீரர்களுக்கு வேடிக்கையாக இருந்தது! கேலியாகப் பேசினர்!

“இது என்ன கோட்டையா? இங்கிலாந்தில் முட்டைக்கோஸ் பயிரிடும் பண்ணையில், அதைப் பாதுகாக்க அமைக்கப்படும் சுற்றுச் சுவர் மாதிரியல்லவா இருக்கிறது? இந்த அற்பமான, சாதாரண மண் கோட்டையை எதிர்த்துத் தானா இந்த அசாதாரணப் போர்? இதற்குத்தானா இவ்வளவு பெரிய படை?... சே!” என்று சிரிப்புக்கிடையே ‘பேசியது கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ், மேஜர்காலின்ஸ்மெக்காலே ஆகியோரின் செவிகளில் விழாமலில்லை.

அந்தக் கோட்டைச் சுவரின் வெளிப் பக்கம் செங்குத்தாக இருந்ததுடன், அக் கோட்டையின் நான்கு மூலைகளிலும் சிறு கொத்தளங்களும், நடு நடுவே பல கிளிக்கூட்டு அலகங்களும் அமைக்கப்பட்டிருந்தன!

அதாவது கேட்டையின் உள்ளே இருப்பவர்கள் வெளியில் இருக்கும் பகைவர்களைப் பார்த்தறிந்து போரிடவும், அதே சமயம் தாங்கள் இருக்கும் இடத்தைப் பகைவர் அறியாமல் இருக்கவும் அமைக்கப்பெற்ற இடங்களே, கிளிக்கூட்டு அலகங்கள்.

கோட்டையில் அங்கங்கே சில பழைய துப்பாக்கிகள் பொருத்தப்பட்டு, அவை வெளியே தலை நீட்டிக் கொண்டிருந்தன.

சமவெளியில் கோட்டை இருந்ததால் அதைச் சுற்றி அகழி இல்லை.

கோட்டையைப் பகைவர் எளிதில் அணுகாதவாறு அதனைச் சுற்றிலும் இலந்தை மரங்கள் மண்டிய



காவற்காடு ஒன்று அடர்த்தியாக வளர்க்கப்பட்டிருந்தது.

அது ஓர் அதிசயமான கோட்டையாகத்தான் தென்பட்டது வெள்ளையரின் கண்களுக்கு !

## மனப்பால் குடித்தவர் மலைத்து நின்றனர் !

காலை நேரம்.

மணி எட்டு கூட ஆகவில்லை !

கிழக்கிந்தியக் கம்பெனிப் படை வீரர்கள் அற்பத்தனமாகவும், அதிசயமானதாகவும் எண்ணி ஏளனம் பேசிய அந்தப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் வடமேற்குப் பகுதியின் பக்கம் சென்று, கோட்டைக்குச் சுமார் 900 கெஜம் தூரத்தில் படைகளை அதி விரைவில் அணிவகுத்து நிற்கச் செய்து, போருக்கு வேண்டிய ஆயத்தங்களையும்,முற்றுகைக்கு வேண்டிய முன்னேர்பாடுகளையும் செய்து முடித்தான் மேஜர் காலின்ஸ்மெக்காலே.

மெக்காலே செய்த ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டான் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக் கொத்தளங்களில் தலை நீட்டிக் கொண்டிருந்த துப்பாக்கிகளைப் பார்த்ததும், தற்காப்பிற்காகத்தான் ஒரு சில பழைய

துப்பாக்கிகளைப் பொருத்தி வைத்திருக்கிறன் ஊமைத் துரை என்று ஏளனமாக எண்ணிய வெள்ளயரின் படைப் பிரிவிலே ஒரே ஒரு எட்டு பவுண்டர் பீரங்கியும், இரண்டு பன்னிரண்டு பவுண்டர் பீரங்கிகளும் மட்டுமே இருந்தன.

கோட்டையைத் தகர்த்து மண் மேடாக்க, மண் சுவர்களை இடித்துத் தரைமட்டமாக்க அம் மூன்று பீரங்கிகளே அதிகம் என்று மனப்பால் குடித்தான் கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ்!

ஆனல் நடந்தது என்ன?

நடந்ததைக் கண்டு தங்கள் மேலதிகாரிகளுக்குச் செய்தி அனுப்ப மனம் வரவில்லை. எழுதி அனுப்பக் கை வரவில்லை கர்னல் வெல்ஷுக்கும், மேஜர் மெக்காலேக்கும்!

சரியாக மணி எட்டரை...

பாஞ்சாலங்குறிஞ்சிக் கோட்டையை நோக்கி பீரங்கியால் சுட ஆரம்பித்தனர் பரங்கியரின் பீரங்கிப் படை விரர்கள்.

அந்நிய நாட்டுப் பிரத்தியேகத் தயாரிப்பான எட்டு பவுண்டர் பீரங்கியை முதலில் இயக்கிச் சுட்டனர்.

அது பலத்த சத்தத்துடன், அனலைக் கக்கிக் கொண்டு வேகமாக, விரைவாகக் குண்டுகளை வாரி வீசிக்கொண்டிருந்தன கோட்டைச் சுவரை நோக்கி!



ஆனல் கர்னல் வெல்ஷ் எதிர் பார்த்த அளவுக்கு அது—குண்டுமாரி— அழிவை உண்டு பண்ணவில்லை!

அழிவை உண்டு பண்ணுதது மட்டுமல்ல, அந்தச் சக்தி வாய்ந்த வெளி நாட்டு விஷேச பீரங்கிக் குண்டுகள் கோட்டைச் சுவரை அணுகக் கூடச் சக்தியற்றுப் படுதோல்வி அடைந்து, தரையின் மேல் விழுந்து உருண்டன!

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் கச்சிதமாய் கணக்கிட்ட இலக்கை குண்டுகள் தாக்காமல், கோட்டைச் சுவருக்குப் பல கெஜ தூரம் தள்ளியே விழுந்தன!

ஆச்சரியம் அளவு கடந்து விட்டது கர்னல் வெல்ஷுக்கு!

அது மாயமா?மந்திரமா? என்பது அவன் மனதிற்குப் புரியாத புதிராக இருந்தது!

ஒரு வேளை குண்டு தாக்கும் தூரத்தை கனிப்பதில் தவறு நேர்ந்திருக்கலாம் என்பது மேஜர் மெக்காலேயின் எண்ணமாக இருந்தது! அதை வெல்ஷிடமும் கூறினன்.

அதற்கு வெல்ஷ், அது போன்ற எட்டு பவுண்டர் பீரங்கிக் குண்டுகள் ஆயிரம் கெஜங்களுக்கும் மேலேயே பாய்ந்து சென்று, தாக்கும் சக்தி வாய்ந்தன என்றும், மேஜர் பானர்மென் நடத்திய முந்தையப் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் அது போன்ற பீரங்கி கோட்டைக்கு ஆயிரம் கெஜங்களுக்கு அப்பாலிருந்து சீறிப் பாய்ந்து சென்று, கோட்டைச் சுவரைத்

தாக்கித் தகர்த்திருக்கிறது என்றும் தான் அறிந்த உண்மையை மேஜர் மெக்காலேக்கு எடுத்துரைத் தான்.

அத்துடன் தற்போதையப் போரில் அந்த பீரங்கி யின் சக்தி ஏன் குறைந்து விட்டது என்பது தனக்குப் புரியாத புதிராக இருப்பதாகவும் கூறி வியப்படைந் தான் வெல்ஷ்!

அந்தப் பிரத்தியேகமான வெளி நாட்டுப் பீரங்கி யின் கதியே அப்படி யென்றால், மற்றும் இரண்டு சாதாரணப் பன்னிரண்டு பவுண்டர் பீரங்கிகளைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?

வகை தெரியாது விழித்தான் வெல்ஷ்! — மெக்கா லேயும் கூடத்தான்!

## சுவர் தகர்ந்தும் உட்புக வழி இல்லை!

காலையில் கடுமையாகத் துவங்கிய பீரங்கிப் போர் மதியம் வரை மந்தமாக நடைபெற்றது.

முதல் முயற்சியே முற்றிலும் பயனற்று விட்ட தால், முதற் கோணல் முற்றும் கோணலாகிவிடுமோ என்று அஞ்சினர் ஆங்கிலத் தளபதிகள்.

அதனால் மதியத்திற்கு மேல் பீரங்கிகள் கோட்டை யின் வடக்குத் திசைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அங்கே தூரத்தைக் குறுக்கி, கோட்டையிலிருந்து நானூறு கெஜத்திற்கு அப்பால் பீரங்கிகளை நிறுத்தி, தாக்குதலை மீண்டும் மும்முரமாகத் துவங்கினர்.



பிற்பகல் மூன்று மணி வரை தாக்குதல்களைக் கடுமையாகத் தொடர்ந்தனர் கம்பெனிப் படையினர்.

தூரம் வெகுவாகக் குறைந்ததால் குண்டுகள் கோட்டைச் சுவரைத் தாக்க ஆரம்பித்தன!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் வடக்கே பரங்கியரின் பீரங்கிப் படையின் தாக்குதல் நடந்து கொண்டிருந்த போது, கோட்டையின் தென்புரம் ஆங்கிலேயக் கம்பெனியாரின் காலாட்படைப் பிரிவும், கேப்டன் டிராட்டரின் படையும், எட்டப்பனின் படை வீரர்களும் தாக்குதலில் இறங்கினர்.

மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடிபோல, கோட்டையின் இரு பக்கங்களிலும் தாக்குதல்கள் நடைபெற்றன.

ஆனால், தென்புரப் படைகளின் சாதனை, வடப் புரத் தாக்குதலில் ஈடுபட்டிருந்த பீரங்கிப் படைத் தாக்குதலின் சாதனையுடன் ஒப்பிட்டால், அது அவ்வளவு வெற்றிகரமானதல்ல என்று தான் சொல்ல வேண்டும்!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் இருந்த படையினரின் எதிர்ப்பைப் பரவலாக்கி, கோட்டைப் பாதுகாப்பைப் பலவீனப்படுத்தவேதான் தந்திரமாகத் தென்புரத் தாக்குதலைப் பரங்கியர் பயன் படுத்தினர் களே அன்றி, தென்புரம் கோட்டையைத் தாக்கும் எண்ணமோ, நோக்கமோ அவர்களுக்கு அறவே இல்லை!

வடக்குப் பக்கம் பீரங்கிக் குண்டுகள் கோட்டைச் சுவரைத் தாக்க ஆரம்பித்ததைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினர் ஆங்கிலப் படை வீரர்கள்!

கோட்டையைச் சடுதியில் முழுமையாகத் தகர்க்கக் கைவசம் இருந்த மூன்று பீரங்கிகள் போதாதென்று கருதிய கம்பெனிப் படையினர், மற்றும் இரு ஆறு பவுண்டர் பீரங்கிகளைப் புதிதாகத் தருவித்தனர்.

அவ்வைந்து பீரங்கிகளும் கோட்டையின் வடப் பக்கம் நோக்கி முழங்கலாயின! குண்டு மாரி பொழிந்து கொண்டிருந்தன!

இறுதியில் கர்னல் வெல்ஷும், மேஜர் மெக்காலேயும் எதிர்பார்த்தது வீண் போகவில்லை!

பீரங்கிகளின் தாக்குதலால் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் வடபகுதிக்குக் கடுமையான சேதம்!

கடுமையான சேதத்தைக் கண்ணுற்றுக் களி பேருவகை அடைந்தனர் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷும், மேஜர் காலின்ஸ்மெக்காலேயும்!

பரங்கிப் படை வீரர்களோ பரவசத்தால் களியாட்டம் ஆடினர்!

கோட்டைச் சுவர் தகர்ந்ததைக் கண்டவுடன் படை வீரர்களை முன்னேறும்படிக் கட்டளையிட்டு, எதிர்த்தோரைத் தாக்கிக் கோட்டையினுள் நுழையும்படி உவகையுடன் உத்தரவிட்டான் மேஜர் காலின்ஸ் மெக்காலே.

படை வீரர்களும் மேஜரின் கட்டளைக்கு அடி பணிந்து, கைகளில் துப்பாக்கிகளை ஏந்திய வண்ணம் முன்னேறினர்.



ஆனால்...அந்தோ பரிதாபம்!

கோட்டைச் சுவர் தகர்த்தெறியப் பட்டதுதான் கண்ட பலனே தவிர, கோட்டைக்குள் படை வீரர்கள் புக வழி ஏதும் ஏற்படக் காணோம்!

அதை கண்டு கோட்டையை நோக்கி முன்னேறி, உள்ளே புக முயன்ற ஆங்கிலேயப் படைவீரர்கள் ஆச்சரியப்பட்டனர் ஒரு புறம்; திகைத்து, மலைத்து நின்றனர் மற்றொரு புறம்!

கோட்டையின் அமைப்பையும், கோட்டைச் சுவரின் உட்புற வலிமையையும் அவர்கள் அறியாததே அதன் காரணம்.

அதை அறிந்திருந்தால் அவர்கள் அடைந்த ஆச்சரியத்திற்கும், திகைப்பிற்கும், மலைப்பிற்கும் இடமில்லாமற் போயிருக்கும்!

## கோட்டையின் அமைப்பும் வீரர்களின் எதிர்ப்பும்!

முட்டைக்கோஸ் பண்ணையின் பாதுகாப்புச் சுவராக ஆங்கிலேயப் படைவீரர்கள் எண்ணி ஏளனம் பேசி, எக்காளம் புரிந்த அந்தப் பாஞ்சாலாங்குறிச்சிக் கோட்டைச் சுவர் மண்ணால் கட்டப்பட்டதுதான் என்றாலும், அதன் அமைப்பு அதிசயிக்கத் தக்க வகையில் இருந்தது!

பனஞ் சாற்றையும், இராகிக் கூழையும் கலந்து, பிசைந்த களிமண்ணால் சுவர்கள் கட்டப்பட்டிருந்தன. அதன் காரணமாக அவை கல்லினும் கடினமாக இருந்தன.

கோட்டை இரட்டைச் சுவர்களால் அரண் செய்யப்பட்டிருந்ததுடன், அவ்விரட்டைச் சுவர்களுக்கிடையே கம்பு, உமி, பதர், வரகு, வைக்கோல், மரம், மூங்கில் முதலான பொருட்கள் நிரப்பப் பட்டிருந்தன.

அதனால் வலுப்பெற்ற கோட்டைச் சுவர்களைத் தகர்த்துக் கோட்டைக்குள் புகுவது என்பது எளிதான காரியமல்ல என்பதை கர்னல் ஜேம்ஸ்வெல்ஷோ, மேஜர் காலின்ஸ்மெக்காலேயோ, அவர்களது படை வீரர்களோ அறிந்திருந்தால் அவர்களது ஆச்சரியம், திகைப்பு, மலைப்பு ஆகிய உணர்ச்சிகளுக்கு இடமே இல்லாமல் போயிருக்கும்!

ஆகவே பரங்கிப் படையினரின் பீரங்கிக் குண்டுகள் தாக்கிச் சேதப்படுத்தியது கோட்டையின் வெளிச் சுவரையே தவிர, படை வீரர்கள் படு உற்சாகத்துடன் உட்புக வழி வகுக்கும் வகையில் கோட்டையின் உட்புறச் சுவர் தகர்க்கப்படாததுமன்றி, அது குண்டு தாக்கிய அதிர்ச்சியாலும் சிறு விரிசல் கூட விடாதது ஆங்கிலேயர் அறியாத வியப்புக்குரிய விஷயமாகும்!

வெள்ளையரின் பீரங்கிப் படைகள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தகர்க்கும் படுபாதகப் பணியில் தீவிரமாக ஈடு பட்டிருக்கையில், பாஞ்சைப்பதி வீரர்கள் கைகட்டி, வாய் பொத்தி, அந்த அழிவு



வேலையை வேடிக்கையா பார்த்துக் கொண்டிருப்பார்கள்?

பரங்கியரின் சீறி வரும் பீரங்கிக் குண்டுகள் பலம் பொருந்திய பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைச் சுவர்களை அவ்வளவு எளிதாகத் தகர்த்துத் தரைமட்டமாக்கவோ, பகைவரின் படைகள் எதிர்ப்பு ஏதுமின்றிக் கோட்டைக்குள் புகவோ முடியாது என்பது பாஞ்சைப்பதி விடுதலை வீரர்களுக்கு நன்றாகத் தெரிந்துதான் இருந்தது.

இருந்தாலும் அவர்கள் வாளா இருக்க இயலவில்லை! அப்படி இருக்கத்தான் இயலுமா?

எதிர்த்து வரும் படை வீரர்களுடன் வாளேந்திப் போர் புரியவும், அவர்கள் மேல் வேல் எறிந்து தாக்குதல் செய்யவும், துப்பாக்கியால் சுட்டுச் சண்டை செய்யவும் தயாராக இருந்தனர்.

கோட்டையை நோக்கி பீரங்கிகள் குண்டு மாரி பொழிந்து கொண்டிருந்தபோது, கோட்டையினுள் இருந்த துப்பாக்கி வீரர்கள் பீரங்கிப் படையினரை நோக்கித் தொடர்ந்து சுட்டுக்கொண்டிருந்தனர்!

பகைவரை நோக்கி வேல்களை வேகமாக, சரமாரியாக வீசிக்கொண்டிருந்தனர்!

நெருங்கி வரும் வெள்ளைச் சிப்பாய்களை வாள் கொண்டு வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தனர்!

சுருக்கமாகச் சொன்னால், பரங்கிப் படையினருக்கும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை விடுதலைப் படை

வீரர்களுக்கும் கடும் போர்-நேருக்கு நேரான பயங்கரப் போர்-உக்கிரமாக நடந்து கொண்டுதான் இருந்தது!

## நடந்ததைக் கண்டு நடுங்கினர் வெள்ளையர்!

ஆங்கிலேயப் படைப் பிரிவுத் தலைவனான மேஜர் காலின்ஸ்மெக்காலேயின் தலைமையின் கீழ் இருந்த எழுபத்து நான்காவது படைப் பிரிவு இரண்டு தரைப்படைத் துப்பாக்கி அணிகளையும் பீரங்கிப் படையினரையும், குதிரைப் படை வீரர்களையும் கொண்டிருந்தது.

பீரங்கிப் படை வீரர்கள் மேஜர் மெக்காலேயின் ஆணைக்கு உட்பட்டு, பீரங்கிகளை மின்னல் வேகத்தில் அங்கும் இங்கும் நகர்த்தி, கோட்டையை நோக்கிக் குண்டுகளைப் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தனர்.

மற்றும் இரண்டு தரைப்படைத் துப்பாக்கி அணிகளைச் சேர்ந்த போர் வீரர்களைக் கோட்டையின் நாலா பக்கங்களிலும் செல்லுமாறுபணித்து, எதிரிகளானபாஞ்சாலங்குறிச்சிப் புரட்சிப்படைவீரர்கள் ஆக்ரோஷமாகப் பரப்பிக் கொண்டிருந்த எதிர்ப்புப் போரை அங்கங்கு அடக்குமாறு உத்தரவிட்டான் மேஜர் காலின்ஸ்மெக்காலே.

கோட்டைச் சுவர் தகர்ந்த பின், வெகு கவனமாக, மிகுந்த எச்சரிக்கையுடன், கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாதபடி மெக்காலேயின் படை



வீரர்கள் கோட்டையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர்.

கோட்டையில் இருந்த விடுதலைப் புரட்சி வீரர்களின் துப்பாக்கி வேட்டுகள், கோட்டையை நோக்கி முன்னேறும் வெள்ளையர் படை வீரர்களின் துப்பாக்கி வேட்டுகளுக்குச் சரியான பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தன.

அதனால் அவர்களது பதிலடி எதிர்த் தாக்குதலை ஆங்கிலேயத் துப்பாக்கி வீரர்கள் சமாளிக்க முடியாத நிலையில் திணறினார்கள்!

ஆனாலும் மனம் தளரவில்லை அவர்கள்!

மேலும் மேலும் நீட்டிய துப்பாக்கிகளுடன், வேட்டுகளைக் கிளப்பிக் கொண்டே முன்னேறினர்!

வழியில் தடையாக இருந்த முட்புதர் வேலிகளையெல்லாம் ஆபத்தான நிலையிலும், பதற்றமான சூழ்நிலையிலும் கஷ்டப்பட்டுக் கடந்து முன்னேறினர்!

முன்னேறி, பீரங்கிக் குண்டுகளால் தகர்த்தெறியப்பட்ட கோட்டை வெளிச் சுவரின் இடிபாடுகளுக்கிடையே புகுந்து, கோட்டையின் மேல் ஏறினர்.

ஏறிய ஆங்கிலேய வீரர்கள் உள்ளே குதிக்கத் தீவிரமாக முற்பட்டனர்.

முற்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டனர்!

கோட்டையின் மேல் ஏறிய வீரர்களைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர் கர்னல்

ஜேம்ஸ் வெல்ஷும், மேஜர் காலின்ஸ் மெக்காலே யும்!

எந்த ஒரு வீரனும் அவர்கள் கண்களுக்குப் புலப் படாதபடி எல்லா வீரர்களும் கோட்டைக்குள் இறங் கியதைக் கண்டு, களிப்பு மிக அடைந்தனர்!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தங்கள் வசம் ஆகிவிட்டதாகவே ஆனந்தம் மிகக் கொண்டனர் கர்னலும் மேஜரும்!

ஆனால்...

அதற்கு அடுத்து நடந்த சதி-பயங்கர நிகழ்ச்சி அவர்களது ஆனந்தத்தை அடியோடு அழித்து விட் டதுமல்லாமல், அவர்களைக் கதி கலங்கவும் வைத்தது!

அந்த அதி பயங்கர நிகழ்ச்சி?...

இடிபாடுகளுக்கிடையே ஏறிய ஒவ்வொரு வெள் ளையர் படை வீரனும், அவன் எந்த வேகத்தில் ஏறி ஞனே அதே வேகத்தில், கண்ணிமைக்கும் நேரத்தில் உடனுக்குடன் கோட்டைக்கு வெளியே தூக்கி எறியப் பட்டான்!

அப்படித் தங்கள் படைவீரர்கள், கோட்டைக்குள் குதித்தவர்கள், கோட்டைக்கு வெளியே தூக்கி எறியப்பட்டதைத் துடிக்கும் உள்ளத்துடன் பார்த்துத் திடுக்கிட்டுப் போனார்கள் வெல்ஷும், மெக்காலேயும்!

அவ்வாறு கோட்டைக்குள்ளிருந்து வெளியே தூக்கி எறியப்பட்ட வெள்ளையர் படைவீரர்களின் உடல்கள் செங்குருதிக் குழம்பால் குளிப்பாட்டப் பட்டிருந்தன!



சில நொடிகள் இடை வெளிக்குள் சிவப்பாக மாறிய வெள்ளையர்களின் உடல்களைக்கண்டு, அதிர்ச்சி யடைந்து, திக்பிரமையால் செயலற்று நின்றனர் தளபதியும், படைப் பிரிவுத் தலைவனும்!

உடனுக்குடன் கோட்டைக்குள் நடந்தது என்ன என்பதை அவ்விருவரால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை!

உண்மையில் நடந்தது என்ன?

கோட்டைக்குள் குதித்த வெள்ளையர் படை வீரர்கள் அனைவரும் ஈட்டியால் துளைக்கப்பட்டும், கத்தியால் குத்தப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும் படுகாயமுற்றனர்!

காலிழந்து, கையிழந்து, தலையிழந்து, கோட் டையின் மேலிருந்து கீழே வீழ்ந்தனர்!

பாஞ்சைக் கோட்டையின் விடுதலைப் புரட்சி வீரர்களால் வெள்ளையர் படை வீரர்கள் சின்ன பின்னப் படுத்தப்பட்டு, வீழ்த்தப்பட்டனர்!

கோட்டைக்கு வெளியே தூக்கி எறியப்பட்டனர்!

தொடர்ந்து கோட்டையின் மேல் கால் வைக்க முடியாத இக்கட்டான நிலை—எஞ்சி இருந்த வெள்ளையர் படை வீரர்களுக்கு ஏற்பட்டு விட்டது!

அதை நேர்முகமாகக் கண்டனர் மேஜர் மெக்கா லேயும் கர்னல் வெல்ஷும்!

அந்தப் படு பயங்கரமான ஆபத்திலிருந்து உடன டியாக விடுபடுவதைத் தவிர வேறு வழி புலப்பட வில்லை தளபதிக்கு.

உடனே படையைப் பின்வாங்க உத்தரவிட்டான்.

அப்படி அவன் உத்தரவிடுவதற்கு முன் அங்கே அவன் கண்ட காட்சி குலையை நடுக்கிக் குருதியை உறைய வைத்தது!

வாள், வேல், கத்திகளால் குத்தப்பட்டு சல்லடைக் கண்களாக மாறி, இரத்தச் சேற்றில் மிதந்த உடல்கள்!

கோட்டைச் சுவர் தகர்ந்த இடங்களில் இடிபாடுகளின் இடையே சிக்கி, நசுங்கிக் கிடந்த சடலங்கள்!

விடுதலை வேட்கை கொண்ட பாஞ்சாலங்குறிச்சிப் புரட்சி வீரர்கள், ஆங்கிலேயரின் அநியாயத் தாக்குதலால் ஆங்காரம் மிகக் கொண்ட மற்ற வீர மறவர்கள், பகைவர்களின் உயிர் போன சடலங்களையும், உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த உடல்களையும் ஆக்ரோஷத்துடன் ஈட்டிகளைப் பாய்ச்சி, மாறி மாறிக் குத்திக் கொண்டிருந்த கோரம்!

அந்த மாபெரும் பயங்கரக் காட்சிகள் கர்னல் ஜேம்ஸ் வெல்ஷியும், மேஜர் காலின்ஸ்மெக்காலேயையும் கதிகலங்க வைத்து, வெல வெலக்கச் செய்தன!

ஆங்கிலேயத் தளபதிகளின் இதயத்தைப் பிளக்க வைக்கும் அத்தகைய கோரக் காட்சிகள் ஒரு புறம் இருக்க, தங்கள் தாயகக் கோட்டையைத் தயக்கமின்றிப் பாதுகாக்கக் கொத்தளங்களின் மேல் நின்று கொண்டு ஈட்டிகளையும், வாட்களையும் சரமாரியாக



எறிந்தும், துப்பாக்கிகளால் சுட்டுக் கொண்டும் இருந்தனர் பாஞ்சாலங்குறிச்சி விடுதல் வேட்கை வீரர்கள்.

கோட்டையைச் சுற்றிலும் எங்கும் வெள்ளையரின் செங்குருதிப் பிணங்கள்! மரண ஓலம்! பயங்கரப் பேய்க் கூச்சல்!

விடுதலை வேட்கை வீரர்களின் வெற்றிக் களிப்புக் கூக்குரல்! ஓங்கார நாதம்! ஆங்கார ஓசை!

குழப்பம் அதன் உச்ச கட்டத்தை எட்டியது!

குழப்பம் உச்சகட்டத்தை எட்டியபோதுதான் எஞ்சியிருந்த தனது படையைப் பின் வாங்கும்படி உத்தரவிட்டான் மேஜர் மெக்காலே.

குழப்பத்திலிருந்து விடுபடவும், மேலும் தங்கள் உயிரை இழக்க விரும்பாமலும் பரங்கிப் படை வீரர்கள் தங்கள் தலைவரின் உத்தரவிற்கு உடனடியாக அடி பணிந்து, உற்சாகத்துடன் பின்வாங்கினர்.

அப்படிப் பின் வாங்கிச் சென்ற பிறகுதான் கோட்டை தகர்க்கப்பட்ட பிளவுக்குப் பக்கத்தில், அதை அருகில் சென்று தகர்த்த எட்டு பவுண்டர் பீரங்கியை விட்டு விட்டு வந்ததை அறிந்தனர்.

அதை உடனே மீட்டாக வேண்டியதன் அவசியத்தையும், அப்படி அதை மீட்காவிட்டால் அதனால் ஏற்படப்போகும் பயங்கர விளைவையும் அப்போது உணர்ந்தனர்.

அப்படி அவர்கள் அஞ்சி நடுங்கிய அந்தப் பயங்கர விளைவு?

ஆங்கிலேயரின் எதிரிகளான பாஞ்சாலங்குறிச்சிப் படையினர் அந்தச் சக்தி வாய்ந்த பீரங்கியைத் தங்கள் வசமாக்கிக் கொள்வார்கள்!

தங்கள் வசமாக்கிக் கொண்டு அதை இயக்கினால் ஆங்கிலேயரின் படைகள் இலவம் பஞ்சு சூறைக் காற்றில் பறப்பது போலப் பறந்து விடும் என்பதை அறிந்து துணுக்குற்றனர்! திகிலடைந்தனர்!

அந்தப் பீரங்கியை மீட்பது எப்படி?

சிந்தனையில் சிக்குண்டான் கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ்!

அவன் சிந்தனையில் சிக்குண்டவனாய், அந்தப் பீரங்கியை மீட்பது எப்படி என்று மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தான்.

அப்போது அதை மீட்கத் துணிச்சலோடு செயலில் ஈடுபட்டனர், முன் யோசனையுடைய ஆறு ராணுவ அதிகாரிகளும், ஐம்பது சிப்பாய்களும்!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைச் சுவரின் மேலிருந்து பாய்ச்சப்படும் ஈட்டி மழையையும் பொருட் படுத்தாமல், அவ்வதிகாரிகளும், சிப்பாய்களும் பீரங் கியை நெருங்கினர்!

அதை வெற்றிகரமாக நகர்த்திக் கொண்டும் வந்தனர்.

அது ஒரு சாகசக் காட்சி மட்டுமல்ல, பாஞ் சைப்பதி வீரர்களே மெச்சிப் புகழ்ந்த அதியற்புதக் காட்சியுமாகும்!



பீரங்கியின் மீட்புப் பணியில் ஈடுபட்டு, அதை வெற்றிகரமாகவும், துணிச்சலோடும் நகர்த்திக் கொண்டு வந்தபோது, ஒரு ராணுவ அதிகாரியும் பத் தொன்பது சிப்பாய்களும் பாஞ்சாலங்குறிச்சிப் படை வீரர்களின் ஈட்டி மழைக்கு இறையாயினர்!

அந்த இக்கட்டான நிலைமையில், ஆபத்தான தருணத்தில், துணிச்சலான காரியத்தில் ஒரு சிப்பாய் காட்டிய தைரியத்தையும், தியாகத்தையும் மெச்சத் தான் வேண்டும்.

அந்தச் சிப்பாயின் பெயர் நிக்கோலஸ் மாத்யூ ஸ்மித்!

எதிரிகளின் ஈட்டி மழைக்கிடையே ஈடற்ற துணிச்சலுடனும், எல்லையில்லா வீரத்துடனும் பீரங் கியின் அருகில் சென்ற முதல் வீரன் நிக்கோலஸ் மாத்யூ ஸ்மித் தான்!

அவன் மட்டும் அவ்வாறு அஞ்சா நெஞ்சத்துடன் எதையும் தாங்கும் இதயத்துடன் துணிந்து பீரங்கியை அணுகியிராவிட்டால் அவனுடன் சென்ற மற்ற அதிகாரிகளும், சிப்பாய்களும் பீரங்கியை நெருங்கத் துணிந்தே இருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்!

## பரங்கியர் கண்ட படு தோல்வி!

அது வரை நடந்த போரில் மேஜர் காலின்ஸ் மெக்காலேயின் படையினர் நான்கு அதிகாரிகளையும், நாற்பத்தொன்பது சிப்பாய்களையும் இழந்தனர்!

பதின்மூன்று அதிகாரிகளும், இரு நூற்று நாற்பது சிப்பாய்களும் படுகாயமுற்றனர்!

பாஞ்சாலங்குறிச்சி விடுதலைப் படை வீரர்களின் இழப்பைப் பற்றி மெக்காலேய்க்கோ, வெல்ஷுக்கோ எதுவும் தெரியாது!

அதுதான் எப்படித் தெரியும்?

ஆனால் ஆங்கிலக் கம்பெனிப் படையினரின் இழப்பிற்குப் பாஞ்சாலங் குறிச்சி விடுதலை வீரர்களின் இழப்பை ஒப்பிடும்போது, பின்னவரின் இழப்பு மிக மிகச் சொற்பமே என்பது பின்னல் தெரிய வந்தது!

பீரங்கிப் படையினரின் பேரிழப்பிற்குப் பின் வாங்கிய எஞ்சியப் படையினர் பாதுகாப்பான ஓர் இடத்தைக் கண்டுபிடித்து, அங்கு அணிவகுத்துச் சென்று ஓய்வெடுக்க முகாமிட்டனர்.

அப்படி முகாமிட்ட இடம் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்து சுமார் ஆயிரத்து ஐந்நூறு கெஜ தூரத்தில் இருந்தது.

ஆங்கிலேயப் படையினர் அமைத்துக் கொண்ட முகாமிற்கு நேர் எதிராக, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைச் சுவரோடு இணைந்த ஓர் உயரமான சார்புக் கூரை இருந்தது.

அந்தக் கூரை, முகாமிட்டிருந்த பகைவரான பரங்கிப் படை வீரர்களைப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை வீரர்களின் பார்வையிலிருந்து மறைத்தது.



அதன் காரணமாக ஆறுதலடைந்தனர் ஆங்கிலப் படை வீரர்கள்.

ஆறுதலடைந்த அவர்கள் தங்கள் வெடி மருந்துகளையும், குண்டுகளையும் மற்றும் முக்கியமான போர்த் தளவாடங்களையும் பாஞ்சைப் பதி வீரர்களின் பார்வைக்குப் படாமல் முகாமிற்குப் பின்னல் மறைத்து வைத்தனர்.

ஒவ்வொரு அதிகாரியும் ஒவ்வொரு போர் வீரனும் போரில் சமமாகத்தான் பங்கெடுத்துச் சண்டையிட்டனர்.

ஆனாலும் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்காவது வெற்றி கிடைக்காமற் போனது மட்டுமல்ல, படுதோல்வியும், பயங்கர விபத்துகளும், உயிர்ச் சேதமும் ஏற்பட்டன!

அவை யெல்லாம் அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையும், பலத்த அதிர்ச்சியையும் கொடுத்தன!

அவர்கள் அடைந்த தோல்வியும், விபத்துகளும் இனங் காண முடியாத ஒரு வித மரண அமைதியை முகாமில் நிலவச் செய்தன!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பஞ்சாகப் பறக்கடித்து விடலாம், வெறும் மண் கோட்டையான அதை ஒரு பீரங்கிக் குண்டால் தகர்த்துத் தரைமட்டமாக்கி விடலாம் என்ற அளவுக்கு மீறிய அதி தீவிர நம்பிக்கையுடன் படைத்திரட்டிக் கொண்டு வந்தனர் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷும், மேஜர் காலின்ஸ்மெக்காலேயும்!

ஆனால் தங்கள் படை கொஞ்சமும் எதிர்பாராத வகையில், கற்பனைகூடச் செய்து பார்த்திராத அளவில் அடைந்த படு தோல்வியால் மனங் குன்றி போனார்கள் கர்னலும், மேஜரும்!

அதனால் செய்வ தின்னதென் றறியாது அவர்கள் சிந்தை நொந்தார்கள்!

அவர்களைப் பொருத்த மட்டில் அவர்கள் அடைந்த தோல்வி முற்றிலும் புரிந்து கொள்ள முடியாததாகவும், அவர்கள் மூளைக்கே எட்டாத காரணத்தைக் கொண்டதாகவும் இருந்தது!

தங்கள் தாக்குதலையும், கோட்டையைத் தகர்க்க எடுத்த முயற்சியையும் பாஞ்சைக் கோட்டையின் விடுதலைப் புரட்சி வீரர்கள் சமாளித்து, முறியடித்து, வெற்றி கண்ட விதமும், மேஜர் மெக்காலேயக்கும், கர்னல் வெல்ஷுக்கும் மட்டுமல்ல, அவர்களுடைய படை வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் புரியாத புதிராகவும், மர்மம் மண்டிய வியப்பாகவும் இருந்தன!

அனைத்திற்கும் மேலாக, துப்பாக்கிகளின் துணையுடன் கோட்டைச் சுவரின் மேல் ஏறி உள்ளே குதித்த வீரர்கள், உடனுக்குடன் ஈட்டிகளால் குத்தப்பட்டு, வாட்களால் வெட்டப்பட்டு, துப்பாக்கிகளால் சுடப்பட்டு வெளியே தூக்கி எறியப்பட்டது— அத்தனையும் கண்ணிமைக்கும் நேரத்தில்—எவ்வாறு நிகழ்ந்தது என்பது திகைப்பைத் தரத்தக்கதாக இருந்தது அவர்களுக்கு!



பாஞ்சாலங்குறிச்சிப் படை வீரர்களுக்கு முன் ஆங்கிலேயரின் துப்பாக்கிகள் சுடத் திறனற்றுச் செயலற்றுப் போய் விட்டனவா?

அன்றி, துப்பாக்கியால் சட்டென்று சுடுவதற்குக் கூட அவர்கள் நேரம் கொடுக்காமல் கண்ணிமைக்கும் நேரத்தில் துப்பாக்கி வீரர்களை ஈட்டிகளாலும், வாட்களாலும் தாக்கிக் குற்றுயிரும் குலையுயிருமாக வீழ்த்தினரா, பாஞ்சைப்பதி வீரர்கள்?

வியப்பைத்தான் அளித்தது பரங்கிப் படைத் தளபதிகளுக்கும், அதிகாரிகளுக்கும், போர் வீரர்களுக்கும்!

அப்படிப் பாஞ்சைப்பதி வீரர்கள் கண்ணிமைக்கும் நொடிப்பொழுது நேரத்தில் ஆங்கிலப் படை வீரர்களுடன் எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டு,அவர்களைப் படுகாயப் படுத்தி, கோட்டைக்கு வெளியே தூக்கியெறிய வேண்டுமென்றால் அவர்கள் எத்தகைய எச்சரிக்கையுடன், எப்படிப்பட்ட முன்னேக்குடன், போர்த் திறன் மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணி வியந்தனர் வெள்ளையர்!

மேலும், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பகைப் படைகளின் பாதகத் தாக்குதலிலிருந்து பாது காக்க முயன்ற எந்த ஒரு விடுதலைப் படை வீரனும் தன்னைக் கோட்டைக்கு வெளியே காட்டிக் கொள்ள வில்லை!

எங்கு நோக்கினும் ஈட்டிகளின் மின்னல் வீச்சு ஒளி மயம்!

போர் மேகம் சூழ்ந்த அந்த இடத்தில், கார்மேகத்தினிடையே பளிச்சிடும் மின்னலைப் போல, ஈட்டிகள் பளிச்சிட்டு மின்னின!

வீரர்களின் தலைகளுக்குப் பதில் வேல்களின் கூர் முனைகள் தென்பட்டன, வெள்ளையரின் கண்களுக்கு!

அப்படியும், எந்த வீரர்கள் தங்களைக் கோட்டைச் சுவருக்கு மேல் காட்டிக் கொண்டார்களோ, அவர்களையெல்லாம் கண்ட மாத்திரத்தில் உடனுக்குடன் பரங்கிப் படையினர் சுட்டு விழ்த்திக் கொண்டிருந்தனர்!

அப்படிச் சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்த போதிலும், மாறி மாறி, அலை அலையாய்ப் புரட்சி வீரர்கள் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதைப் போலக் கிளம்பி வந்து கொண்டே இருந்தனர்!

மேலும், ஒரு விதமான பயங்கரச் சத்தமும், ஆங்காரக் கூச்சலும், ஆவேசக் கூக்குரலும் கோட்டைக்குள்ளிருந்து கேட்ட வண்ண மிருந்தன!

பாஞ்சாலங்குறிச்சி வீரர்களிடமிருந்து கிளம்பிய அந்தச் சத்தமும், கூச்சலும், கூக்குரலும் பகைவர் படையினர் பின்வாங்கிய பின்னர் தான் ஓய்ந்தன!

ஒரு வேளை அக் கூச்சலும், கூக்குரலுமே ஆங்கிலப் படையினரை அச்சுறுத்தி, போர்க்களத்திலிருந்து விரட்டி, பின் வாங்கச் செய்து, முகாமுக்குத் திரும்பச் செய்தன போலும்!

முகாமுக்குத் திரும்பிய கம்பெனிப் படையினர் மாலை வரை ஓய்வெடுத்துக் கொண்டனர்.



மாலை மணி ஐந்து...

துப்பாக்கிப் படையினரை அணிவகுத்து நிறுத்தினான் மேஜர் காலின்ஸ்மெக்காலே.

அணிவகுப்பைப் பார்வையிட்ட பின், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை நோக்கி அவர்களை அணி அணியாக அனுப்பினான்.

கோட்டையைத் தகர்த்தும், கோட்டைக்குள் புகுவதில் தோல்வி கண்ட வெள்ளையர், துப்பாக்கியின் துணை கொண்டு பாஞ்சைப்பதி விடுதலைப் புரட்சி வீரர்களுடன் போரிட்டு, அவர்களை அடிபணிய வைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டதால் ஏற்பட்டதன் விளைவே, கோட்டையை நோக்கி மேஜர் மெக்காலேயால் அனுப்பப்பட்ட துப்பாக்கிப் படையினரின் அணிவகுப்பு!

துப்பாக்கிப் படையினர் கோட்டையை அரை வட்டமாகச் சுற்றி நின்று துப்பாக்கியால் சுடும் தங்கள் கடமையைக் கண்ணும் கருத்துமாகச் செய்தனர்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்தும், வெளியில் நின்ற வெள்ளையரின் துப்பாக்கிப் படையினரை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் கிளம்பி வந்தன!

துப்பாக்கி வேட்டுகள் இரு சாராரிடமிருந்தும் சரமாரியாக முழங்கின!

அதே சமயம் கோட்டையின் தென்புறமும் கடுமையான போரில் இறங்கியிருந்தன, கேப்டன் சார்லஸ் டிராட்டரின் படைகளும், எட்டப்பனின் ஆயிரம் வீரர்கள் கொண்ட எட்டயபுர சமஸ்தானப் படைகளும்!

ஆயினும் அம் முயற்சியில் ஆங்கிலேயர் கண்டது படு தோல்வியே!

கோட்டையைச் சேர்ந்த துப்பாக்கி வீரர்கள் கம்பெனிப் படையைச் சேர்ந்த துப்பாக்கிப் படையினரை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில், அங்கிருந்த மற்ற அறப்போர் வீரர்கள் ஆங்கிலேயப் படையினர் மேல் ஈட்டிகளை ஒன்றன் பின் ஒன்ருக விரைந்து வீசியவண்ணம் இருந்தனர்.

கோட்டைக்குள்ளிருந்து ஈட்டி மழை எப்படிப் பெய்கிறது என்பதை அறியமுடியாமல் திணறித் திக்குமுக்காடினர் கம்பெனியைச் சேர்ந்த துப்பாக்கிப் படை வீரர்கள்!

துப்பாக்கிச் சண்டை, அந்தி சாய்ந்து, இருள் அவ்விடத்தைக் கவ்விப் பிடிக்கும் வரை நடைபெற்றது!

பாஞ்சாலங்குறிச்சிப் போர் வீரர்களின் துப்பாக்கிகளுக்கும் ஈட்டிகளுக்கும் எண்ணற்ற பகைப் படை வீரர்கள் இரையாயினர்!

அப் போரில் அதிகம் இறந்தவர்கள் வடபுறம் போரில் ஈடுபட்ட துப்பாக்கிப் படை வீரர்களே.

கோட்டையின் தென்புறம் போரில் இறங்கியிருந்த கேப்டன் டிராட்டரின் படைகளிலும், எட்டயபுரத்துப் படையினரிலும் கணிசமான வீரர்கள் விண்ணுலகெய்தினர்!

இறுதியில் கணிசமான இழப்புடன் கம்பெனியாரின் துப்பாக்கிப் படையினரும், தென்புறத்துப் படையினரும் பின் வாங்க நேர்ந்தது!

'வெற்றிகரமாக' முகாமுக்குத் திரும்பினர்!



# வெள்ளைக் கொடி காட்டினர் வெள்ளையர்!

அன்று—ஏப்ரல் மாதம் முதல் தேதி—முழுவதும் போரில் ஈடுபட்ட நாநூற்று இருபது ஆங்கிலேயப் போர் வீரர்களில் நாற்பத்தாறு பேர்களால் மட்டுமே போர் முனையிலிருந்து எவ்விதக் காயமுமின்றி முகாமுக்குத் திரும்பி வர முடிந்தது!

அந்த முதல் நாள் போரிலேயே அவர்களில் நூற்று ஆறு வீரர்கள் கொடூரமாகக் கொல்லப் பட்டனர்.

அந்தப் பேரிழப்பு—நான்கில் ஒரு பகுதியினரின் இழப்பு—மீதம் இருந்த வீரர்களுக்கு மனே வலிமையை இழக்கச் செய்தது! மனே சஞ்சலத்தை உண்டாக்கியது! அவர்களது உற்சாகத்தை உருக் குலைத்தது!

எந்த நேரத்தில் ஒருவித திட நம்பிக்கையும், தைரியமும், உத்வேகமும் வரவேண்டுமோ அந்த நேரத்தில் அத்தகைய பேரிழப்பு அவர்களிடையே இனம் காணமுடியாத ஒரு வகைக் கோழைத்தனத்தையும், பெரும் குழப்பத்தையும் விளைவித்துவிட்டது!

அத்தகைய கோழைத்தனமும், குழப்பமும் கம்பெனிப் படைகளின் தளபதியும், பகைப் பிரிவுத் தலைவர்களும் சற்றும் எதிர்பாராதனவாக இருந்தன!

அதிலிருந்து ஒன்று மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது அவர்களுக்கு.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் வட, தென் புறத் தாக்குதல்களைத் தக்க முறையில் எதிர்த்துப் போராடி, வெள்ளையர் படையினரைத் தோல்வியுற வைத்து, கணிசமான இழப்பிற்குப் பின்னர் அவர்

களைப் பின் வாங்கச் செய்ய வேண்டுமென்றால், பாஞ்சாலங்குறிச்சிப் படையின் அளவு எத்தகையது? படை வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவு? போரில் அவர்கள் காட்டிய வீர தீரத் திறமை என்ன? என்பதெல்லாம் வெள்ளையருக்கு ஒருவாறு புரிந்தது!

அவ்வாறு புரிந்தது மட்டுமல்ல, அற்பமானது என்று ஆங்கிலேயப் படை வீரர்களால் அலட்சியமாகக் கருதப்பட்ட அச் சிறிய கோட்டை—வெறும் மண்ணாலான பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை—அவ்வளவு பெரிய படையைத் தன்னகத்தே கொண்டிருந்ததா என்கிற வியப்பையும் விளைவித்தது!

அத்துடன், பாஞ்சைப்பதிப் படையினரின் போர்த் திறனும், பகைவரைத் தோல்வியுறச் செய்யும் போர்த் தந்திரமும், தங்கள் தாயகக் கோட்டையைக் காக்கும் மனோதிடமும் விரிவாக விளங்கியது வெள்ளையருக்கு.

மேலும் தாங்கள் அடைந்த தோல்விக்கு, முக்கியமாகத் துப்பாக்கிப் படையினர் அடைந்த தோல்விக்கும், கணிசமான எண்ணிக்கை கொண்ட துப்பாக்கி வீரர்கள் கோட்டைப் படை வீரர்களால் விண்ணுலகுக்கு அனுப்பப் பட்டதற்கும் உண்டான காரணத்தை ஒருவாறு புரிந்துகொள்ள முடிந்தது வெள்ளையர் படையினரால்.

அது என்ன காரணம்?

பாஞ்சாலங்குறிச்சிப் படை வீரர்கள் கோட்டைக் குள்ளிருந்தவாறு போரிட்டனர்.

ஆங்கிலேயப் படையினரோ, வெட்ட வெளியில் கோட்டைக்கு வெளியே நின்று போரிட்டனர்!



கோட்டைக்குள்ளிருந்து துப்பாக்கியால் சுட்டவர்களும், ஈடில்லாத் திறமையுடன் ஈட்டியை வீசியவர்களும் மறைந்து நின்று, பதுங்கியிருந்தே, கோட்டைக்கு வெளியே பகிரங்கமாக நின்ற பரங்கிப்படை வீரர்களை நோக்கிப் போரிட்டனர்!

மறைந்து நின்ற அவர்களுடைய நேரடித் தாக்குதல் வெள்ளையர் படை வீரர்களில் பலரைக் கொன்று குவித்தது!

ஆனால்...வெள்ளையர் படை வீரர்கள் எவ்வளவு முயற்சி எடுத்தும், எத்தகைய சிரமப்பட்டும், துப்பாக்கியால் சுட்டாலும், பாஞ்சைக் கோட்டை வீரர்களைக் கொல்லவோ, அதிகம் காயப்படுத்தவோ முடியவில்லை!

காரணம், அம் மறவர் குல வீரர்கள் கோட்டைக் கொத்தளங்களுக் குள்ளும், அலகங்களுக் குள்ளும் மறைந்து நின்று தாக்கிப் போரிட்டதே ஆகும்!

அது மட்டுமன்று...

பாஞ்சைப் பதியினரின் பண்புடன் கூடிய பாங்கான செயல் ஒன்று பகிரங்கமாகப் புலப்பட்டது பரங்கியருக்கு!

மறத் தமிழரின் மாண்பு மிக்க, மனிதாபிமானம் மிகுந்த நிகழ்ச்சி ஒன்று நேரிடையாக வெளிப்பட்டது வெள்ளையருக்கு!

தமிழரின் தகைமை சான்ற தனிப் பெரும் கனிவுத் தன்மை ஒன்று கண்கூடாகத் தெரிந்தது கம்பெனிப் படையினருக்கு!

அது...?

போரில் பெரும் தோல்வி கண்டு, பின் வாங்கி, மருண்டோடி, தொலைவில் சென்று முகாமிட்ட வெள்ளையர், அன்று மாலை அந்தி வந்த நேரத்தில் போர் நிறுத்தம் செய்தனர்.

கோட்டைக்குள்ளும், கோட்டைக்கு வெளியேயும், போரில் படுகாயமுற்று வீழ்ந்த வீரர்களையும், உயிர் துறந்த சிப்பாய்களையும் தங்கள் எதிரிகளான பாஞ்சாலங்குறிச்சியாரிடமே விட்டு வைக்க விரும்பவில்லை வெள்ளையர்.

அவர்களைக் கோட்டையிலிருந்து அப்புறப்படுத்தித் தங்கள் முகாமுக்குக் கொண்டு சென்று, காயமுற்றவர்களுக்குச் சிகிச்சையளிக்கவும், உயிர் துறந்தவர்களை ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யவும் ஆங்கிலேயர் விழைந்தனர்.

அதற்காகப் பாஞ்சைப் பதியாரின் அனுமதி கோரும் வகையில் வெள்ளை நிறச் சமாதானக் கொடியைக் காட்டி சமாதானம் வேண்டினர்கள்.

அதற்குப் பாஞ்சாலங்குறிச்சித் தலைவரான ஊமைத்துரையும், பாஞ்சைக் கோட்டை வீரர்களும் மன நிறைவோடு இணங்கினர்.

அவர்கள் அவ்வாறு இணங்கியதால் மட்டும் மகிழ்ச்சியும், மன நிறைவும் அடைந்து விடவில்லை ஆங்கிலேயர்.

காரணம் இதுதான்:

அங்குக் கிடந்த உடல்களையும், சடலங்களையும் எடுத்து வரக் கோட்டைக்குச் செல்ல வேண்டும்.

சென்று கோட்டைக் காவல் வீரர்களிடம் அனுமதி பெறவேண்டும்.



கோட்டை அதிபதியின் உத்தரவு காவல் வீரர்கள் வாயிலாக வர வேண்டும்.

அப்படி அனுமதி கிடைத்தாலும், எந்த விதத் தடையுமின்றி, எதிர்த் தாக்குதல் ஏதுமின்றி உடல்களையும் சடலங்களையும் எடுத்து வர வேண்டும்.

அதற்கு அனுமதி கொடுப்பார்களோ, அன்றி மறுத்துக் கூறி வெருட்டி விரட்டுவார்களோ பாஞ்சைப் பதியார் என்கிற அச்சம் ஆங்கிலேயரின் உள்ளத்தில் ஒரு மூலையில் தோன்றியது!

எதற்கும் முயன்று பார்க்கலாம் என்ற நப்பாசையில், கேட்டுப் பார்க்கலாம் என்ற தயக்கம் நிறைந்த கருத்தில்,சில அதிகாரிகளையும், சிப்பாய்களையும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு அனுப்பி வைத்தான் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்!

அப்பொழுதுதான் கோட்டை வீரர்களின் தனிப் பண்பும், கருணை உள்ளமும், நீதிச் செயலும் வெளிப்பட்டன.

## பாஞ்சைப் பதியினர் காட்டிய பரிவு!

வெள்ளை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்கள் அன்பு கூர்ந்து கேட்டுக்கொண்டதற்கேற்ப,எந்த விதமான நிபந்தனையும் விதிக்காமல், எந்த ஓர் இடையூறும் செய்யாமல், படுகாயமுற்று, உணர்விழந்து கிடந்த வீரர்களையும், உயிர் துறந்து, அலங்கோலமாகக் கிடந்த சிப்பாய்களின் சடலங்களையும், பரங்கியரான பகைவரிடம் ஒப்படைத்தனர் பாஞ்சைப் பதியினர்!

அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்களைத் தாக்க வந்த துரோகிகள் என்பதையும், தங்கள் தாயகக் கோட்டையைப் படுபாதக எண்ணத்துடன், அக்கிரமமாக முற்றுகையிட்டுப் பிடிக்க வந்த பகைவர்கள் என்பதையும், கோட்டையைப் பீரங்கிகளைக் கொண்டு வெடி வைத்துத் தகர்த்த தறுகண் மிலேச்சர் என்பதையும், வர்ம நோக்குடன் நினைத்துப் பார்க்கவில்லை, பாஞ்சைப் பதியின் அதிபரும், மற்றும் வீரர்களும்.

அந்தச் சமயமும், சந்தர்ப்பமும், சூழ்நிலையும் பரங்கிப் பகைவரைத் தாக்குவதற்குத் தகுந்த தருணமாய் இருந்தும்கூட, அதற்காக எந்த விதமான சிறு முயற்சியும் அவர்கள் எடுக்கவில்லை.

அதுமட்டுமல்லாமல், காயமுற்றவர்களையும், சடலங்களையும் எடுத்துச் செல்ல ஆங்கில அதிகாரிகளுக்கு அனுமதியும் அளித்தனர்.

அனுமதி அளித்ததோடு நின்று விடவில்லை பண்புள்ளம் கொண்ட பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள்.

அதற்குத் தங்களால் இயன்ற உதவிகளையும் மனமுவந்து செய்து கொடுத்தனர் கோட்டை வாசிகள்.

அதிலிருந்து அவர்களுடைய உயர்ந்த மனிதப் பண்பையும், மிகப் பெருந்தன்மையுள்ள மனதாபி மானத்தையும், மெச்சத் தகுந்த கனிவு மனிதத்துவத்தும் வெள்ளையரால் நன்கு உணர முடிந்தது!

உணர முடிந்தும் என்ன பயன்?

கோட்டையை முற்றுகையிடும் எண்ணத்திற்கு முடிவு கட்டினார்களா? இல்லை!



அதைத் தகர்த்தெறியும் தீர்மானத்தைத் தங்கள் எண்ணத்திலிருந்த தகர்த்தெறிந்தார்களா? இல்லை!

அதை அப்படியே உருப்படியாக விட்டு விட்டுச் செல்ல நினைத்தார்களா? இல்லவே இல்லை!

அதற்கு மாறாகத் தங்கள் தாக்குதலைத் தீவிரமாக்கத் தீர்மானித்தார்கள் தறுக்கர்களான மிலேச்சர்கள்!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை அதன் விடுதலைப் புரட்சி வீரர்கள், பரங்கிப் பகைவரின் தாக்குதலினின்று பாதுகாத்துச் சமாளித்த விதத்திலிருந்து, பரங்கியர் அக் கோட்டையைத் தாக்கித் தகர்க்க எடுத்துக் கொண்ட போர் ஆயத்தங்கள் போதுமானதல்ல என்பதை அவர்கள் நன்கு அறிந்தனர்.

தன்னுடைய படை வீரர்கள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை வீரர்களிடம் அனுபவித்த ஒவ்வொரு இன்னலையும் நன்கு உணர்ந்த மேஜர் மெக்காலே ஒரு முடிவான, அனுபவ பூர்வமான தீர்மானத்திற்கு வந்தான்.

தன் தீர்மானத்தைக் கர்னல் வெல்ஷிடம் கூறினான்.

கோட்டையை முழுமையாக, நாற் புறமும் சுற்றிச் சூழ்ந்து, முற்றுகை யிட்டுத்தான் தாக்கித் தகர்க்க முடியுமே தவிர, ஒவ்வொரு பக்கமாகத் தாக்கித் தகர்ப்பது, போர்த் திறனும், தந்திர சாமர்த்தியம் மிக்க பாஞ்சைக் கோட்டை வீரர்களைப் பொருத்த மட்டில் முடியாத செயல் என்பதே கர்னல் வெல்ஷும், மேஜர் மெக்காலேயும் கண்ட உண்மையும், கொண்ட தீர்மானமும் ஆகும்!

எனவே, கோட்டையைச் சுற்றிலும் முழுமையாக ஒரே சமயத்தில் தாக்குவதற்குத் திட்டமிட்டனர்.

அந்தத் திட்டத்திற்குத் தேவையான பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடி மருந்துகள், மற்றும் தாளவாடங்கள் முதலானவற்றைச் சேகரித்து வைத்தனர்.

படைக் கருவிகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கும், படை வீரர்கள் தங்குவதற்கும் வசதியான முகாம் ஒன்றையும் உடனே அமைத்தனர் ஆங்கிலேயர்.

அவர்கள் அமைத்த அந்த முகாமிற்குக் கீழ்ப்புறம் ஒரு குளம் இருந்தது.

அந்தக் குளத்தில் நல்ல குடிதண்ணீரும் நிறைந்திருந்தது.

ஆகவே தண்ணீர்ப் பிரச்னைக்கு இடமில்லாமற் போய்விட்டது.

அந்த முகாம் அவர்கள் ஏற்கனவே முகாமிட்டிருந்த இடத்திற்குச் சுமார் நாநூறு கெஜம் தள்ளி அமைக்கப்பட்டது!

## கோட்டைத் தலைவன் கண்ணீர் விட்டான்!

**போ**ருக்கான அதி தீவிரம் மிகுந்த முன்னேற்பாடுகளெல்லாம் முடிவடைந்தன.

ஏப்ரல் மாதம் இரண்டாம் தேதி அமைதியாகக் கழிந்தது, பரங்கியருக்கும் பாஞ்சைப் பதி வீரர்களுக்கும்,

நடத்தப் போகும் முழு மூச்சான தாக்குதலுக்காகத் தங்களுக்குப் புத்துணர்ச்சியும், புது பலமும்



பெறப் பரங்கிப் படை வீரர் அனைவரும் அன்று பரிபூரண ஓய்வெடுத்துக் கொண்டனர்.

இடையில் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷுக்கு ஒரு யோசனை தோன்றியது!

கோட்டையைச் சுற்றிலும் முற்றுகையிடுவதற்கும், தாக்கித் தகர்ப்பதற்கும் முன், பாஞ்சாலங்குறிச்சி மன்னனும், கோட்டை அதிபதியுமான ஊமைத்துரைக்குத் தூது அனுப்பி, அவரைத் தங்களுக்கு அடிபணியும் படியும், கோட்டையைத் தங்கள் வசம் ஒப்படைத்து விடும்படியும், அப்படித் தங்கள் வசம் கோட்டையை ஒப்படைக்கா விட்டால் கம்பெனிக்கு வரி செலுத்தி, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு அதிபதியாக இருந்து, பாஞ்சைப் பதியை ஆளும்படியும் கேட்டுப் பார்க்க விழைந்தான் வெல்ஷ்.

அதே போலத் தூதுவனை அனுப்பினான்.

சென்ற தூதுவன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைப் பாதுகாப்பு வீரர்களிடம் தான் தூது வந்த செய்தியைச் சொன்னான்.

பாதுகாப்பு வீரன் தூதுவன் வந்த சங்கதியைக் கோட்டை அதிபதி ஊமைத்துரைக்குச் சொல்லி அனுப்பினான்.

தூதுவனை அழைத்து வரும்படி உத்தரவு வந்தது ஊமைத்துரையிடமிருந்து.

உடனே வீரர் இருவர் தூதுவனை அழைத்துக் கொண்டு கோட்டை அதிபதியிடம் சென்றனர்.

தூதுவன் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷின் செய்தியை மெல்ல மெல்லத் தயக்கத்தோடு எடுத்துச் சொன்னான் ஊமைத்துரையிடம்.

103099

தூதுவன் சொன்னதைக் கேட்ட ஊமைத்துரை சீறி எழுந்தார் !

அவர் அருகில் இருந்த துரைசிங்கம் துடித்து எழுந்தார் !

“வெள்ளையனுக்கு எவ்வளவு வீம்பு இருந்தால் எங்களை அவர்களுக்கு அடிபணியும்படியும், கோட்டையை அவர்கள் வசம் ஒப்படைத்து விடும்படியும் தூதனுப்பியிருப்பான் ?” என்று கோபத்தால் கொதித்துக் கத்தினர்.

“அப்படிக் கோட்டையைக் கொடுமைகள் செய்யும் கம்பெனியார் வசம் ஒப்படைக்கா விட்டால் வரி கட்ட வேண்டுமாமே வரி ! சொந்த நாட்டானிடம் எங்கிருந்தோ, எதற்காகவோ வந்த வெளி நாட்டான் வரி கேட்பதா ?” என்று சீறினர் சிவத்தையா என்னும் துரைசிங்கம்.

அப்பொழுது அங்கிருந்த கோட்டை அதிகாரிகள் சிலர் ஊமைத்துரை, துரைசிங்கம் ஆகியோரின் கோபத்தைக் கண்டு கலங்காமல் கூறினர் :

“பிரபு, கோட்டையின் ஒரு பகுதியைக் கம்பெனிப் படையினர் தகர்த்துவிட்டனர். இனி நாம் போராடி எப்படி வெற்றி காணப் போகிறோம்?”

“அதற்காக ? கோட்டையை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு, அவர்களுக்கு அடிமையாகி விடலாம் என்று உபதேசம் செய்கிறீர்களா ?” என்று சினந்து வினவினர் ஊமைத்துரை.

கூறிவிட்டு, கீழே கிடந்த உமியைத் தன் கையில் எடுத்தார்.



வாயால் அதை‘ஃபு’ என்று ஊதிக் காண்பித்தார்.

பிறகு, “எத்தர்களின் பட்டாளங்கள் எத்தனை வந்தாலும் சரி ! பரங்கியர் எத்தனை பீரங்கிகளை வைத்துக் கொண்டு போரிட்டுக் கோட்டையைத் தகர்க்க முற்பட்டாலும் அவர்களை ஊதித் தகர்த்துத் துரத்தி விடுவேன் !” என்று கூறி, உமியை ஊதிக் காண்பித்ததன் பொருளை உணர்த்தினர் ஊமைத் துரை.

அப்போது அவருடைய மாமன் ஊமைத்துரையை மெள்ள அணுகினர்.

அணுகியவர் சொன்னர் :

“அப்பா ஊமைத்துரை ! போரிடும் முன் தன் வலிமையையும், மாற்ருன் வலிமையையும் கருத்தில் கொண்டு, இரண்டு வலிமைகளையும் சீர் தூக்கிப் பார்த்துப் போரிட வேண்டும் என்பது வள்ளுவர் வகுத்துத் தந்த வாக்கு...”

“சரி...அதற்காக ?”—இடை மறித்தார் ஊமைத் துரை.

“அந்த வாக்கைக் கொஞ்சம் மனதில் கொள் !”

“கொண்டு?...என்ன செய்யச் சொல்கிறீர்கள்?”

“மாற்ருன் அதிக வலிமை பெற்றுவிட்டான். இதுவரை நடந்த ஒருநாள் போரில் நமக்கும் இழப்பு அதிகம்தான்!”

“ஆமாம் !...அதனல் ?”

“இன்னும் வீணே நாம் போரிட்டு மாள்வதை விட, வெள்ளையருக்கு வரி கட்டுவதாக வாக்குக் கொடுத்து விட்டு...”

"கொடுத்து விட்டு?"

"மீண்டும் பாஞ்சைப்பதியை நாம் ஆள அவர்களிடமிருந்து வாக்குப் பெறுவோம்!"

"சபாஷ் மாமா, சபாஷ்! உங்கள் உபதேசம் வெகு நன்ருக இருக்கிறது! நம் சொந்த நாட்டின் மீது அநியாயப் போர் தொடுக்கும் அன்னியனும் ஆங்கிலேயனுக்கு அடிவருடிகளாக மாறி, அடிமை வாழ்வு வாழ வெண்டுமென்று உங்களுக்கு ஆசை தோன்றி விட்டதா?"

"நான் அப்படிச் சொல்லவில்லையப்பா, குமாரசாமி! ஆனல்..."

"ஆனல்...என்ன மாமா? உங்களுக்கு இத்தனை வயதாகியும் இன்னும் உலகத்தை விட்டுப் போக மனமில்லை! ஆங்கிலேயனுக்கு அடிமையாக வாழ்வதை விட, நடக்கும் போரில் வீர மரணம் எய்துவதையே நான் விரும்புகிறேன்! கோட்டையின் விடுதலை வேட்கை கொண்ட வீரர்களும் அதையே விரும்புகின்றனர். அப்படி அதை விரும்பாதவர்களும், உங்களுக்கும் விருப்பம் இல்லையென்றல் நீங்களும், இக்கோட்டையை விட்டு வெளியேறி, வெள்ளையரின் அடிவருடிகளாக மாறி, உங்கள் இஷ்டப்படி இன்பமாய் வாழுங்கள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை!"

"என்ன பேச்சு பேசிவிட்டாயப்பா நீ? நான் சாவது பற்றி அஞ்சிக் கூறவில்லை. ஆனல்..."

"சொல்லுங்கள் தொடர்ந்து."

"மீண்டும் பாஞ்சைப் பதியும், அதன் அரசும் துளிர்த்து வளரவேண்டும் என்ற நோக்கத்தில்தான் கூறினேன். அதை நீ தவருகப் புரிந்து கொண்டாய்!"



"கண்களைக் கூரான கத்திக்கு அடகு வைத்து விட்டு, அழகிய சித்திரத்தை வாங்குவது போல, நம் மானத்தை ஆங்கிலேயனுக்கு அடகு வைத்து விட்டு, மாற்ருனிடம் மண்டியிட்டு, அவனுக்கு அடிமைப்பட்டு அவன் தரும் பிச்சையாகப் பாஞ்சைப் பதியைப் பெற்று ஆள வேண்டும் என்கிறீர்களா?"

"அதல்ல நான் சொல்வது"

"பின்னே எது, மாமா?"

"ஆங்கிலேயனுக்கு நாம் அடிபணிய வேண்டாம்! அவர்களுக்கு அனுசரணையாக மாறி..."

"வரி கட்டி, கோட்டையை அவர்களுக்கு விட்டுக் கொடுத்து, அவர்கள் ஆணைப்படி கைகட்டி, வாய்ப் புதைத்து, தலை தாழ்த்தியபடி நாம் ஆளவேண்டும்! நீங்கள் சுற்றிச் சுற்றி அடிமையாகும் பேச்சுக்குத் தானே வருகிறீர்கள்?"

"இல்லையப்பா! பொறுமையாகக் கேள்! நாம் ஆங்கிலேயருக்கு அனுசரணையாக மாறி, அவர்கள் ஆதரவைப் பெற்று ஆளலாம்; வாழலாம்! ஆனல், வரி செலுத்தும்படி அவர்கள் நம்மை வற்புறுத்தக் கூடாது என்றும், இங்குள்ள யாரையும் கைது செய்யக் கூடாது என்றும் தூதுவனிடம் சொல்லி அனுப்பு!"

அதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்தார் ஊமைத்துரை.

சிரித்தபின் சொன்னர் :

"வேடிக்கையாக இருக்கிறது உங்கள் பேச்சு. அவர்களுக்கு அனுசரணையாக மாறுகிறேம், சரி! அவர்கள் ஆதரவைப் பெற்று ஆளுகிறேம், சரி! ஆனல் வரி செலுத்த மாட்டோம் என்றல் வெள்ளை

யன் கேட்பானு?...அதற்குச் சுருக்கமாக, தூதுவன் மூலம் சொல்லியனுப்பிய நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொள்ள மாட்டோம்; போரைத் தொடர்ந்து நடத்துங்கள் என்று பதில் சொல்லி அனுப்பிவிடலாமே!''

ஊமைத்துரையின் அந்த வார்த்தைகள் அவருடைய மாமாவின் வாயை அடைத்து, அவரை ஊமையாக்கிவிட்டது!

தூதுவனிடம் சொல்லியனுப்பினுர் ஊமைத்துரை:

''ஆங்கிலேயரின் நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொள்ளமாட்டோம். போர் தொடரட்டும்!''

வந்த தூதுவன் அந்த இடத்தை விட்டகன்றுன்.

உடனே ஊமைத்துரை தன் குல தெய்வமான ஜக்கம்மா தேவியின் கோயிலை நோக்கி நடந்தார்.

கோயிலை அடைந்து, தேவியின் முன் நின்று வணங்கினுர்.

கண்களை மூடி தேவியைத் தொழுதார்.

மூடிய கண்களின் இமைகள் வழியாகக் கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது!

ஊமைத்துரை ஏன் கண்ணீர் விட்டார் என்பது அவருக்கு மட்டுமே விளங்கிய விஷயமாகும்!

## முகாமை நோக்கி குண்டு மாரி!

**பா**ஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்து திரும்பி வந்த தூதுவன் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷிடம் தான் கேட்ட அனைத்தையும் ஒன்று விடாமல் எடுத்துச் சொன்னுன்.



போர் தொடரட்டும் என்று ஊமைத்துரையே கூறுரைத்த பிறகு கர்னல் வெல்ஷால் மெத்தனமாக இருக்க முடியுமா?

அன்று மாலை மங்கி, இருள் கவிய ஆரம்பித்தது.

வெள்ளையர் படை வீரர்கள் உணவருந்த உட்கார்ந்தனர்.

அன்றெல்லாம் அவர்கள் நன்கு ஓய்வெடுத்திருந்ததால், உல்லாசமாக உரையாடியவாறு உணவருந்தத் தொடங்கினர்.

முகாம் எங்கும் களிப்பும் குதூகலமும் குடி கொண்டிருந்தன!

முந்தின நாள் போரில் அடைந்த தோல்வியையும் மறந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி யிருந்தனர்.

அந்தக் களிப்பும் குதூகலமும், மகிழ்ச்சி ஆரவாரமும் மறு நாள் நடக்கப் போகும் பெரும் போருக்கு அவர்களை ஆயத்த மாக்கிப் புத்துணர்ச்சி யடையச் செய்யத்தான் போலும்!

ஆனுல்...

சற்று நேரத்தில்...

அவர்களது ஆனந்தம் அழிந்தது!

மகிழ்ச்சி மாண்டது!

உல்லாசம் உருத் தெரியாமல் மறைந்தது!

களிப்பும் குதூகலமும் போன இடம் தெரியவில்லை!

காரணம்?

சரமாரியாகக் குண்டுகள் அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தன!

குண்டு மாரியால் முகாம் மட்டுமல்ல, வெள்ளையர் படை வீரர்களின் இதயங்களும் அதிர்ந்தன!

குண்டுகள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்து தான் பாய்ந்து வருகின்றன என்பதை முகாமில் இருந்த வெள்ளையர் படையினர் அறிய வெகு நேரமாக வில்லை!

அன்றெல்லாம் ஓய்வெடுத்துக் கொண்ட பகைவர், இனியும் அந்த ஓய்வை அவர்கள் தொடர்ந்து பெற்று அனுபவிக்கக் கூடாது என்று தீர்மானித்தோ என்னவோ, பாஞ்சைக் கோட்டைப் படையினர் குண்டு மாரி பொழிந்து, முகாமில் நிலவிய அமைதியைக் குலைத்து குழப்பத்தையும், பதற்றத்தையும், திகிலையும் உண்டு பண்ணியதாக கர்னல் ஜேம்ஸ் வெல்ஷும், மேஜர் காலின்ஸ்மெக்காலேயும் அனுமானித்தனர்!

அவர்கள் அனுமானம் ஓரளவு உண்மையும் கூட!

அப்பொழுது மையிருள் கோட்டையைச் சுற்றிலும் சூழ்ந்திருந்தது!

குண்டுகள் கிளம்பிப் பாய்ந்து வரும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையையும், குண்டுகளை வீசும் எதிரிகளையும் முகாமில் இருந்தவர்களால் பார்க்க முடியவில்லை!

அது மட்டுமா?

பாஞ்சைப் பதியார் வீசும் குண்டுகள் கோட்டையிலிருந்து இரண்டாயிரம் கெஜ தூரத்தில் இருக்கும் முகாமுக்குப் பாய்ந்து வருவது எப்படி என்பதையும் பரங்கிப் படையினரால புரிந்துகொள்ள முடியவில்லை. புதிராகவே இருந்தது அவர்களுக்கு!



வெறும் கை வெடி குண்டுகளான அவை எதிர் பாராத விதமாக, சற்றும் எதிர் பாராத நேரத்தில் அவ்வளவு தூரம் பாய்ந்து பறந்து வந்து, முகாமில் விழுந்து, நிறையச் சேதம் விளைவித்தன என்றால், எதிரிகளின் சமயோசித புத்தியும், தந்திரத் திறனும் எத்தகையதாக இருக்க வேண்டும் என்று வியந்தனர் ஆங்கிலேயர்!

ஆனால் அக் குண்டுகள் சக்தி மிக்க விசைக் கவண்கள் மூலம் தான் முகாமை நோக்கி வீசப்பட்டன என்பதைப் பிறகுதான் கண்டு கொண்டனர் கம்பெனிப் படையினர்.

அன்றிரவு நிலா உதயமாகும் வரை—அதாவது சுமார் பத்து மணி வரை—குண்டு வீசும் எதிரிகள் எத்தனை பேர், குண்டு வீசும் அவர்களுடைய திட்டங்கள் என்ன என்பதை ஆங்கிலேயக் கர்னலாலும், மேஜராலும், அதிகாரிகளாலும், படை வீரர்களாலும் அறிய முடியாமல் இருந்தது.

ஆனால் முந்தின நாள் போரில் வெள்ளையர் தங்கள் வெடி மருந்துகளைக் கணிசமான அளவுக்கு வீணாக்கியதை அறிந்த பின்னர்தான், தங்கள் எதிரிகளான பாஞ்சைப் படையினர் கோட்டையிலிருந்து தங்களை நோக்கிக் கடுமையான தாக்குதலைத் தொடங்கி யுள்ளனர் என்பது அவர்களுக்கு ஒருவாறு புரிந்தது!

எதிரிகள் எறிந்த குண்டு மாரியால் லெப்டினென்ட் லைன் என்பவனும், ஐந்து சிப்பாய்களும் படுகாய மடைந்தனர்.

மற்றும் பலருக்குச் சிறு சிறு காயங்கள்.

முந்தின நாள் தோல்விக்குப் பிறகு, அன்றிரவும் அவர்களுக்குத் தொல்லை தரும் இரவாக மாறிவிட்டது!

## இரவில் நடத்திய சாகசச் செயல்கள்!

அன்று நள்ளிரவுக்கு மேல் ஆகியது!

ஆங்கிலேயரின் முகாமை நோக்கி அவர்களுடைய எதிரிகளான பாஞ்சாலங்குறிச்சிப் படை வீரர்கள் குண்டுமாரி பொழிந்ததால் ஏற்பட்ட கலவரம் ஒருவாறு அடங்கியது!

முகாமில் அமைதி நிலவலாயிற்று.

அன்று முன்னிரவு நேரத்தில் நடந்த குண்டு மாரியின் காரணமாக ஏற்பட்ட கலவரத்தால் கதி கலங்கிய கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் உடனுக்குடன் முகாமைச் சுற்றிலும் காவற் படையை நியமித்தான்.

முகாமை முழு மூச்சுடன் காவல் காக்கும்படி கட்டளை யிட்டான்.

அதற்கு மற்றொரு காரணமும் இருந்தது.

எதற்கும் அஞ்சாத பாஞ்சாலங்குறிச்சி விடுதலைப் புரட்சி வீரர்கள், தங்கள் பாசறைகளில் துணிச்சலோடு புகுந்து, தங்களுக்குத் துன்பங்களை விளைவிக்கத் தயங்க மாட்டார்கள் என்று கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் சந்தேகித்ததே அக் காரணம்!

இரவு நேரத்தில் பாசறைகளில் யார் புகுந்தாலும் சரியே, தயவுதாட்சணியமின்றி உடனுக்குடன் சுட்டுத் தள்ளும்படி உத்தரவு போட்டான் கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ், காவல் வீரர்களுக்கு.



அவ் வுத்தரவின்படி முகாமைச் சுற்றிக் காவல் கடுமையாகியது.

துப்பாக்கி தாங்கிய சிப்பாய்கள் நீட்டிய துப் பாக்கிகளுடன், மிகுந்த எச்சரிக்கையாக, இமைக்கு இமை முட்டாமல் கூடக் கண் விழித்துக் காவல் காத்துநின்றனர்!

அத்துடன் சில ராணுவ அதிகாரிகள் குதிரை களின் மேல் ஏறி, முகாமைச் சுற்றிச் சுற்றி வந்து, காவல் காத்து நின்ற வீரர்களைக் கண்காணித்துக் கொண்டும், எதையும் தாங்கும் இதயம் கொண்ட எதிரிப் படை வீரர்கள் முகாமிற்குள்ளும், தொடர்ந்து பாசறைகளுக் குள்ளும் ஊடுருவி வருகிறார்களா என்று உற்றுப் பார்த்துக் கொண்டு மிருந்தனர்.

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் கொண்ட சந்தேகம் வீண் போகவில்லை!

சின்னவாலன் என்ற பாஞ்சைப் புரட்சி வீரன் ஒருவன் தன்னோடு இன்னும் சில வீரர்களைச் சேர்த்துக் கொண்டு முகாமின் ஒரு பக்கம் இருளினூடே மறைந்து மறைந்து சென்றான்.

துரைமல்லன், உருமன் என்ற இரண்டு வீரர்கள் முகாமின் மற்றொரு பக்கம் பதுங்கிப் பதுங்கிச் சென்றனர்.

அவர்களில் துரைமல்லன், உருமன் ஆகியோரின் துணிச்சலான சாகச நடவடிக்கையைப் பற்றி கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் தன் குறிப்புகளில் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறான்.

துரைமல்லனும் உருமனும் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு, உடைவாளை இடையில் ஒளித்து

வைத்துக் கொண்டு, எறி குண்டுகளைக் கையில் பிடித்துக்கொண்டு கம்பெனிப் பட்டாளம் முகாமிட்டிருக்கும் பாசறைகளுக்குத் தென் மேற்குத் திசைக்குச் சென்றனர்.

அப்படிச் சென்றபோது முகாமைக் காவல் காக்கும் துப்பாக்கி வீரர்கள் தங்களைக் கண்டால் சுட்டுப் பொசுக்கி விடுவார்களே என்று எண்ணித் தரையின் மேல் உடும்பைப் போல ஊர்ந்து சென்றனர்.

ஊர்ந்து சென்றவர்கள் முகாமை அடுத்த ஓரிடத்தில் பதுங்கினர்.

கம்பெனிப் படையினரின் காவல் வீரர்களின் கண்களுக்கு அவ் விரு வீரர்களும் தென்படக்கூடாது என்று கால நிலேயே கனிவு மிகக் கொண்டது போலும்!

அதுவரை வானில் பவனி வந்து ஒளி பாய்ச்சிய நிலவைக் கருமேகங்கள் விரைந்து வந்து மறைத்தன!

முகாமையும் அதன் சுற்றுப் புறங்களையும் கும்மிருளில் ஆழ்த்தின அவை!

ஆனாலும் கழுகுக் கண்களைக் கொண்ட கம்பெனிக் காவல் சிப்பாய்களின் கூர்மையான பார்வைக்குப் பாசறைகளை நோக்கிப் பதுங்கிப் பதுங்கிச் சென்ற துரைமல்லனும் உடுமனும் தென்பட்டு விட்டனர்!

உடனே காவல் சிப்பாய்கள் துப்பாக்கியை அவர்கள் பக்கம் நோக்கி நீட்டிக்கொண்டே, மற்றக் காவல் சிப்பாய்களின் கவனத்தைக் கவர்ந்து தங்களுக்குத் துணையாக அவர்களை வரவழைக்கும்



வகையில் எச்சரிக்கை செய்து கூக்குரலிட்டுக் கொண்டே முன்னேறினர்.

அக் கூக்குரல், பதுங்கிச் சென்ற பாஞ்சைப் பதி வீரர்களான துரைமல்லனுக்கும், உருமனுக்கும் எச்சரிக்கையாக அமைந்து விட்டது!

தங்களைச் சிப்பாய்கள் கண்டு கொண்டு விட்டதையும், தங்களை நோக்கி நீட்டிய துப்பாக்கிகளுடன், எந்த வினாடியும் சுட்டுத் தள்ளும் முடிவுடன் வருவதைக் கண்ட துரைமல்லனும் உருமனும் சட்டென்று அங்கிருந்த இரண்டு பெரிய மிடாக்களுக்குள் — குதிரைகளுக்குக் கொள்ளு அவித்து வைக்கும் மிடாக்களுக்குள்—புகுந்து ஒளிந்து கொண்டனர். காவல் சிப்பாய்களின் பார்வைக்குத் தப்பினர்!

அவர்களைத் தேடி வந்த சிப்பாய்கள் அவர்களை அங்கும் இங்கும் தேடினர்.

எங்கும் காணாததால், தூக்கம் கெட்ட கண்களுக்குத் தாங்கள் கண்டது வெறும் பிரமைதானே என்று எண்ணினார்கள், சிப்பாய்கள்.

மீண்டும் தங்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பி வந்து காவல் புரிவதில் கண்ணுயினர்.

அத்துடன் அத்தகைய பலமான காவல் முகாமைச் சுற்றிலும் இருக்கும்போது, எதிரிப் படையைச் சேர்ந்த எவருக்கு அங்கு வரத் துணிச்சல் ஏற்படும் என்று அச் சிப்பாய்கள் தப்புக் கணக்குப் போட்டு விட்டார்கள்!

மிடாக்களில் ஒளிந்து கொண்டு தங்களைத் தேடி ஓடி வந்த காவல் சிப்பாய்களின் கண்களில் மண்ணைத்

தூவிய துரைமல்லனும் உருமனும், சிப்பாய்கள் அங்கிருந்து அகன்றபின் தங்கள் மறைவிடத்திலிருந்து மெள்ள வெளியே வந்தனர்.

வெளியே வந்தவர்கள் மண்டியிட்டு, ஊர்ந்து ஊர்ந்து, நகர்ந்து நகர்ந்து, ஆமை போல மெள்ளச் சென்றனர்.

சென்ற அவர்கள் அருகில் இருந்த ஒரு கூடாரத்திற்குள் புகுந்தனர்.

அங்கே எட்வர்ட் ஸ்மித் என்ற சேனைத் தலைவன் — லெஃப்டினென்ட் — படுத்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

தன்னையும் மறந்து தூங்கும் வெள்ளையனை வெட்டி வீழ்த்துவது வீரனுக்கு அழகல்ல என்று உணர்ந்தனர் அவ்விரு தமிழ் வீர மறவர்கள்.

அதனால் சிறு எறி குண்டு ஒன்றைக் கூடாரத்தினுள் எறிந்து, பேரொலியைக் கிளப்பினர்.

அப் பேரொலியைக் கேட்டுப் பதறி எழுந்தான் லெஃப்டினென்ட் எட்வர்ட் ஸ்மித்!

எழுந்தவன் தனக்கெதிரே இருப்பவர்களை இனம் கண்டு கொள்ளவில்லை.

காரணங்கள், எறி குண்டால் எழுந்த புகை மண்டலம்; அக் கூடாரத்தில் நிலவிய இருள்!

கூடாரத்தினுள் எறி குண்டு வெடித்ததால் ஏற்பட்ட பேரொலி அங்கு இருந்த எட்வர்ட் ஸ்மித்தைத் திடுக்கிட வைத்து, அதிர்ச்சியுறச் செய்தது!

அத்துடன் அவ் வொலியைக் கேட்டு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தனர் மற்றக் கம்பெனிப் படை வீரர்கள்.



எழுந்தவர்களில் பலர் உறக்கக் கிறக்கத்தில், இருளில், ஒருவரோடு ஒருவர் இடித்துக் கொண்டும், முட்டி மோதிக் கொண்டும், தட்டுத் தடுமாறிக் கொண்டும், ஒலி கிளம்பி வந்த திசையை நோக்கிப் பாய்ந்தோடிச் சென்றனர்!

புரட்சி வீரர்கள் இருவரும் பாய்ந்தோடி வந்த பரங்கிப் படை வீரர்களில் சிலரை வெட்டி வீழ்த்தினர்!

வெட்டி வீழ்த்திய பின் 'கொலை,கொலை' என்று கம்பெனிச் சிப்பாய்கள் கூக்குரல் யிடுகின்ற பாவனையில் 'மர்டர்! மர்டர்!' என்று உரக்கக் கத்தினர்!

அதைக் கேட்ட உறக்கம் கலையாத சிப்பாய்கள், கும்மிருட்டில் ஒன்றும் தெரியாமல், துப்பாக்கிகளை எடுத்து அங்கு மிங்கும் சுட்டனர்!

அதன் விளைவு?

அவர்கள் தங்களைத் தாங்களே ஒருவருக் கொருவர் சுட்டுக் கொண்டனர்!

சிலர் செத்தனர்!

பலர் காயமுற்றனர்!

துரைமல்லனும் உருமனும் இருளைத் துணை கொண்டு சாகசம் புரிந்து, பகைவரைக் கொண்டே பகைவரைத் துவம்சம் செய்தனர்!

அந்தக் கலவரத்தில் சாதுரியமாக அங்கிருந்து தப்பினர்!

துரைமல்லனும் உருமனும் அவ்வாறு சாகசச் செயல் புரிந்த அதே நேரத்தில், மற்றொரு பக்கம் வெள்ளையர் முகாமை நோக்கிச் சென்ற சின்னவாலன் என்ற வீரனும், அவனுடன் சென்ற மற்றும் சில

வீரர்களும் காவல் சிப்பாய்களின் பார்வவயில் படாத படி, போர்த் தளவாடங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்த பாசறைக்குள் தந்திர சாமர்த்தியத்தோடு புகுந்து, அங்கிருந்து நூற்று அறுபது துப்பாக்கிகளையும் மற்றும் சில வெடிகளையும், வெடி மருந்தையும், துப்பாக்கித் தோட்டாச் சரங்களையும் கவர்ந்து சென்றனர்.

## எதிர்த்து வந்த ஈட்டி வீரர்கள்!

ஏப்ரல் மாதம் இரண்டாம் தேதி இரவு பாஞ்சாலங்குறிச்சிப் படை வீரர்களின் குண்டு மாரிக்குப் பிறகும், நள்ளிரவுக்கு மேல் நடத்திய சாகச நடவடிக்கைகளுக்குப் பிறகும், இருபத்திரண்டாம் தேதி வரை எதுவும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்குப் போர் நிகழ்ச்சிகள் அவ்வளவாக நடைபெறவில்லை.

ஆனாலும் ஒவ்வொரு நாளும் இரு படையினருக்குமிடையே சிறுசிறு தாக்குதல்களும், கைகலப்புகளும், துப்பாக்கிச் சூடுகளும் நடைபெற்றன.

அதன் காரணமாக இரு தரப்பாரிடையே வீரர்கள் சிலரின் இழப்புகளும் ஏற்பட்டன!

அதே சமயத்தில் வெள்ளையர் படையினர் தங்கள் படை பலத்தை அதிகமாக்கிக் கொண்டும், பாஞ்சைப் பதியினரின் எதிர்த் தாக்குதல்களைச் சமாளிக்க ஆயத்தங்கள் செய்து கொண்டும் இருந்தனர்.

அத்துடன் வேறொரு நடவடிக்கையிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டனர் வெள்ளையர்.



பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்து யாரும் வெளியில் செல்லவோ, வெளியிலிருந்து பாஞ்சாலங்குறிச்சிப் பாளையங்களைச் சேர்ந்தவர்கள் எவரும் கோட்டைக்குள் வரவோ கூடாது என்று கடுமையான–கொடுமையான கட்டளை பிறப்பித்தான் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்:

அதற்குக் கம்பெனிச் சிப்பாய்களைக் காவலும் போட்டான் மேஜர் காலின்ஸ்மெக்காலே.

அத்துடன் நின்றார்களா ஆங்கிலேயர்?

பாஞ்சைக் கோட்டைக்குள் இருக்கும் விடுதலைப் புரட்சி வீரர்களுக்கும், ஆடு, மாடு, குதிரை முதலான பிராணிகளுக்கும் உணவு வகைகளும், தீனி வகைகளும் வெளியிலிருந்து கிடைக்க முடியாதபடி தடுக்க முற்பட்டனர்.

ஆனால் அதிலும் அவர்கள் போட்ட கணக்கு தவறி விட்டதை அவர்களே உணரவில்லை!

காரணம் என்ன?...

கம்பெனிப் பட்டாளம் பல மாதங்கள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகை யிட்டாலும், வெளியிலிருந்து உணவுப் பொருட்களின் உதவியை நாடாமல், கோட்டைக் குள்ளேயே இருக்கும் அத்தனை வீரர்களுக்கும், வீரர்களின் குடும்பங்களுக்கும் உணவுப் பற்றாக்குறை ஏற்படாவண்ணம் இருக்கத் தானியக் களஞ்சியங்களில் தானிய வகைகள் ஏராளமாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

அப்படியும் மிஞ்சி உணவுப் பற்றாக்குறை ஏதாவது ஏற்பட்டால் உணவுப் பங்கீட்டை அமல் செய்ய

அவர்கள் ஆயத்தமாக இருந்ததையும் ஆங்கிலேயர் அறியவில்லை!

ஆதலால் அந்த ஏற்பாட்டிலும் ஆங்கிலேயரை ஏமாற்றமே எதிர் கொண்டது?

அவர்கள் முயற்சியும் வீணனது !

ஏப்ரல் மாதம் இருபத்திரண்டாம் தேதி....

காலைநேரம்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்க ஆயத்தமாயினர் ஆங்கிலேயர்.

அவர்களுடைய படைகள் கோட்டையை நோக்கிப் புறப்பட்டன அணிஅணியாக.

அப் படைகள் ஏராளமான சிப்பாய்களையும், துப்பாக்கிப் படை ஒன்றையும், ஒரு பீரங்கியையும் கொண்டிருந்தன.

முகாமிலிருந்து புறப்பட்ட அப் படைகள் கோட்டைக்குச் சுமார் ஐந்நூறு கெஜ தூரத்தில் அணி வகுத்து நின்றன.

அதே சமயம் கோட்டையின் தென்புறம் கேப்டன் சார்லஸ் டிராட்டரின் படைப் பிரிவும், எட்டப்பனின் படையும் போருக்குத் தயாராக அணி வகுத்து நின்றன.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பகைமை கொண்டு, பாதக எண்ணத்துடன் தாக்கப் பரங்கியர் படைகள் வந்து கோட்டைக்கு எதிரே அணிவகுத்து நின்றது இயற்கைக்கே இம்மியளவும் பிடிக்கவில்லை போலும் !

அன்று கோட்டைக்கு எதிரே ஆங்கிலேயர் படைகள் அணிவகுத்து நின்றதுதான் தாமதம் !



திடீரென்று பலத்த காற்று சூறுவளி போல வீசியது !

காற்றைத் தொடர்ந்து இடியும் மழையும் !

பலத்த காற்றுடன் கூடிய இடியும் மழையும் எதிர்பாராத விதமாக ஏற்பட்டு ஆங்கிலேயரைச் சோதிக்கத் தொடங்கின !

அத்தனைக்கும் அது மழைக்காலமும் கூட அல்ல !

கண் சிமிட்டும் நேரத்தில் ஒரு பேரிடி !

அதைத் தொடர்ந்து வெள்ளையர் முகாமில் இடியோசையை மிஞ்சும் வகையில் காது செவிடு படும்படியான பலத்த ஓசை கிளம்பியது !

அங்கிருந்த ஆறு பவுண்டர் பீரங்கி ஒன்று வெடித்ததன் பேரொலியே அது !

பேரிடி ஓசையும், பீரங்கி வெடித்ததால் உண்டான பெருத்த சத்தமும் ஒன்றுபோலக் கேட்டன !

அனைவரையும் கதிகலங்க வைத்தன !

திடீரென்று பீரங்கி வெடித்ததன் காரணம் பரங்கியருக்கு முதலில் புரியவில்லை.

ஆனால் பீரங்கியின் மேல் இடி விழுந்ததால்தான் அது வெடித்தது என்பதைப் பிறகு புரிந்து கொண்டனர்.

இடியோசையும், பீரங்கி வெடித்த பேரொலியும் இணைந்து கேட்ட அதே நேரத்தில்...

மாயமா, மந்திரமா என்று மதி மயங்கும்படி கண்ணிமைக்கும் நேரத்தில் ஓர் அதிசயச் சம்பவம் நிகழ்ந்தது !

ஆயிரத்திற்கு மேற்பட்ட பாஞ்சாலங்குறிச்சிப் படை வீரர்கள் மின்னலைப் பழிக்கும் ஈட்டிகளை ஏந்தி,

ஆக்கிரோஷத்துடன், பேராரவாரத்தைக் கிளப்பிக் கொண்டு, தங்கள் படையை நோக்கிப் பாய்ந்தோடி வருவதைக் கண்டனர் ஆங்கிலேயர் !

சற்றும் எதிர்பாராத அந்தப் பாஞ்சைப் பதி வீரர்களின் திடீர்ப் பாய்ச்சலைக் கண்டு ஆங்கிலேயர் அசந்து விட்டனர் ! கதி கலங்கினர் கம்பெனிப் படை வீரர்கள் !

ஒரு பக்கம் புயல், மழை இவற்றின் பயங்கரத் தாக்குதல்கள் !

எதிர்ப் பக்கம் புயலெனச் சீறி வரும் ஆக்கிரோஷம் கொண்ட எதிரிப் படையின் திடீர்த் தாக்குதல் !

இரண்டையும் ஒரே சமயத்தில் சமாளிக்க வேண்டிய நெருக்கடி நிலை !

இயற்கையின் சீற்றத்தால் இன்னலுற்ற ஆங்கிலேயர் எதிரிகளின் தாக்குதலால் பதறிப் போனுர்கள்!

எதிர்த்து வரும் ஈட்டி வீரர்களைச் சுட்டுத் தள்ளத் துப்பாக்கிப் படையினர் முயன்றனர் !

ஆனுல் கொட்டும் மழையில் துப்பாக்கிகள் வெடிக்கும் சக்தியை அறவே இழந்து விட்டன !

அவர்களது பீரங்கி ஒரு முறை வெடித்தது.

ஆனுல் மழையின் காரணமாகக் குண்டு வெடித்துப் பாயும் சக்தி மந்த கதி அடைந்து விட்டது !

பீரங்கி வேட்டினுல் எதிரிப் படை வீரர்களுக்கு எந்தவிதச் சேதமும் ஏற்படவில்லை!

அதற்குள் பாஞ்சாலங்குறிச்சிப் படையினர் வெள்ளையர் படையை நெருங்கி நெருக்கினர்.

அதன் காரணமாக வெள்ளையர் படையினரிடையே பெரும் குழப்பம் ஏற்பட்டு விட்டது!



அக் குழப்பத்திற்கிடையே, ஒரு தடவை வெடித்துச் சக்தி யிழந்துவிட்ட அந்தப் பீரங்கி பாஞ்சாலங் குறிச்சி வீரர்களிடம் சிக்கிக் கொண்டது.

பாஞ்சைப் படை வீரர்கள் பரங்கிப் படையினரைத் தாக்கிச் சீர் குலைப்பதைவிட, அவர்களது படைக் கருவிகளையும், போர்த்த ளவாடங்களையும் வெடி மருந்துகளையும் கைப்பற்றுவதில்தான் மிகுந்த கவனமும், அதிக அக்கறையும் காட்டினர்.

அதை அறிந்து கொண்டனர் ஆங்கிலேயர்.

பாஞ்சைப் படையினரின் எண்ணம் ஈடேற முடியாதபடி அவர்களை எதிர்த்தனர்.

தங்கள் போர்த் தளவாடங்களும், வெடி மருந்துகளும் எதிரிகளின் கைக்குக் கிடைக்காமல் இருக்க எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயன்று, அவற்றைப் பாதுகாக்க முனைந்தனர்!

அதன் காரணமாக ஏற்பட்ட கைகலப்பில்—சண்டையில்—பாஞ்சைப் படையினரில் சிலர் காய முற்றனர்.

அப்படியும் அவர்கள் கைப்பற்றிய பீரங்கியைக் கை நழுவவிடவில்லை!

## களிமண் சகதியில் கடும் சண்டை !

பீரங்கியைக் கைப்பற்றி வெற்றிப் பெருமிதம் கொண்டனர் பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் !

பரங்கியரின் அந்தப் பீரங்கியை அவர்களைச் சுட்டுப் பொசுக்கும் நிலையில் திருப்பி நிறுத்தி வைத்தனர்.

மழையால் நனைந்து சகதியாக மாறிய களிமண் பூமியின் மேல் பீரங்கி இருந்த வண்டியை நகர்த்த எவ்வளவு வசதிப்படுமோ அந்த அளவுக்கு மிகுந்த முயற்சி எடுத்து, பகைவரை நோக்கி நெட்டி நெருக்கி அவர்களைப் பின்னோக்கித் தள்ளிக் கொண்டே, முன்னேறினர் பாஞ்சைப்பதி வீரர்கள்!

அந்தப் பீரங்கிக்குப் பின்னால் ஈட்டி தாங்கிய வீரர்கள் ஆங்காரத்துடன் அணிவகுத்துச் சென்றனர்!

அதைக் கண்டு அஞ்சி நடுங்கினர் ஆங்கிலேயர் படையினர்!

மழையால் செயலிழந்த துப்பாக்கிகளை எந்திய வாறு, கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னால் நகரலாயினர்.

ஆனாலும் அவர்களிடையே சிறிதளவும் குழப்பம் நேரவில்லை.

குழப்பம் நேராமல் பார்த்துக் கொண்டனர் அவர்கள்!

மிகுந்த எச்சரிக்கையோடு, ஆங்கிலேயருக்கே உரித்தான மிதமிஞ்சிய கட்டுப்பாட்டோடும் அவர்கள் பின்னேறிக் கொண்டிருந்தனர்.

மழையில் நனைந்த பீரங்கி வெற்றிகரமாக வெடி முழக்கம் செய்யாது என்பது வெள்ளையருக்குத் தெரிந்துதான் இருந்தது!

இருந்தாலும் அவர்கள் பயந்து பின்வாங்கியதற்குக் காரணம் வேறு!

பீரங்கி வெடிக்கு அஞ்சாத அவர்கள், பீரங்கிக்குப் பின்னால், கைகளில் கூரான வேல்களைத் தாங்கி, அணிவகுத்து முன்னேறி வந்த வேற்படையே ஆங்கிலேயப் படையினரின் அச்சத்திற்குக் காரணமாக இருந்தது!



செயலிழந்த துப்பாக்கிகளுக்கும், பீரங்கிக்கும் முன் கூரான வேல்கள் வலிய செயல் திறன் வாய்ந்ததல்லவா?

ஆயினும், புலி பதுங்குவது பாய்வதற்குத்தானே?

அந்த அந்தரங்க எண்ணத்துடன் தான் வெள்ளையர் படையினர் கட்டுப்பாடு குறையாமல், ஒழுங்கு முறை குலையாமல் பின்னேறிக் கொண்டிருந்தனர்.

எதிரிகள் எப்பொழுது ஏமாறுவார்கள், எப்பொழுது அவர்களை எதிர்த்துத் தாக்கத் தருணம் கிட்டும் என்ற ஒரே நோக்கத்துடன், அதி தீவிரமான எச்சரிக்கையுடன் பின்னேறிக் கோண்டிருத்தனர்.

அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணம் விரைவில் கிட்டியது!

பாஞ்சைப் படை ஈட்டி வீரர்கள் தள்ளிக்கொண்டு வந்த பீரங்கி வண்டியின் சக்கரங்கள் ஓர் இடத்தில் ஆழமான களிமண் சகதியில் சிக்கிக் கொண்டன!

திடீரென்று ஏற்பட்ட அத் தடையை அகற்ற வேல் தாங்கிய வீரர்களில் பலர் முன் வந்து, பீரங்கி வண்டியைத் தோள் கொடுத்துத் தூக்கி, அதைச் சகதியிலிருந்து எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

பாஞ்சைப் பதி வீரர்களை எதிர்த் தாக்குதல் செய்யத் தக்க தருணத்தை விநாடிக்கு விநாடி எதிர்பார்த்துக் கொண்டிருந்த பரங்கிப் படையினர், லெஃப்டினென்டுகளான டே, கிளாஸோ ஆகியோரின் உதவியுடன், பீரங்கி வண்டியைத் தோள் கொடுத்துத்

தூக்க முயன்று கொண்டிருந்த வேல் தாங்கிய வீரர்களின் மேல் திடீரென்று பாய்ந்தனர்.

அந்தத் திடீர்ப் பாய்ச்சலைச் சற்றும் எதிர்பார்த்தவர்களல்ல பாஞ்சைப்பதி வீரர்கள்!

திடீர்ப் பாய்ச்சலால் அவர்கள் திகைப்படைந்து, செயலற்று விட்டனர்.

அவர்களிடையே சற்றுக் குழப்பமும் ஏற்பட்டு விட்டது!

அப்படிச் செயலற்று, குழப்பமடைந்த அவர்களது நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டனர் வெள்ளையர் படையினர்.

அவர்களை முழு மூச்சுடன் எதிர்த்தனர்.

ஈட்டி வீரர்களும் அவ் வெதிர்ப்புச் சண்டையில் சற்றே பின் வாங்கினர்.

அது பரங்கியருக்குச் சாதகமாயிற்று.

கடைசியில் பீரங்கியை மீட்டு விட்டனர் பரங்கியர்!

அச் சமயத்தில் மற்றொரு நிகழ்ச்சி நடந்தது!

அந்த நிகழ்ச்சி ஆங்கிலேயரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்து மேலும் நூற்றுக்கணக்கான வீரர்கள் புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்பி வருவதைப் போலக் கிளம்பி வந்தனர்!

அதற்குள் மழை ஒருவாறு ஓய்ந்து நின்றது!

மழை நின்றவுடன் அலை அலையாகப் பாஞ்சைக் கோட்டை விடுதலைப் புரட்சி வீரர்கள் துப்பாக்கிகளுடன் வெளி வரத் தொடங்கினர்.



அதைக் கண்டு கலங்கினர் ஆங்கிலேயப் படைத் தளபதி கர்னல் ஜேம்ஸ்வெல்ஷும், படைப் பிரிவுத் தலைவன் மேஜர் காலின்ஸ்மெக்காலேவும்!

உடனே தங்கள் படை முகாமிலிருந்து சிப்பாய்களை அணி அணியாக வரச் சொல்லி உத்தரவிட்டனர். அவர்களும் வந்தனர்!

மழையால் நனைந்த களிமண் சகதி பூமியில் காலடி வைத்துப் போராடுவது புதிய அனுபவமாக இருந்தது ஆங்கிலேயருக்கு!

வழுக்கும் நிலத்தில் நின்று எதிரிகளை நோக்கிச் சுடும் துப்பாக்கி வீரர்களுக்குக் குறி பார்த்துச் சுடுவது கடினமாக இருந்தது!

ஆனால் கோட்டைப் படை வீரர்களுக்குக் களிமண் பூமியில் சகதியான நிலத்தில் நின்று போரிடுவது புதிய அனுபவம் அல்ல!

இருந்தாலும் அவர்களாலும் ஒழுங்காக வேல் வீசிப் போரிட முடியவில்லை:

எங்கும் ஒரே கூச்சல்!

எங்கும் ஒரே குழப்பம்!

அது போன்ற கூச்சலும் குழப்பமும் நிறைந்த போர் மாலை வரை நடந்தது.

மாலை மங்கி இருள் கவிய ஆரம்பித்தது.

போரும் ஒருவாறு ஓய்ந்தது!

மிகவும் களைப்படைந்திருந்த இரு சாரார் படையினரும் தங்கள் இழப்புகளைக் கணக்கிட்டனர்.

அன்றும் ஆங்கிலேயப் படையினரின் இழப்பே அதிகமாக இருந்தது!

பின்னர் பாஞ்சைப் படையினர் கோட்டைக்குத் திரும்பினர்.

பரங்கிப் படையினர் முகாமுக்குத் திரும்பினர்.

அன்றிரவு எவ்வித அசம்பாவிதச் சம்பவங்களுமின்றிக் கழிந்தது!

## கோட்டையைச் சுற்றி வந்த குதிரைப் படை!

மறு நாள்...

பொழுது விடிந்தது!

அன்று பாஞ்சாலங்குறிச்சிப் போர் எப்படி நடக்கப் போகிறது என்பதைப் பார்க்கும் ஆவலில், கீழ் வானில் தன் செங்கதிர்களைப் பரப்பிக்கொண்டு ஆதவன் உதயமானுன்!

போர் மேகச் சூழலைப் பார்க்க வரும்போது கார்மேகச் சூழல் தன் பார்வையை மறைத்து விடக் கூடாதே என்றுதானே என்னவோ, கீழ் வானில் உதயமான ஆதவன் வானத்தை நிர்மலமாக்கி, கால நிலையைத் தெளிவாக்கி யிருந்தான்!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் வட, தென் புறங்களை மட்டுமே தெரிந்து கொண்டு போரிட்டுப் பலன் இல்லை; கிழக்கு, மேற்குப் பக்கங்களையும் நன்கு தெரிந்துகொண்டு, அதற்கேற்றவாறு படைத் திறனைப் பெருக்கி, பலப்படுத்திக் கொண்டே போரிட வேண்டும் என்று ஏற்கனவே திட்டமிட்டிருந்தான் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்.

ஆகவே அதை அன்று அவ் விரு பக்கங்களையும் நோட்டமிட்டு, கோட்டையின் அமைப்பைப் பார்த்து



விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டான் கர்னல்.

உடனே அவன் ஒரு குதிரையின் மேல் ஏறிக் கொண்டு, சிறு குதிரைப் படையைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு கோட்டையைச் சுற்றி வந்து நோட்ட மிடலானுன்.

எப்பொழுதும் விழிப்புடன் இருக்கும் பாஞ்சாலங் குறிச்சி விடுதலைப் புரட்சி வீரர்கள் அப்பொழுதும் கோட்டை மதில்களின் மேல் ஆயுதம் தாங்கி அணி வகுத்து நின்றிருந்தனர்!

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் குதிரைப் படையுடன் கோட்டையைச் சுற்றி நோட்டமிட்டுக் கொண்டு சென்றதன் நோக்கத்தை நன்ருக அறிந்து கொண்டனர் பாஞ்சைக் கோட்டைப் போர் வீரர்கள்.

கோட்டைத் தலைவரான ஊமைத்துரைக்கு அச் செய்தியை உடனுக்குடன் தெரிவித்தனர்.

அதைக் கேட்ட ஊமைத்துரை கோட்டைக் காவலைப் பலப்படுத்தும்படி உத்தரவிட்டார்.

அத்துடன் அக்கிரமமாக நடக்கப் போகும் உக்கிரமான போருக்கு வேண்டிய ஆயத்தங்களை அதிவிரைவில் செய்யும்படிக் கட்டளை பிறப்பித்தார் பாஞ்சைக் கோட்டைப் போர் வீரர்களுக்கு.

மேலும் மற்ருெரு நடவடிக்கையில் ஈடுபட்டனர் பாஞ்சைக் கோட்டை வீரர்கள்.

கர்னல் ஜேம்ஸ்வேல்ஷ் குதிரைப் படையுடன் கோட்டையைச் சுற்றிப் பார்வையிட்டு வந்தபோது, அவர்களை நோக்கிக் கை வெடி குண்டுகளை எறிந்தனர்,

ஈட்டிகளை வீசினர், கோட்டை மதில்களின் மேல் அணிவகுத்து நின்ற வீரர்கள்.

ஆனால் அவற்றால் எந்த விதச் சேதத்தையும் அடையவில்லை கம்பெனியாரின் குதிரைப் படை வீரர்கள்!

காரணம், அவர்கள் கோட்டையை அண்மையில் சுற்றி வராமல், சேய்மையில் சுற்றி வந்ததே!

கோட்டையின் காவல் வீரர்களின் எதிர் நடவடிக்கையின் காரணமாக, கோட்டையைச் சுற்றி நோட்டமிட வந்த குதிரைப் படை அணி வகுப்பால் அவர்களுக்குப் பிரதிகூலம் தான் ஏற்பட்டதே தவிர, உளவறியச் சென்ற அவர்களது நோக்கம் அனுகூலமாகவில்லை!

தான் அழைத்து வந்த குதிரைப் படையுடன் முகாமுக்கே திரும்பினான் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்!

இருந்தாலும் கோட்டையைச் சுற்றிச் சென்ற போது கர்னல் கண்டறிந்த விஷயம் ஒன்று முக்கியமானதாகும்!

ஏற்கனவே கோட்டைக்கு வடமேற்கிலும், வடக்கிலும் கோட்டையைத் தகர்க்க முயன்று, வடப்பக்கம் அதன் சுவரைத் தகர்த்தாகி விட்டது.

ஆனால் அதில் அவ்வளவாகப் பலன் கிடைக்கவில்லை.

கேப்டன் சார்லஸ் டிராட்டரின் படைகள் எட்டப்பனின் படைகளின் உதவியுடன் தென்புறப் போரில் ஈடுபட்டிருக்கிறது என்பதைக் கண்ட கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ், குதிரைப் படையுடன் சென்று பார்த்த கிழக்குப் புறம் கோட்டையைத் தகர்க்கும்



அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்பதைக் கண்டறிந்தான்.

மீதியிருந்த மேற்குப் புறம் ஒன்றுதான் தகர்ப்பதற்கு ஏற்றது என்பதை அறிந்து கொண்டான்.

## கடுமையான தாக்குதலுக்கு ஆயத்தங்கள்!

அதன் பின் மே மாதம் பத்தொன்பதாம் தேதி வரை கம்பெனிப் படைகள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கித் தகர்க்கும் போர் முயற்சியில் மந்த நிலைதான் நிலவியது.

அந்த மந்த நிலைக்குப் பல காரணங்களில் முக்கியமான காரணம் விடாது பெய்த அடை மழை!

அப்படி அடாத மழை விடாது பெய்தாலும், கோட்டையின் கட்டிடக் கலை நிர்மாணத்தில் திறமையும் அனுபவமும் வாய்ந்த பாஞ்சைப் பதியினர் எப்படியோ சமாளித்து, பீரங்கியால் தகர்க்கப்பட்ட கோட்டையின் உட்புறச் சுவரைச் செப்பனிட்டுச் சீர் செய்து விட்டனர்.

அது ஆங்கிலேயருக்கு ஆச்சரியப்படத்தக்க அதிசயச் செய்திதான்!

இடிந்த கோட்டைச் சுவர் கம்பெனிப் படையினர் கண்களுக்கு முன்னாலேயே செப்பனிடப்பட்டது!

அவர்கள் செய்வதின்னதென்று அறியாது, கண்ணிமைக்காமல் அதை வெறித்துப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

கோட்டைச் சுவரைப் பாஞ்சைப் பதியினர் செப்பனிட்டமைத்ததைச் செய்வது இன்னதென்று

அறியாது, கண்ணிமைக்காது கம்பெனிப் படைகள் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததற்கும், அதற்கு முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து நிறுத்த இயலாமைக்கும் காரணம் மழை!

விடாது பெய்த மழையால் அவர்கள் எதிர்ப்புச் செயல் திறனை இழந்துவிட்டனர்!

மழையின் காரணமாகப் போரில் மந்த நிலை ஏற்பட்டாலும் வாளா இருக்கவில்லை வெள்ளையர்.

போருக்கான—இன்னும் கடுமையான தாக்குதலுக்கான — ஆயத்தங்களைச் செய்து கொண்டுதான் இருந்தனர்!

தன் கீழ் இருந்த ஆங்கிலேயக் கம்பெனியாரின் எழுபத்து நான்காவது படைப் பிரிவும், கோட்டையின் தென்புறம் முகாமிட்டுத் தாக்கிய கேப்டன் சார்லஸ் டிராட்டரின் பத்தொன்பதாவது படைப் பிரிவும், எட்டப்ப நாயக்கனின் படையும், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் சுற்றுவட்டத் தாக்குதலுக்கும், முக்கியமாக மேற்குப் புறத் தாக்குதலுக்கும் போதாது என்று கண்டான் மேஜர் காலின்ஸ்மெக்காலே!

அதனால், தாங்கள் கற்பனைகூடச் செய்து பார்க்காத அளவுக்கு அத்தகைய பலம் பொருந்திய பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கும் தன் திட்டத்தைக் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷுடன் கலந்து பேசினான்.

உடனே அந்தத் திட்டத்தைத் திருச்சியிலிருந்த கம்பெனித் தலைமைப் பீடத்திற்குத் தெரியப்படுத்தினான் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்.



அத் திட்டத்தைச் செயலாற்ற இன்னும் சில படைப் பிரிவுகளையும், பீரங்கிகள், மற்றும் ஏராளமான போர்த் தளவாடங்களையும் உடனே அனுப்பி வைக்கும்படி செய்தி அனுப்பினான் வெல்ஷ்.

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் கோரிய உதவிப் படைகள் மே மாதம் இருபத்தோராம் நாள் பாஞ்சாலங்குறிச்சியை வந்தடையும் என்று திருச்சியில் இருந்த ஆங்கிலேயக் கம்பெனியின் தலைமைப் பீடம் உடனுக்குடன் தகவல் தெரிவித்தது.

கம்பெனியின் தலைமைப் பீடத்திற்கே சற்றுத் திகைப்புதான் – பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தகர்த்தெறிய அவ்வளவு அதிகமான போர் ஆயத்தங்கள் தேவைப்படுகின்றனவா என்பதில்!

திருச்சியிலிருந்து உதவிப் படைகள் வந்து சேர்வதற்கு ஏற்பாடு செய்து கொண்ட கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ், அவை மட்டும் போதாது என்று தீர்மானித்தான்.

அதனால், ஆங்கிலேயரின் அடிவருடிகளான எட்டயபுரத்திலிருந்து மற்றொரு படையையும், மற்றும் ஊற்றுக்குழி, புதுக்கோட்டை முதலிய பாளையக்காரர்களிடமிருந்து தனக்கு உதவிப் படைகளை வரவழைத்துக் கொள்ளத் திட்டமிட்டான்.

அதன்படி படைகளைப் பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்பி வைக்க அந்தந்தப் பாளையக்காரர்களுக்கு உத்தரவு அனுப்பினான் வெல்ஷ்.

ஆங்கிலேயர் எள் என்பதற்குள் எண்ணெயாக நின்ற எட்டயபுரம், ஊற்றுக்குழி, புதுக்கோட்டை ஆகிய பாளையக்காரர்கள் பாஞ்சாலங்குறிச்சிக்

கோட்டையைத் தகர்த்தெறிவதில் தணியாத ஆர்வம் கொண்ட புல்லுருவிகள். தங்கள் இனத்தான் தங்களைப் போல் அல்லாமல், வெள்ளையனுக்கு வரி கட்டாமல் வீம்பு பேசுவதா? ஆங்கிலேயனுக்கு அடிமையாகாமல், தன்னிகரிலாத் தனி ஆட்சிக்கு ஆசைப்படுவதா? என்று பாஞ்சைப் பதியினரை 'ஏளன' பாவத்துடன் எண்ணிய பாளையக்காரப் பெரும் தலைவர்கள், தங்கள் படைகளை உடனே அனுப்பி வைக்கச் சம்மதித்தனர்.

அவர்களில் முதலிடம் வகித்தான் எட்டயபுரத்தான் எட்டப்பன்!

எட்டப்ப நாயக்கனின் தம்பி தானுபதி குமரப்ப நாயக்கன், மைத்துனன் சின்னமல்லு நாயக்கன் ஆகியோர், ஆங்கிலேயரின் கட்டளைக்கு அடிபணிந்து, மேலும் படைகளை அனுப்ப வேண்டாம் என்று அறிவுரை கூறினர்.

ஏற்கனவே எட்டப்பன் செய்த இழுக்கான செயலுக்குத் துணையாக மேலும் இழுக்கான செயலைத் தொடர்ந்து செய்ய வேண்டாம் என்று தடுத்தனர்.

தன் இனத்தானுக்கு எதிராக, அயல் நாட்டானுக்குத் துணையாகப் படைகளை அனுப்பி, மற்றப் பாளையக்காரர்களின் பொல்லாப்பிற்கும், பழிச் சொல்லுக்கும் இலக்காக வேண்டாம் என்று நல்லுரை வழங்கினர்.

ஆனால் எட்டப்பன் எதையும் கேட்கவில்லை!

தன் தம்பி, மற்றும் மைத்துனனின் அறிவுரையை அலட்சியப்படுத்தி, அவர்களுடைய நல்லுரையைப் பொருட் படுத்தாமல், தன் படைகளை ஆங்கிலேயப் படைகளுக்குத் துணையாக நின்று, பாஞ்சாலங்குறிச்சிக்கு எதிராகப் போரிட உடனுக்குடன் அனுப்பி வைத்தான்.



எட்டப்பனின் படைகள் எட்டே நாட்களில் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தன.

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் அத்துடன் நின்றானா?

இலங்கையிலிருந்து ஒரு படையை வரவழைக்க ஏற்பாடு செய்தான்.

அது தவிர, மலேயாவிலிருந்து நூற்று ஐம்பது மலேயாக்காரர்களையும் தருவித்துக் கொண்டான்.

மலேயாக்காரர்கள் மூர்க்கமாகவும், முரட்டுத்தனமாகவும் சண்டையிடுவதில் சமர்த்தர்கள் என்பதே அதன் காரணம்!

கோட்டை தகர்க்கப்பட்டால் முதன் முதலில் உட்புகுந்து, பாஞ்சாலங்குறிச்சி விடுதலைப் புரட்சிப் படை வீரர்களின் முன் நின்று சண்டையிட்டு, அவர்களைத் தீர்த்துக் கட்டும் பொருட்டு அவர்கள் வரவழைக்கப்பட்டனர்!

முன்பு கோட்டைச் சுவர் தகர்க்கப்பட்டபோது அவன் படையினர் பட்ட அவதி கற்றுத் தந்த பாடத்தின் விளைவு அது!

முட்டைக்கோஸ் பண்ணையில் சுற்றுச் சுவரைப் போலச் சிறிய சுவர்களைக் கொண்டதும், வெகு அற்பமான மிகச் சிறிய கோட்டை என்றும் ஆரம்பத்தில் ஆங்கிலேயர் கருதிய பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கித் தகர்க்கத்தான் அத்தனை படைகளும், அவ்வளவு முன்னேற்பாடுகளும் தேவைப்பட்டன அவர்களுக்கு.

அதன் காரணம் கோட்டையின் வலிமையையும், படை வீரர்களின் பலத்தையும் அனுபவ வாயிலாகத் தெரிந்து கொண்டதுதான் !

குதிரைப் படையுடன் சென்று கோட்டையை நோட்டமிட்ட கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ், கோட்டையை சுற்றிலும் தாக்குவதால் பலன் ஏதும் இல்லை என்று கண்டு கொண்டான்.

அத்துடன் மேற்குப் பக்கம் கோட்டையின் பிரதானப் பகுதி அமைந்திருந்ததை முன்பு கோட்டைக்குள் சென்ற தூதுவன் மூலம் அறிந்து கொண்ட வெல்ஷ், அந்தப் பக்கத்தை மட்டும் தாக்கித் தகர்த்தால் கோட்டை தன் வசம் ஆகிவிடும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டான்.

மேலும் மேற்குப் பக்கமும், தெற்குப் பக்கமும் ஒரே சமயத்தில் தாக்குதல் நடத்தினால் கோட்டை எளிதில் தகர்க்கப்படுவது சர்வ நிச்சயம் என்பதையும் அறிந்தான்.

அதற்காக ஓர் ஏற்பாட்டையும் செய்தான் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்!

## பரங்கியர் அமைத்த பீரங்கி மேடை!

நில மட்டத்திலிருந்து பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைச் சுவரைப் பீரங்கியால் தாக்கித் தகர்ப்பது எளிதான காரியம் அல்ல என்பதை அனுபவத்தால் கண்டு கொண்டான் வெல்ஷ்.

அதனால் மற்றொரு உத்தியைக் கையாண்டான் அவன்.



அவன் தாக்க நிச்சயித்திருந்த கோட்டையின் மேற்குப் பக்கத்தில், அதன் பிரதானப் பகுதிக்கு நேராகச் சுமார் முந்நூறு கெஜ தூரத்தில், நாற்பது அடி நீளம், இருபது அடி அகலம், பன்னிரெண்டு அடி உயரம் கொண்ட ஒரு மேடையை அமைக்க ஏற்பாடு செய்தான்.

அவ் வேற்பாட்டின்படி இரண்டே நாட்களில் அம் மேடை அமைக்கப்பட்டது!

அந்த மேடை— பீரங்கி மேடை—கட்டப்பட்டதை பாஞ்சாலங்குறிச்சி விடுதலை புரட்சி படை வீரர்களால் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா?

அந்த மேடையின் நிர்மாண வேலை அவர்கள் கண்களையும் கருத்தையும் ஓயாமல் உறுத்திக் கொண்டிருந்தது!

அந்த மேடை எந்த நோக்கத்தோடு அமைக்கப்படுகிறது என்பதை அறிந்து கொண்டனர் அவர்கள்.

உடனே அதை அமைத்து முடிக்க விடாமல் கடும் முயற்சிகளில் ஈடுபட்டனர்!

வெடி குண்டுகளை வீசினர்!

துப்பாக்கிகளால் சுட்டனர்!

ஈட்டிகளை எறிந்தனர்!

ஆனல்...அத் தாக்குதல்களுக்கும், இடைவிடாது ஏற்பட்ட இடையூறுகளுக்கும் சளைக்கவில்லை வெள்ளையர்!

அவர்களும் எதிர்த் தாக்குதல்களில் இறங்கினர்.

அத்துடன் பாதுகாவலை பலமாகப் போட்டனர்.

இறுதியில் தாக்குதல்களுக்கும் இடையூறு களுக்கும் ஈடு கொடுத்து, அவற்றை முறியடித்து, பீரங்கி மேடையை இரண்டே நாட்களில் கட்டியே முடித்து விட்டனர் ஆங்கிலேயர்!

அந்த மேடையின் மேல் கோட்டையைத் தகர்ப்பதற்குரிய பன்னிரண்டு பவுண்டர் பீரங்கி ஒன்றும், அதைவிடச் சக்தி வாய்ந்த பெரிய பீரங்கி ஒன்றும் வைக்கப்பட்டன.

பீரங்கிகளையும், அவற்றை இயக்கும் வீரர்களையும் பாதுகாக்க அம் மேடையின்மேல் அறுபது சிப்பாய்கள் காவலாகத் துப்பாக்கியும் கையுமாக நிறுத்தப் பட்டனர்.

அதற்கிடையில் திருச்சியிலிருந்து கர்னல் ஆக்னியூ, மேஜர் ஷெப்பர்ட் ஆகியோரின் தலைமையில் பெரும் படை ஒன்று பாஞ்சாலங் குறிச்சிக்கு வந்து சேர்ந்தது.

அத்துடன், கேப்டன் அஜாட் என்பவனின் கீழ் ஒன்பதாவது படைப் பிரிவு, கேப்டன் டன்னல் என்பவனின் கீழ் பதினாறுவது படைப் பிரிவும் தூத்துக் குடியிலிருந்து கம்பெனியாரால் அனுப்பப்பட்டு, பாஞ்சாலங்குறிச்சியை வந்தடைந்தன.

அப் படைகள் மே மாதம் இருபத்தோராம் நாள் வந்து சேர்ந்தன.

பாஞ்சாலங்குறிச்சியை வந்தடைந்த படைகள் ஒரு நாள் ஓய்வெடுத்துக் கொண்டன—வந்த களைப்புத் தீர.

அடுத்த நாள் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ், மேஜர் காலின்ஸ்மெக்காலே முதலானோர் படைகளுடன்



சேர்ந்து பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்க ஆயத்தமாயின!

# இரவும் பகலும் ஓயாத போர்!

மே மாதம் இருபத்து மூன்றும் தேதி... காலை!

ஆதவன் கிழக்கு வானில் உதயமானான்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் மேற்குப் பக்கத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பீரங்கி மேடையின் மேலிருந்து பீரங்கிகள் பயங்கரமாக முழங்க ஆரம்பித்தன.

பீரங்கிப் படையின் தாக்குதல் இருபத்து மூன்றும் தேதி பகலும், அன்று இரவும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது!

இரவில் போர் ஓய்வு ஏற்பட்டால், அந்த இடைவேளையில், இரவோடு இரவாகக் கோட்டையை எதிரிப் படையினர் எங்கே புதுப்பித்து விடுவார்களோ என்ற அச்சம் தான் இரவும் பகலும் தொடர்ந்தாற் போல வெள்ளையர் போர் நடத்திய காரணம்!

இருபத்து நான்காம் தேதி...காலை!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் பாதுகாப்பு முயற்சிகளை முறியடிக்கத் தாக்குதல்கள் கடுமையாகத் தொடரப்பட்டன ஆங்கிலேயரால்.

மேடை மேல் வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த பீரங்கிகள் தங்கள் வேலையைத் திறம்படச் செய்தன.

கோட்டைச் சுவரை நோக்கிப் பீரங்கிக் குண்டுகள் அதி வேகத்துடன் பாய்ந்து,சுவரைச் சேதப்படுத்தின!

கோட்டைச் சுவரின் மேல் மட்டுமல்லாமல், கோட்டைக்குள்ளும் பீரங்கிக் குண்டுகள் பாய்ந்து, பறந்து போய் விழுந்தன!

அதிக அழிவை ஏற்படுத்தின!

அதற்கெல்லாம் காரணமாக அமைந்தது, கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் முன் யோசனையோடு திட்டமிட்டமைத்த பீரங்கி மேடை!

மேடையின் மேலிருந்து பீரங்கிகள் வெடித்ததாலேயே, அவற்றின் குண்டுகள் கோட்டைச் சுவரை மேல் நோக்கித் தாண்டி, கோட்டைக்குள் பாய்ந்து, அழிவை ஏற்படுத்த ஏதுவாயிற்று.

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷின் யோசனையும், திட்டமும் வீண்போக வில்லை!

அவன் எதிர்பார்த்த அளவுக்கு அதிகமாகவே வெற்றியைத் தந்தது!

இறுதியில் அன்று பிற்பகல் ஒரு மணி சுமாருக்குப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் மேற்குப் புறம் முழுவதும் தகர்ந்தது!

கோட்டைச் சுவர் தகர்ந்த பகுதி முப்பது அடி நீளமும், பதினைந்து அடி உயரமும் கொண்டதாக இருந்தது.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைச் சுற்றி, மேற்குப் பக்கம் தவிர, மற்ற மூன்று பக்கங்களில் கோட்டைச் சுவர் பன்னிரண்டு அடி உயரமே இருந்தது.

மேற்குப் புறம் மட்டும் சுவர் பதினைந்து அடி உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது.



அந்தப் பக்கம், அந்த விசேஷமான சுவரின் அமைப்பே கர்னல் ஜேம்ஸ்வெல்ஷின் கவனத்தைக் கவர்ந்தது.

கவர்ந்தது மட்டுமல்லாமல், அங்கே கோட்டைச் சுவர் அளவுக்கு மேல் உயரமாக இருந்ததால், கோட்டைக்குள் அதன் முக்கியத்துவத்தையும் அவனுக்கு உணர்த்தியது!

இதுவே பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் மேற்குப் பக்கம் பீரங்கி மேடையை அமைத்துப் போரிடக் காரணமாயிற்று!

கோட்டைச் சுவரின் அமைப்பு அற்புதமாக இருந்தது!

சுவரின் கீழ்ப்பாகம் குறுக்கு வாட்டில் பதினைந்தடி அகலம் கொண்டதாக இருந்தது.

மேலே செல்லச் செல்ல அகலம் குறுகி, மூன்றடி அகலத்தில் அமைக்கப்பட்டிருந்ததுடன், அதன் மேல் இரட்டைச் சுவர்களாகப் பிரிந்து நின்றது.

அவ்விரு சுவர்களுக்கிடையில் நடுவில் பள்ளமான இடைவெளிப் பாதை சென்றது.

அந்த இடைவெளிப் பாதையில்—மூன்றடி அகலப் பாதையில்— ஒரே சமயத்தில் ஒருவருக்கு மேல் போக முடியாது.

அந்தப் பாதை ஐந்தடி ஆழம் கொண்டதாகவும் இருந்தது.

அத்தகைய இடைவெளிப் பாதை கோட்டைச் சுவரைச் சுற்றிலும் அமைக்கப் பட்டிருந்தது.

அத்துடன், அந்த இடைவெளிப் பாதையில் கோட்டை வீரர்கள் வரிசையாக அணி வகுத்து மறை

வாக நின்று, பகைவர்களைத் துப்பாக்கிகளும் ஈட்டி களும் கொண்டு தாக்குவதற்குத் தோதாகவும், பகை வரின் பேராயுதங்களின் தாக்குதல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளப் பாதுகாப்பாகவும் இருந்தது.

அத்தகைய அற்புதமான அமைப்பைக் கம் பெனிப் படையினர் பிறகுதான்—கோட்டை தகர்க்கப் பட்ட பின்னர்தான்—தெரிந்து கொண்டனர்.

பாஞ்சாலங்குறிச்சி விடுதலை வேட்கை வீரர்கள் அத்தகைய பாதுகாப்பான இடத்தில் அணிவகுத்து நின்று, துப்பாக்கிகளையும், ஈட்டிகளையும் பகைவரை நோக்கிப் பயன்படுத்தியதால் தான் அவர்கள் அதிக அழிவிற்கும் இழப்பிற்கும் உள்ளாகாமல் போரிட முடிந்ததுடன், தீவிரமாகக் கோட்டையைப் பாது காக்க முடிந்தது!

அத்துடன் போர் ஆரம்பத்தில் பரங்கிப் படை யினர் வடபுறத்துச் சுவரைத் தகர்த்தபின் கோட்டைச் சுவரின்மேல் ஏறியவுடனே—அந்த நிமிடமே—அவர்கள் அந்த இடைவெளிப் பாதையில் பதுங்கியிருந்த பாஞ்சைக் கோட்டை வீரர்களால் ஈட்டிகளால் குத்தப் பட்டும், வாட்களால் வெட்டப்பட்டும், கோட்டைக்கு வெளியே வீசியெறியப்பட்டதில் வியப்பொன்றும் இல்லை என்று வெள்ளையர் அறிந்து கொண்டனர்.

பகைவர் எவரும் பாஞ்சைப் பதி வீரர்களை நெருங்க முடியாது!

அப்படியே நெருங்கினாலும் உயிர் தப்ப முடியாது.

அவ்வாறு அவர்கள் கோட்டைச் சுவரை அமைத்துக்கொண்ட விதமும், அதன் மூலம், போரிடும் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு, கோட்டையையும்



பாதுகாத்த விதமும் பெரிதும் பாராட்டுக்குரியது என்றும், அவை யெல்லாம் வரலாற்றில் இடம் பெற வேண்டிய சிறப்பு அம்சங்கள் என்றும் கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ் மனம் விட்டுக் கூறியதுடன், தன் குறிப்பிலும் எழுதியிருக்கிறுன்.

அத்துடன், அந்தப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை சிறியதாக இருந்தும், மண்ணுல் கட்டப்பட் டிருந்தும், அதன் விடுதலைப் புரட்சி வீரர்களிடம் போதிய போர்த் தளவாடங்கள் இல்லாமலிருந்தும், தங்கள் பலம் பொருந்திய படைகள் இரண்டு மாதங் கள் அந்த மண் கோட்டையின் முன் மண்டியிட்டுப் போரிடும் அவமானம் ஏற்பட்டு விட்டதே என்று கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் பொருமினுன்.

அவனுடன் சேர்ந்து மேஜர் காலின்ஸ்மெக்காலே யும் பொருமினுன்!

மேலும் தங்கள் போர் அனுபவத்தில் அற்பமாகக் கருதிய — ஆனல் தங்கள் கருத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாக—மிகுந்த வலிமையுடைய அந்தப் பாஞ் சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்க ஏறக் குறைய இரண்டு மாதங்கள் ஆனதற்கான காரணத்தையும் உயத்துணர்ந்தனர் கர்னலும், மேஜரும்.

அவர்கள் உய்த்துணர்ந்த காரணம்?

தங்கள் பீரங்கிப் படைகளிலும், துப்பாக்கிப் படை பலத்திலும் பற்றக்குறை எதுவும் அவ்வளவாக இல்லை என்றலும், கோட்டையை மண் வீடு என்று நினைத்துப் போரிட்ட அதீதமான நம்பிக்கையே!

ஒரே பீரங்கிக் குண்டால் மண் கோட்டையைத் தாக்கித் தகர்த்துத் தரை மட்டமாக்கிவிடலாம் என்று

கொண்ட தப்பெண்ணமும், போட்ட தப்புக் கணக்குமே!

கொண்ட எண்ணம் தப்பானதற்கும், போட்ட கணக்கில் தப்பு ஏற்பட்டதற்குக் காரணமும் ஆங்கிலேயருக்குத் தெரிந்தது!

கோட்டையின் — அற்பமான சிறிய மண் கோட்டை என்று தவருகத் தீர்மானித்த கோட்டையின்—அற்புதமான அமைப்பும், கோட்டைச் சுவர்களின் வலிமையும் காரணமாக இருந்தது ஒரு புறம்!

அத்துடன் கோட்டையின் விடுதலைப் புரட்சி வீரர்களின் இரும்பு நெஞ்சமும், சக்தி வாய்ந்த ஒற்றுமை பலமுமே காரணம்!

இவற்றை யெல்லாம் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் ஒளிவு மறைவு ஏதுமின்றி, உள்ளதை உள்ளபடி, பகிரங்கமாக, பட்டவர்த்தனமாக எழுதியிருக்கிருன் தன் குறிப்புகளில்.

தென்னுட்டில் இருந்த மற்றப் பாளையக்காரர்களைப் போலன்றி, பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தார் தங்களுக்கு வரி கொடுக்கமாட்டோம் என்று வீறு கொண்டெழுந்து வீரம் பேசியதாலோ, தங்கள் கட்டளைக்கு அடி பணிய மறுத்ததாலோ, போரில் தங்களை எதிர்க்கத் துணிந்ததாலோ பாஞ்சைப் பதியினர் மேல் வர்மம் கொள்ளவில்லை, நல்ல உள்ளம் கொண்ட ஜேம்ஸ்வெல்ஷ்!

அதற்கு மாருக, அவ் வீரர்களின் போர்த் திறமையையும், நெஞ்சுறத்தையும், நேர்மையான போக்கையும் மனமாரப் பாராட்டி யிருக்கிருன் வெல்ஷ்.



அவர்களை எதிரிகள் என்று அவன் ஏசவில்லை! பகைவர்கள் என்று எண்ணி அவர்களைப் பழிக்கவில்லை!

அதற்கு மாருக, பாஞ்சைப் பதியினரைப் பற்றி அளென் போற்றியே எழுதியிருக்கிருன், தான் எழுதிய குறிப்புகளில்!

அக் குறிப்புகளில் தன்னைப் பற்றி எழுதியுள்ள இன்னெரு குறிப்பு அவனுடைய உள்ளுணர்வையும், மனச்சாட்சியையும் வெளிப்படுத்துவதுடன், மிகவும் மெச்சத் தகுந்ததாகவும் இருக்கிறது!

அப்படி வெல்ஷ் எழுதிய குறிப்பு இதுதான்:

ராணுவத்தில் சேர்ந்த நான் படிப்படியாக உயர்ந்து கர்னல் பதவியை எட்டிப் பிடித்தேன்.

கம்பெனிக்காரர்களிடம் மாதா மாதம் ஊதியம் வாங்குவதற்காகக் கர்னல் என்னும் உத்தியோகத்தில் கடமையாற்றுகிறேன்.

அந்தக் கடமையில் ஒரு பாகம்தான் பாஞ்சாலங் குறிச்சிப் போரில் நான் பங்கேற்பது.

வாணிகம் செய்ய வந்த வெள்ளையர் நாடாள ஆசை கொண்டனர்.

அதற்கு நாட்டின் நிலைமை சாதகமாக இருந்தது உண்மைதான்!

அந்த ஆசை ஆங்கிலேயருக்குப் பேராசையாக மாறிவிட்டது வருந்தத் தக்கது.

அந்தப் பேராசையின் காரணமாகத்தான் தென்னுட்டிலும் வரி வசூலிக்கும் உரிமையை அவர்கள் வலியப் பெறும் விந்தை!

அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது தென்னாட்டுப் பாளையக்காரர்களின் உரிமை!

அந்த உரிமையைப் பாஞ்சாலங்குறிச்சியார் வலியுறுத்துவதில் என்ன தவறு?

வரி கொடுத்து, அதன் மூலம் ஆங்கிலேயருக்கு அடிமையாக வாழ விருப்பம் தெரிவித்தனர் சில பாளையக்காரர்கள்.

அது அவர்களின் மனோ பலவீனத்தையோ, நாடாளும் பலவீனத்தையோ தான் வெளிப்படுத்து கிறது.

ஆனால் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் நாட்டுப் பற்றுடையவர்கள்! மனோ தைரியம் மிக்க வர்கள்! நேர்மை உள்ளம் கொண்டவர்கள்! போர்த் திறன் உடையவர்கள்!

அப்படிப்பட்டவர்கள் ஆங்கிலேயருக்கு வரி கொடுக்கமுடியாது என்று மறுப்பதில் நியாயம் இருக்கிறது.

ஆனால் அது ஏனோ ஆங்கிலேயருக்கு நியாய மாகப் படவில்லை!

வரி தர மறுத்ததால் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை ஏற்கனவே நாசம் செய்து, தரை மட்டம் ஆக்கினர்!

ஆனால் வீறு கொண்டெழுந்த கட்டபொம்மனின் தம்பியரும், பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தாரும் அழிந்த அக்கோட்டையை மீண்டும் மெச்சத் தகுந்த முறையில் கட்டியாண்டனர்.

அதையும் விட்டு வைக்கக்கூடாது என்று ஆங்கிலேயர் ஆங்காரம் கொண்டு, அழிக்கத் திட்ட மிட்டுப் படைகளை அனுப்பினர்.



அப் படைகளுக்குத் தலைவனாக இருக்கவேண்டிய துரதிர்ஷ்டம் எனக்கு ஏற்பட்டது.

இருந்தாலும் என் கடமையை நான் செய்ய வேண்டியவனாக இருக்கிறேன்.

அது தவிர்க்க முடியாததும்கூட!

இல்லாவிட்டால் நான் வாங்கும் ஊதியத்திற்கு நியாயம் இருக்காது.

அப்படி ஊதியம் பெறும் நான் உறுதியோடு கடமையாற்றுவதுதான் கண்ணியமும்கூட!

ஆனால் நான் கர்னல் என்ற பதவியில் படைகளை நடத்தி வந்து, பாஞ்சாலங்குறிச்சியின்மேல் போர் தொடுக்காமல், வெறும் ஆங்கிலேயச் சுற்றுப் பயணி யாக, போரின் போது பார்வையாளனாக மட்டும் பாஞ்சாலங்குறிச்சியில் தங்கியிருந்தால், நான் பாஞ் சைப் பதியாரின் நியாயத்தைக் கருதி அவர்கள் பக்கம் சேர்ந்து கொண்டு, அந்த மண்ணில் எந்தவிதச் சொந்தமும் கொண்டாட உரிமையற்ற ஆங்கிலே யரை ஓட ஓட விரட்டியடிக்கப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையினருக்கு என்னாலான உதவிகளைச் செய்திருப்பேன். அப்படி உதவி செய்ய வாய்ப்பு எனக்கு எதுவும் கிடைக்கா விட்டால், பாஞ்சைப் பதி யாரின் வெற்றிக்காகவாவது கர்த்தரைப் பிரார்த்தனை செய்திருப்பேன்!''

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷின் இந்த மனச்சாட்சி வெளிப்பாடு, உள்ளுணர்ச்சியின் உண்மைத் தன்மை மெச்சத்தகுந்ததல்லாமல் வேறென்ன?

உண்மையில் ஜேம்ஸ்வெல்ஷ் கர்னல் பதவியில் படைகளைக் கொண்டு வந்து, பாஞ்சாலங்குறிச்சிக்

கோட்டையைத் தகர்க்கும் கடமைப் பணியில் ஈடு பட்டதும், அவர் வெறும் ஆங்கிலேயச் சுற்றுப் பயணி யாகவோ, போரின் போது பார்வையாளராகப் பாஞ்சாலங்குறிச்சியில் தங்கியிராதது அவரே சொன்னது போல அவரது துரதிர்ஷ்டம் மட்டும் அல்ல, பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தாரின்—முக்கிய மாக, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைத் தலைவரான ஊமைத்துரை, மற்றும் அவருடைய உடன் பிறப்பான துரைசிங்கம் ஆகியோரின்—துர்ப்பாக்கியமும் கூட!

சரி, இனி போரைப் பற்றிப் பார்ப்போம்.

## கோட்டையின் தென்புறத் தாக்குதல்!

**பா**ஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் மேற்குப் பக்கம் பீரங்கித் தாக்குதல் மும்முரமாக நடந்த அதே நேரத்தில், கோட்டையின் தென்புறத்தில் மற்ரெரு தாக்குதலும் நடந்து கொண்டிருந்தது!

கேப்டன் டிராட்டரின் படையும், கர்னல் ஆக்னியூவின் தலைமையில் திருச்சியிலிருந்து வந்த பெரும் படையும், ஏற்கனவே போரில் ஈடுபட்டிருந்த எட்டப் பனின் படையுடன் அதற்கப்புறம் வந்த படையும் சேர்ந்து கோட்டையைத் தகர்த்தெறியும் படு பாதக மான பணியில் தீவிரமாக ஈடுபட்டன.

அங்கும் சக்தி வாய்ந்த பீரங்கிகள் முழங்கின!

அதே பக்கம் மே மாதம் இருபத்து நான்காம் தேதி பிற்பகல் இரண்டு மணி சுமாருக்குக் கோட்டைச் சுவர் பொல பொல வென்று சரிந்தது!



கோட்டைச் சுவர் தகர்க்கப்பட்டதும் கோட் டைக்குள் தென்புறம் அமைக்கப்பட்டிருந்த அரங்க மகால், இலட்சுமி விலாசம் ஆகிய மாளிகைகள் அதிர்ந்தன!

கம்பெனிப் பட்டாளம் கும்மாளமடித்துக் கொண்டு, குதி போட்ட வண்ணம் தகர்ந்து வீழ்ந்த கோட்டை யின் மதிற் சுவரின் வழியே முன்னேறியது.

பட்டாளத்துச் சிப்பாய்கள் மதிற் சுவரைத் தாண் டியதுதான் தாமதம், அவர்களுடைய தலைகள் பல பொல பொல வென்று தரையில் உருண்டன!

மாம்பிஞ்சுகள் பலத்த காற்ருல் உதிர்ந்து விழுவதைப் போல முப்பத்திரண்டு தலைகள் வெட்டி எறியப்பட்டன பாஞ்சைக் கோட்டைக் காவல் வீரர்களால்.

அந்தப் பயங்கரக் காட்சியைக் கண்டதும், ஒன்று திரண்டு முன்னேறிய சிப்பாய்கள் திகிலோடு பின் வாங்கினர்!

பின்னல் இருந்த வெள்ளையர் படையினர் மிரண்டு நின்றனர்!

கோட்டை அதிர்ந்தது என்று ஆனந்தமும், கோட்டைச் சுவர் தன் பீரங்கிப் படை வீரர்களால் தகர்த் தெறியப்பட்டது என்று தற்பெருமையும் கொண்ட வெள்ளையர் படைத் தலைவன் கர்னல் ஆக்னியூ, தனது படையில் ஒரே நொடியில் முப்பத் திரண்டு பேர் எமனுலகை எட்டிப் பிடித்ததைக் கண்டு கதி கலங்கினன்!

கதி கலங்கியதுடன் கொதித்து குமுறிக் கோபமும் கொண்டான்!

அக்கினிப் பிழம்பாக மாறினன் ஆக்னியூ!

அது ஆக்னியூவைப் பொருத்தவரை புதிய அனுபவம்!

ஏற்கனவே கோட்டைப் படையினருடன் முதல் நாள் போரில் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷின் பீரங்கிப் படையால் கோட்டையின் வடக்குப் புறச் சுவரைத் தாக்கித் தகர்த்தபோது, மேஜர் மெக்காலேயின் படை வீரர்கள் இடிந்து சரிந்த கோட்டைச் சுவரைத் தாண்டி உள்ளே புக முயன்றபோது, அவர்கள் அடைந்த கதியைப் பற்றியும், பலர் வாள், வேல், துப்பாக்கிகளால் வெட்டப் பட்டு, குத்தப் பட்டு, சுடப் பட்டு,கோட்டைக்கு வெளியே தூக்கி எறியப் பட்டதையும், கர்னல் ஆக்னியூவால் எப்படி அறிந்திருக்க முடியும்?

ஆகவே ஒரே நொடியில் முப்பத்திரண்டு பரங்கியரின் தலைகள் பறங்கிக் காய்களைப் போலப் பாஞ்சைப் பதி வீரர்களால் துண்டிக்கப்பட்டு, வீழ்த்தப்பட்ட காட்சி ஆக்னியூவை மட்டுமல்ல, அங்கிருந்த மற்றப் படை வீரர்களையும் திகிலடையச் செய்த காட்சியாகும்!

கோட்டையின் தென்புறம் நடந்த அந்தக் கடும் போரில் நிகழ்ந்த ஓர் அதிசயச் சம்பவம் குறிப்பிடத் தக்கது? மறப்பதற்கு அரியது!

கோட்டைச் சுவர் தகர்ந்த போது, வெள்ளையர் படை வீசிய குண்டால் தாக்குண்டு நாபாவு என்னும் பாஞ்சைப் பதி வீரன் கோட்டைச் சுவரின் மேலிருந்து கீழே தரையின்மேல் உருண்டு வீழ்ந்தான்!



படுகாயமுற்று, அப்படிக் கீழே வீழ்ந்த வாலிபக் காளையான நாபாவுடைய கரம் பகைவரை வெட்டி வெட்டிச் சாய்த்ததால் மெருகேறிப் பளபளவென்று மின்னிய வாள் ஒன்றை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தது!

அப்போது நாபாவு வீழ்ந்த இடத்திற் கருகில் குதிரை மீது அமர்ந்திருந்த ஒரு ஆங்கிலேயப் படை அதிகாரி அவனை அணுகினன்.

"பாஞ்சாலங்குறிச்சி வீரா! நீயோ படுகாயமுற்றுக் கீழே வீழ்ந்து கிடக்கிருய். உன் உயிர் உடலை விட்டுப் பிரிய இந்த நிமிஷமோ, அடுத்த நிமிஷமோ என்று நேரம் பார்க்கிறது! உன் கரம் பற்றியிருக்கும் வாளால் உனக்கு இனி ஒரு பயனும் இல்லை! அதனல் எனக்கு அதைக் கொடு! இறக்கும் போதாவது நீ பிறருக்கு தர்மம் செய்த புண்ணியம் கிடைக்கும். இதை உங்கள் இந்து சாஸ்திரம் சொல்லியிருக்கிறதல்லவா?" என்று எகத்தாளமாகச் சிரித்துக் கொண்டே சொன்னன் அதிகாரி.

அந்த ஆங்கில அதிகாரியின் கேலிப் பேச்சைச் கேட்ட நாபாவுக்கு அந்த நிலையிலும்—உயிர் ஊசலாடும் அந்தத் துன்பமயமான அந்த நிலையிலும்—ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது!

உடனே அவன், "ஐயா துரைமகனே! என் அடிவயிற்றில் குண்டடிபட்டு, குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கிறேன் நான். மரண வேதனையால் அவஸ்தைப்படும் நான் எப்படி எழுந்து வந்து, குதிரையின் மேல் உட்கார்ந்திருக்கும் உங்களிடம் இந்த வாளைத் தர முடியும்? நீங்கள் இந்த வாளின்

மேல் தீரா ஆசை கொண்டு, இதை வேண்டுமென்று சொல்வதால் நிச்சயம் இதை உங்களுக்குத் தருகிறேன். நீங்கள் சொன்னது போல, சாகும்போது தர்மம் செய்தால் நிச்சயம் புண்ணியம் உண்டுதான்! அதனால் குனிந்து இதை வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்றான்.

தன் எகத்தாளப் பேச்சிற்கு அவன் எதார்த்தமாகவே வாளைக் கொடுக்கச் சம்மதிக்கிறான் என்று எண்ணி எக்களித்தான் அந்த அதிகாரி.

உடனே வாளை வாங்கக் குதிரையின் மேல் உட்கார்ந்தவாறே கீழே குனிந்தான்!

குனிந்ததுதான் தாமதம்!...

நாபாவு தன் கையிலிருந்த வாளால் அந்தப் பரங்கிப்படை அதிகாரியின் தலையைப் பறங்கிக்காயை வெட்டுவது போல வெட்டித் தள்ளினான்!

மறுகணம் அவன் தலை தரையில் உருண்டது!

அத்துடன் திருப்தி அடைந்தானா நாபாவு?

அடுத்து, அந்த அதிகாரி ஏறியிருந்த குதிரையையும் அதே வாளால் வெட்டித் தள்ளினான்!

பின்னர் குருதி படிந்த வாளை முத்தமிட்டபடி வீர சொர்க்கம் புகுந்தான் வீரன் நாபாவு!

## எட்டப்பன் போட்ட எதிர்த் திட்டம்!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் தென்புறச் சுவர் பீரங்கித் தாங்குதலால் தகர்ந்து வீழ்ந்ததும், கோட்டையின் விடுதலை வேட்கை வீரர்கள் தங்கள் எதிர்த் தாக்குதலை நிறுத்தியவர்கள் அல்லர்!



நிலவறைகளில் மறைந்திருந்தபடியே கம்பெனிப் படையினரைக் கடுமையாக வேலாலும் வாளாலும் தாக்கி, எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தனர்.

வீசப்பட்ட வேல்களும், சுடப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளும் பகைவரான பரங்கிப் படையினரின் மீது பாய்ந்து வந்து தாக்கிக் கொண்டிருந்தன!

ஆனால்... அவ் வாயுதங்கள் எங்கிருந்து வருகின்றன? எப்படிப் பாய்ந்து வருகின்றன? அவற்றை எய்கிறவர்கள் யார்? அவர்கள் எங்கே இருக்கின்றனர்? என்பதையெல்லாம் பரங்கியர் படையினரால் கண்டுகொள்ள முடியவில்லை!

வழக்கம் போல வெள்ளையரே அதை வியந்து போற்றினர்!

அத்தகைய வியப்பிற்குள்ளான கர்னல் ஆக்னியூ எட்டப்ப நாயக்கனிடம், ''இப்படி மறைந்து நின்று மர்மப் போர் புரிகின்றனரே பாஞ்சைப்பதி வீரர்கள்? அவர்கள் அப்படி மறைந்து நின்று போர் புரிய கோட்டைக்குள் எத்தனை நிலவறைகள் இருக்கும்? எங்கே இருக்கும்? எப்படி இருக்கும்?'' என்று வினாக்களை அடுக்கினான்.

அதற்கு எட்டப்பன், ''நிலவறைகள் எத்தனை இருக்கும், எங்கே இருக்கும், எப்படி இருக்கும் என்பதையெல்லாம் நம்மால் கண்டு கொள்வது கடினம், துரை அவர்களே!'' என்றான்.

''அப்படியானால் எதிரிகளின் இந்த மர்மத் தாக்குதல்களிலிருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ள என்ன வழி?'' என்று கேட்டான் கர்னல் ஆக்னியூ.

"நம்மைத் தற்காத்துக் கொள்ள மட்டுமல்ல, பாஞ்சைப் பதியினரை வெல்லவும் படு சூழ்ச்சியால் தான் முடியும்!"

"அப்படியானல் அது என்ன சூழ்ச்சி?"—வினவினன் வெள்ளையர் படைத் தளபதி ஆர்வத்துடன்.

அந்தச் சூழ்ச்சி என்ன என்பதை எடுத்துச் சொன்னன் எட்டப்ப நாயக்கன்.

எட்டப்ப நாயக்கன் எடுத்துச் சொன்ன சூழ்ச்சியின்படி, மிளகாய்ப் பொடியைக் கரு மருந்தோடு கலந்து, சுரைக் குடுக்கைக்குள் அடைத்து, கெட்டிப் படுத்தி, அதற்குத் தீ வைத்து, கோட்டைக்குள் எறிந்தனர் கம்பெனிப் படையினர்.

அத்துடன் கோட்டைச் சுவரையொட்டி மிளகாய் வற்றல்களைக் குவித்து, கரு மருந்தையும் அவற்றுடன் கலந்து தீ வைத்தனர்.

கோட்டைக்குள் வீசப்பட்ட சுரைக் குடுக்கைகள் வெடித்தன!

அவற்றிலிருந்து கிளம்பிய காரத்தோடு கூடிய புகை கோட்டைக்குள் நாலா புறமும் பரவியது!

கோட்டைக்குள் இருந்த வீரர்களும், மற்றவர்களும் அந்தப் புகையையும், நெடியையும் தாங்காமல் மூச்சுத் திணறி அல்லலுற்றனர்!

பலர் மயக்க முற்றுச் சாய்ந்தனர்!

அத்துடன் கோட்டைச் சுவரை அடுத்துக் கிளம்பிய புகை நெடி கோட்டை மதிற் சுவரின் மேல் இருந்த காவல் வீரர்களையும், எதிர் தாக்குதலில் ஈடுபட்டிருந்த வீரர்களையும் கிறக்கமடையச் செய்தது!



எட்டப்பனின் திட்டத்தில் எள்ளளவும் தவறு ஏற்படவில்லை.

பரங்கியின் எதிரிப் படையினர் படு தோல்வியைத் தழுவினர்!

எட்டப்பனின் சூழ்ச்சித் திறனல் வெள்ளையர் வெற்றி முரசு கொட்டினர்!

தன் இனத்தாரை அழிக்கச் சூழச்சி செய்து திட்டம் தீட்டி, அதைச் செயலாற்றவும் வழி வகுத்த எட்டப்பனுக்கு நிகர் எட்டப்பனே!

அவனுக்குத் தெரியாதா அவர்களை அழிக்கும் வழி?

பாம்பின் கால் பாம்பறியுமே!

சூழ்ச்சி செய்து, பாஞ்சாலங்குறிச்சி வீரர்களை வீழ்ச்சி அடையச் செய்த எட்டப்பனை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும் என்று பாராட்டினர் பரங்கியர்!

அந்தப் புகழ்ச்சியையும், பாராட்டையும் மகிழ்ச்சியோடு ஏற்று மந்தகாசம் செய்தான், தன்மானத்தை ஆங்கிலேயரிடம் அடகு வைத்த அக்கிரமக்காரனை எட்டப்ப நாயக்கன்!

## பாஞ்சைக் கோட்டை பகைவர் வசமாயிற்று!

மேற்குப் புறமும், தெற்குப் புறமும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தகர்த்த பிறகு, தங்கள் எதிரிகளைச் சமாளிக்கக் கூடிய அளவுக்கு நிலைமை இடம் கொடுத்ததால் துப்பாக்கி வீரர்களைக் கொண்ட படைப் பிரிவைக் கோட்டையை நோக்கிச் செலுத்தினுன் வெள்ளையர் தளபதி கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்!

அதேபோல, கர்னல் ஆக்னியூவின் கீழ் இருந்த துப்பாக்கிப் படை. வீரர்களும் கோட்டையை நோக்கி அணிவகுத்து சென்றனர்!

அப் படைகளுடன் மலேயாவிலிருந்து வந்த போர் வீரர்களும், இலங்கையிலிருந்து வந்த படை வீரர்களும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அத்தகைய பெரிய படை – பல படைப் பிரிவு களைக் கொண்ட பெரிய படை—தங்கள் கோட்டையை நோக்கிப் பயங்கரமாக அணிவகுத்து வருவதைக் கண்டனர் பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள்.

ஏற்கனவே கோட்டை தகர்க்கப் பட்டதால் மனங் குன்றிப் போயிருந்த பாஞ்சைப் படை வீரர்கள், தங்களை நோக்கி வரும் படைகளின் அணிவகுப்பைக் கண்டு கதி கலங்கினார்கள்!

போரில் பின் வாங்கினார்கள்!

ஆனால் அவர்கள் அப்படிப் பின் வாங்கியதும் கூட காரணத்தோடுதான் என்று சொல்ல வேண்டும்.

அது என்ன காரணம் என்பதை ஆங்கிலேயரும் அறிந்து கொண்டனர்.

அவர்கள் தங்கள் கடமையை இன்னும் ஊக்கத் துடனும், மிகுந்த தைரியத்துடனும் செயலாற்ற முற் பட்டும், தகர்ந்து வீழ்ந்த கோட்டையை பாதுகாக்க வும் அப்படிப் பின் வாங்கினார்கள்!

கோட்டைக்கு முன்னாலும், சுற்றிலும் அடர்த்தி யாக வளர்ந்திருத்த முட்புதர்களான அரண் வேலியை வெட்டி அகற்றி, வெகு விரைவில் கோட்டையை நோக்கிப் படைகள் முன்னேறின.



ஆனால் கோட்டையின் மேல் ஏறி, கோட்டைக் குள் சென்றடைய பல மணி நேரத்திற்கு மேல் தாம தம் ஏற்பட்டது.

தகர்ந்து வீழ்ந்த கொத்தளங்களிலிருந்தும் அவர்களை நோக்கிப் பாஞ்சாலங்குறிச்சிப் படை வீரர்கள் துப்பாக்கியால் சுட்டனர்!

கோட்டைச் சுவர்களின் மேல் மறைந்து நின்ற வேல் தாங்கிய வீரர்கள் திடீரென்று அவர்களைச் சூழ்ந்து தாக்கியதாலுமே அவ்வாறு தாமதம் ஏற்பட்டது!

அத்தகைய கடுமையான போராட்டத்திற்குப் பின்னர், இறுதியில் தகர்ந்து வீழ்ந்த கோட்டைச் சுவரின் கீழ் தப்பிச் செல்ல முடியாதபடி சிக்கிக் கொண்டனர் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் விடுதலைப் புரட்சி வீரர்கள்!

அப்படிச் சிக்கிக் கொண்ட அனைவரையும் கோட் டைக்குள் புகுந்த—சுவர் ஏறிக் கோட்டைக்குள் குதித்த —கம்பெனிப் படையினர் ஈவு இரக்கமின்றித் துப்பாக்கி களால் சுட்டுக் கொன்றனர்!

அதன் பின்னர் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை யினரின் எதிர்ப்பு அவ்வளவு பலம் பொருந்தியதாக இருக்கவில்லை!

ஆயினும் வெள்ளையரின் வெடி குண்டு வீரர்களைக் கோட்டையின் ஈட்டிப் படையினர் ஓர் இடத்தில் தாக்கிப் பலரைக் கொன்றனர்!

கோட்டை வீரர்களிடம் பெரும் கொந்தளிப்பும், கலவரமும், குழப்பமும் ஏற்பட்டன!

ஏற்கனவே கோட்டைக்குள் இருப்பவர்களை கோட்டையை விட்டு வெளியேறி விடும்படி ஊமைத் துரை எச்சரித்திருந்தார்.

அதன்படி அவர்களில் பாதிப்பேர் இரகசிய பதுங்கு வழிகள் மூலம் கோட்டையை விட்டு வெளி யேறி யிருந்தனர்!

பாஞ்சை அதிபதியை விட்டுப் பிரிந்து செல்ல மனமில்லாதவர்களான மீதிப் பாதிப் பேர் அவருட னேயே கோட்டையில் தங்கினர்.

அவர்களிலும் பலர் வெள்ளையரை எதிர்த்து நடந்த போரில் வீர மரணம் அடைந்தனர்.

ஆரம்பத்தில் ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகை யிட்டபோது அதனுள் நாலாயிரத்து நூறு பேர் வீரர்கள் தான் இருந்தனர்.

அதுவரை நடந்த போரில் சுமார் நூற்று முப்பது பேர் வீர மரணம் எய்தினர்.

மீதி இருந்தவர்களில் தான் பாதிப்பேர் ஊமைத் துரையின் உத்தரவுப்படி பதுங்கு வழிகளில் கோட் டையை விட்டு வெளியேறினர்.

கோட்டைக்குள் இன்னும் இருந்த மிச்சம் பேர் களில் பலர் துப்பாக்கிக் குண்டுகளாலும், வெடி குண்டு களாலும் படுகாயம் அடைந்தவர்களும், கால் கைகளை இழந்து, அங்கவீனமாக இருந்த வீரர்கள்கூட, தாங்கள் வெள்ளையருடன் போரிட்டு மடிவது என்று கங்கணம் கட்டிக் கொண்டவர்களாய், ஆயுத பாணிகளாக வீராவேசத்தோடு நின்றனர்!

காயம் படாத வீரர்களையும், காயம் பட்டும் தப்பி யோடத் தகுந்தவர்களையும் கோட்டையை விட்டுத் தப்பியோடும்படி உத்தரவிட்டார் ஊமைத்துரை.



இனிமேல் கோட்டைக்குள் இருந்தால் பலன் ஏது மில்லை என்று கண்ட பாஞ்சைப்பதி வீரர்களில் பலர் எவ்வளவு விரைவாகத் தப்பி ஓட முடியுமோ அவ்வளவு விரைவாக ஓடலாயினர்!

ஆனால் கோட்டையை விட்டு அவர்கள் வெளி யேறியவுடனே இரு கூட்டமாகப் பிரிந்து பின் வாங்கினர்!

காரணம், கேப்டன் டேவ்டன் என்பவனின் கீழ் இருந்த குதிரைப் படையும், லெஃப்டினென்ட் கிராண்ட் என்பவனின் கீழ் இருந்த குதிரைப் படையும் தப்பியோட முயன்ற பாஞ்சாலங்குறிச்சி வீரர்களில் ஒரு கூட்டத்தினரை முன்னும் பின்னும் முற்றுகை யிட்டு, அக் கூட்டத்தில் இருந்த சுமார் அறுநூறு பேரைத் தடுத்து நிறுத்தி வளைத்துக் கொண்டனர்.

அதற்குள் மீதம் இருந்த மற்றும் ஒரு கூட்டத்தி னர்—சுமார் ஆயிரந்து ஐந்நூறு பேர்—குதிரைப் படையினரிடம் அகப்படாமல் தப்பி ஓடிவிட்டனர்!

கோட்டைக்குள் எஞ்சி இருந்தவர்களில் பலர் அங்கங்கே பதுங்கிக் கொண்டனர்.

சிலர் ஆயுதங்கள் ஏந்தி, வருவது வரட்டும், வீர சொர்க்கம் புகலாம் என்ற துணிச்சலுடன் அங்கங்கே நின்றனர்.

அதன் பின்னர் எதிர்ப்பு ஏதுமின்றி, வெற்றிப் பெருமிதத்துடன் வெள்ளையர் படையினர் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைக்குள் புகுந்தனர்!

கோட்டை கம்பெனிப் படையினர் வசமாயிற்று!

# கோட்டைக்குள் குலை நடுங்கும் காட்சிகள்!

கோட்டைக்குள் புகுந்த கம்பெனிப் படை வீரர்களில் முதன் முதலாகச் சென்றவன் மேஜர் காலின்ஸ் மெக்காலேயின் எழுபத்து நான்காவது படைப் பிரிவைச் சேர்ந்த மைக்கேல் ஈகன் என்னும் அதிகாரி தான்!

அவன் செய்கையிலிருந்தே அவன் அஞ்சா நெஞ்சம் படைத்தவன் என்பது விளங்கும்!

கோட்டைச் சுவரின் மேல் ஏறி நின்ற மைக்கேல் ஈகனை, அங்கிருந்த பாஞ்சைப் படை வீரர்கள் சிலர் பார்த்து, அவனைத் துரத்தினர்.

அவர்கள் பிடியில் சிக்காமல் கோட்டைக்குள் நுழைய முயன்ருன் ஈகன்.

அதனுல் கோட்டைச் சுவரின்மேல் அங்கும் இங்கும் ஓடினுன்.

அப்படி ஓடியவன் ஓர் இக்கட்டான இடத்தில் சிக்கிக் கொண்டான்.

விடுவார்களா பாஞ்சைக் கோட்டை வீரர்கள்?

மைக்கேல் ஈகனை மாறி மாறி ஈட்டியால் குத்தி, அவனது உடலைச் சல்லடைக் கண்களாக்கினர் வீரர்கள்.

அந்த கோரக் காட்சியைக் கோட்டைக்கு வெளியே நின்றிருந்த கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் கண்ணுல் கண்டு கதிகலங்கினுன்!

குலையை நடுங்கும் அந்தக் காட்சியின் முடிவு!

ஈகனின் உயிர் அக் கணமே உடலை விட்டுப் பிரிந்தது!



மைக்கேல் ஈகனைப் பின் தொடர்ந்து கோட்டையின் மேல் ஏறிய மற்றும் சில சிப்பாய்களுக்கும் அவனைப் போன்ற கதியே ஏற்பட்டது!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தகர்க்கப்பட்டதும் அங்கிருந்து தப்பியோடிய வீரர்களைத் தவிர, கோட்டைக்குள் இருந்த வீரர்கள் தங்களை வெற்றி கொண்ட வெள்ளையரைப் பழி வாங்குவதையே நோக்கமாகக் கொண்டனர்.

காரணம், இனி அவர்களை எதிர்த்துப் போரிடுவதில் பலனில்லை என்று கண்டு கொண்டதே!

பகைவரான பரங்கியர் கோட்டையின் உட்பகுதிக்குள் நுழைவதைத் தடுக்க உடனே வழி வகுத்தனர்!

வழிகளில் தாண்ட முடியாதவாறு ஆழமும் அகலமும் கொண்ட அகழிகளை ஏற்கனவே அவர்கள் முன்யோசனையுடன் தோண்டி வைத்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும்!

கோட்டையின் அமைப்பில் அது மற்ருெரு சிறந்த அம்சமும் ஆகும்!

ஆகவே வெற்றிப் பெருமிதத்துடன், மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கோட்டைக்குள் விரைந்து புகுந்த வெள்ளையர் படையினர் அந்தக் குழிகளில் வீழ்ந்தனர்!

மேலும் கோட்டை வீரர்கள் இலந்தை, ஓடை போன்ற முள் மரங்களை வெட்டி, வழிகளில் போட்டும் அவர்கள் உள்ளே நுழையாதபடி தடுத்தனர்.

அவற்றையும் சாமர்த்தியமாகத் தாண்டிச் சென்ற சிப்பாய்களை மூர்க்கத் தனமாகத் தாக்கினர்!

வேல்களும், வாட்களும், வல்லயங்களும் கம்பெனிப் படையினரின் குருதியைச் சுவைத்தன!

அதே சமயம் கோட்டைக்குள் குபு குபு வென்று புகுந்த மலேயப் போர் வீரர்களின் எதிர்த் தாக்குதலால் பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் சிலர் வீர சொர்க்கம் புகுந்தனர்!

கோட்டைக்குள் புகுந்த கம்பெனிப் படையினர் அங்கே பயங்கர, குலை நடுங்கும் காட்சிகளைக் கண்டனர்.

கோட்டையினுள் பாஞ்சைப் பதி வீரர்களின் நாநூறுக்கு மேற்பட்ட சடலங்கள் அங்கும் இங்கும் அலங்கோலமாக வீழ்ந்து கிடந்தன!

அவை தவிர, ஏற்கனவே வீர மரணம் எய்திய வீரர்களின் சடலங்கள் கோட்டையின் கிழக்குப்புறத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன!

அவை மட்டுமா?

கைகளும், கால்களும், தலைகளும், முண்டங்களும் அங்கங்கே சிதறிக் கிடந்தன!

வெடி மருந்தின் வீச்சமும், கரும் புகையின் நாற்றமும் எங்கும் மண்டிக் கிடந்தன!

எங்கு பார்த்தாலும் குருதிக் குளம்!

எங்கும் ஒரே பிணக் காடு!

வீரம் செறிந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை வெள்ளையரின் வெடி குண்டுத் தாக்குதலில் தகர்ந்து வீழ்ந்து, வீர சொர்க்கம் புகுந்த விடுதலைப் புரட்சி வீரர்களின் சடலங்கள் சிதறிக் கிடந்த பிணக் காடாகக் காட்சியளித்தது!

## கோட்டை தரை மட்டமாகியது!

அதுவரை நடந்த பாஞ்சாலங்குறிச்சிப் போரில் வெள்ளையர் படையிலும் இழப்பு மிகுதியாக இருந்தது!



மறு நாள் காலை மைக்கேல் ஈகனின் சடலத்தைக அதிகாரிகளும், படை வீரர்களும் கண்டெடுத்துக் கதறி அழுதனர்!

அவனது இழப்பைக் குறித்து, அவன் பணியாற்றிய எழுபத்து நான்காவது பிரிவுப் படை வீரர்கள் பெரிதும் வருந்தினர்.

காரணம், மைக்கேல் ஈகன் அந்தப் படைப் பிரிவிலேயே நல்லவன்; நேர்மையானவன்; அனைவரிடமும் அன்புடனும், சுமுகமாகவும் பழகியவன்! எதையும் தாங்கும் இரும்பு இதயம் படைத்தவன்!

அவன் உயிருடன் இருந்தபோது எல்லாரும் எப்படி அவனை நேசித்தார்களோ, அதேபோல அவனது கொடூரமான சாவைக் கண்டு அனைவரும் கலங்கினார்கள்!

ஏற்கனவே மைக்கேல் ஈகனை—அனைவராலும் அன்புடன் நேசிக்கப்பட்டவனை—இழந்து கலங்கிய கம்பெனிப் படையினரால், அதே படைப் பிரிவைச் சேர்ந்தவனும், அதே போன்று அனைவராலும் அன்புடன் நேசிக்கப்பட்டவனும், மிகத் தைரியசாலியான வீரனும், இளம் வயதினனுமான லெஃப்டினென்ட் ஜில்கிரைஸ்ட் என்பவனையும் இழக்க நேர்ந்தது!

அவன் மரணமும் அவனது படைப் பிரிவைப் பொருத்தவரை பேரிழப்பிற்குரியதும், பரிதாபத்திற்குரியதுமாகக் கருதப்பட்டது.

ஜில்கிரைஸ்ட்டும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் புகுந்த போது அக் கோட்டைப் படை வீரர்கள் சிலரால் கொல்லப்பட்டவனாகும்!

அத்துடன் லெ.ஃப்டினென்டுகளான ஸ்பால்டின், காம்பெல்பிரஸ்ஸர் என்பவர்களும் கோட்டைக்குள் கொல்லப்பட்டனர்.

மேலும் குதிரைப்படை லெ.ஃப்டினென்ட் வாலன்டைன் காம்ப்பெல், நான்காவது படைப் பிரிவைச் சேர்ந்த பிரிச் ஆகியோர் படுகாய முற்றனர்.

லெ.ஃப்டினென்ட் பிளாக்கர் இரண்டு மூன்று இடங்களில் ஈட்டியால் குத்தப்பட்டுப் படுகாய முற்று, குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்த நிலையில் கம்பெனிப் படையினர் கண்டனர்!

அவன் முகாமுக்கு எடுத்துச் செல்லும் வழியில் மாண்டான்!

அவர்களுடன் கம்பெனிப் படைகள் இழந்த சிப்பாய்களின் எண்ணிக்கை சுமார் நானூற்று ஐம்பது ஆகும்!

அத்தகைய பேரிழப்புகளுடன் கூடிய கோட்டைத் தாக்குதல்களில் யார் கடுமையான கஷ்டத்திற்குள்ளானார்களோ, பெருத்த நஷ்டங்களுக்கிடையே யார் வெற்றி பெற்றார்களோ அவர்களுக்கு – ஆங்கிலேயக் கம்பெனி படையினருக்கு – கோட்டையினுள் நிலவிய, குலையை நடுக்கும் கோரக் காட்சி ஒன்றும் திதாகவோ, மனதைப் பிளப்பதாகவோ, உள்ளத்தை உருக்குவதாகவோ இல்லை!

ஆனால் கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ் அதற்கு விதிவிலக்காக இருந்தார்!

சுமார் மூவாயிரத்துக்கு அதிகமான பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை விடுதலை புரட்சி வீரர்கள்–சில சந்தர்ப்பங்களில் அவர்களது குடும்பத்தினரான



பெண்கள், முதியோர், குழந்தைகள் ஆகியோர்–கோட்டையின் மேல் தாக்குதல்கள் நடந்துகொண்டிருந்த போது பாதுகாப்பு வேண்டி, குழி பறித்து, அகழிகள் தோண்டி அவற்றினுள் பல நாட்கள் பதுங்கியிருந்தனர்!

வெடிகுண்டுகள், பீரங்கிகள் முதலானவற்றின் நாசவேலையிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள ஆங்காங்கே நிலவறைகள் அமைத்துப் பதுங்கியிருந்தனர்!

அதையெல்லாம் கேள்விப்பட்ட கம்பெனிப் படையினர் கழிவிரகக்கத்திற்குள்ளானார்களோ, இல்லையோ?

கர்னல் ஜேம்ஸ்வெல்ஷின் உள்ளம் மட்டும் அந்தக் கொடுமையான, பரிதாபத்திற்குரிய சம்பவங்களைக் கேட்டதால் பாகாய் உருகியது!

கழிவிரகத்திற்குள்ளானான் கம்பெனிப் படைத் தளபதி!

உலகில் உள்ள எந்த மொழியும் அத் துயரக் காட்சிகளின் கொடுமையை எளிதில் வர்ணித்துவிட முடியாது என்று தன் குறிப்பேட்டில் குறிப்பிட்டிருக்கிறான், இளகிய நெஞ்சம் படைத்த கர்னல் ஜேம்ஸ்வெல்ஷ்!

தகர்க்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை கம்பெனிப் படையினரின் கையில் வீழ்ச்சியடைந்ததும், கோட்டையிலிருந்து வெளியேறித் தப்பிச் சென்றவர்களையும், ஆங்கிலேயப் படைகளிடம் அகப்பட்டுக் கொண்டவர்களையும் தவிர, எஞ்சியிருந்தவர்கள் இரகசிய வழியாகத் தப்பிச் சென்றனர்.

அவ்வாறு தப்பிச் சென்றவர்களில் அதி முக்கிய மாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைக்கு அதிபதிகளான ஊமைத் துரையும், துரைசிங்கமும் ஆவர்!

அவ் விருவரும் அப்பொழுது, எப்படித் தப்பிச் சென்ருர்கள் என்பது யாருமே-கோட்டை வீரர்களே- அறிய முடியாத அதிசயச் சம்பவமாகும்!

தப்பிச் சென்ற அவர்களைக் கண்டுபிடித்துக் கைது செய்ய, கர்னல் ஆக்னியூவின் தலைமையில் வெள்ளையர் படை தேடிச் சென்றது!

தப்பிச் சென்ற ஊமைத்துரையையும், துரைசிங் கத்தையும் கம்பெனிப் படையினர் கர்னல் ஆக்னி யூவின் தலைமையில் தேடிச் சென்று, அவர்களைக் கண்டு பிடித்துக் கைது செய்தது தனி வரலாறு ஆகும்!

தலைவனையும், படைவீரர்களையும் காவல் வீரர் களையும் இழந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை - பீரங்கிக் குண்டுகளால் தகர்க்கப்பட்டுச் சேதமடைந்து அனுதையாக நின்ற பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை, கணவனை இழந்து விதவைக் கோலம் பூண்ட மங்கை யைப் போலப் பொலிவிழந்த கோட்டை, கம்பெனிப் படையினரின் வசமாகியது !

1801-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் முதல் தேதி ஆங்கிலேயரால் முற்றுகை யிடப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை, மே மாதம் இருபத்து நான்காம் தேதி அவர்கள் வசமாகியது.

முட்டைக்கோஸ் பண்ணையின் சுற்றுச் சுவர் என்றும், மிக அற்பமான, சிறிய மண்கோட்டைஎன்றும் ஆங்கிலேயக் கம்பெனிப் படையினரால் கேலியாகப்



பேசப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கித் தகர்த்துத் தங்கள் வசமாக்கிக் கொள்ள ஐம் பத்துநான்கு நாட்கள் ஆயின ஆங்கிலேயருக்கு!

கோட்டை அவர்கள் வசமான மறுநாள்— அதாவது, மே மாதம் இருபத்து ஐந்தாம் தேதி— பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இடித்துத் தரை மட்டமாக்கும் பணியில் ஈடுபட்டனர் கம்பெனிப் படை யினர்.

கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கும் பணிக்காக, கேப்டன் அஜாட் என்பவரின் கீழ், ஒன்பதாவது படைப் பிரிவைச் சேர்ந்த மூன்று அணிகள்— சுமார் முந்நூறு சிப்பாய்கள்—விடப் பட்டனர்.

மே மாதம் இருபத்தைந்தாம் தேதி அவர்கள் கோட்டையை அடியோடு இடித்துத் தரைமட்டமாக்கும் அழிவு வேலையைச் செய்ய எந்த விதத் தடையும் இருக்க வில்லை!

அவர்கள் பீரங்கிகளைக் கொண்டு வெடிவைத்து, கோட்டையைச் சின்னுபின்னமாக இடித்துத் தரை மட்டமாக்கினர்.

அதைச் செய்து முடிக்கவே அவர்களுக்கு மூன்று நாட்கள் ஆயின!

கோட்டையைச் சின்னுபின்னமாக இடித்துத் தரை மட்டமாக்கியதோடு நின்று விடவில்லை நாச வேலையில் ஈடுபட்டவர்கள்!

அந்த இடத்தில் மூட்டை மூட்டையாக உப்பையும் ஆமணக்கு விதைகளையும் தூவி நன்ருக உழுது விட்டனர்!

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை இருந்த அந்த நிலப்பகுதி வேறு எந்த வேலைக்கும் பயன்படக்கூடாது என்ற நோக்கமே அப்படிச் செய்ததன் காரணம்!

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்து வீர மறவர்களின் தாயகக் கோட்டை—வாணிகம் செய்ய வந்த வெள்ளையருக்கு வரி கேட்க என்ன உரிமை என்று சூளுரைத்து வீர முழக்கம் செய்த அஞ்சா நெஞ்சம் கொண்ட தலைவர்களுக்கு இருப்பிடமாகத் திகழ்ந்த கோட்டை—ஆங்கிலேயக் கம்பெனியாரின் கண்களையும் கருத்தையும் உறுத்திக் கொண்டிருந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை—கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நின்ற அந்த வரலாற்றுப் புகழ்பெற்ற இடம், ஒன்றுக்கும் உதவாத கட்டாந்தரை ஆயிற்று!

## போருக்குப் பின்

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை ஆங்கிலேயக் கம்பெனிப் படையினரால் முற்றுகை யிடப்பட்டு, தாக்கித் தகர்க்கப்பட்டபோது அங்கிருந்து தப்பிச் சென்ற கோட்டைத் தலைவர் ஊமைத்துரையும், அவருடைய தம்பி தளவாய் துரைசிங்கமும் கோட்டைக்கு மூன்று மைலுக்கு அப்பால் இருந்த ஒரு சிற்றூரை அடைந்தனர், சில பாஞ்சை வீரர்களுடன்.

தப்பிச் சென்ற அவர்களைத் தேடிச் சென்ற கர்னல் ஆக்னியூவும் அவனது படையினரும் அச் சிற்றூரை அடைந்து அவர்களைப் பிடிக்க முயற்சித்தனர்.



இரு தரப்பாருக்குமிடையே கடும் போர் நிகழ்ந்தது!

அச் சமயம் எட்டப்பனும் தன் படையுடன் அங்குச் சென்று, பாஞ்சைப் பதி வீரர்களைத் தாக்கி, ஊமைத்துரையையும், துரைசிங்கத்தையும் பிடித்துக் கம்பெனியாரிடம் ஒப்படைக்க முயற்சித்தான்.

அதன் மூலம் ஆங்கிலேயரிடம் தனது அந்தஸ்தையும், அதிகாரத்தையும் அதிகமாக்கிக் கொள்ளலாம் என்ற பேராசையே எட்டப்பனின் அந்தச் செயலுக்குக் காரணம்!

கம்பெனிப் படை, மற்றும் அதற்குத் துணையாக நின்ற எட்டப்பனின் படைகளுக்கும், ஊமைத்துரையைச் சேர்ந்த பாஞ்சைப் பதி வீரர்களுக்கும் நடந்த சண்டையில் குழப்பம்தான் ஏற்பட்டதே தவிர, ஆங்கிலேயருக்கு நன்மை ஏதும் ஏற்படவில்லை!

அந்தக் குழப்பம் நிறைந்த சண்டையில் ஊமைத்துரையும், துரைசிங்கமும் காட்டிய வீரமும், தந்திரமும் இணையற்றன!

அதன் விளைவாக ஊமைத்துரை பல விழுப்புண்களை ஏற்றார்!

இறுதியில் சண்டை குழப்பத்தில் முடியவே, அதைக் காரணமாக வைத்து, விழுப்புண்களை ஏற்ற ஊமைத்துரை அங்கிருந்து தந்திரமாகத் தப்பித்துக் கொண்டார், துரைசிங்கத்துடன்!

எட்டப்பனின் படை வந்து தங்கள் படையுடன் சேர்ந்ததால்தான் சண்டைக் கிடையே குழப்பமும் ஏற்பட்டது என்றும், அப்படை வந்திருக்காவிட்டால் எந்தக் குழப்பமும் நேர்ந்திராது, ஊமைத்துரையை

தப்பியோட விட்டிருக்க மாட்டோம் என்று கர்னல் ஆக்னியூ தன் தலைமை அதிகாரிகளிடம் பிறகு கூறினான்.

பல விழுப்புண்களை ஏற்ற ஊமைத்துரையும், துரைசிங்கமும் தப்பியோடும்போது ஊமைத்துரை சோர்ந்து தரையில் வீழ்ந்தார்.

அந்த நிலையில், அப்பொழுது அங்கு வந்து அவரைப் பார்த்தாள் முத்தம்மாள் என்ற மங்கை நல்லாள்!

துரைசிங்கத்தின் துணையுடன் ஊமைத்துரையைத் தன் வீட்டிற்குத் தூக்கிச் சென்று, அவருக்கு ஏற்பட்ட விழுப்புண்களுக்கு வைத்தியம் செய்து காப்பாற்றலானாள்.

ஊமைத்துரை முத்தம்மாளின் வீட்டில் சிகிச்சை பெற்றுத் தங்கியிருந்தபோது, அவரைத் தேடும் பணியில் ஈடுபட்ட கம்பெனிச் சிப்பாய்கள் அவள் வீட்டிற்கும் வந்தனர்.

சட்டென்று முத்தம்மாள் படுக்கையில் இருந்த ஊமைத்துரையைச் சேலையால் நன்கு மூடிவிட்டு, மற்றப் பெண்களையும் சுற்றி நின்று அழும்படி கூறி, அவளும் மாரடித்து அழ ஆரம்பித்தாள்!

அதைக் கண்டனர் அங்கு வந்த சிப்பாய்கள்.

"என்ன சேதி? ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டனர்.

அழுது புலம்பி தலைவிரி கோலமாய் நின்ற பெண்கள், "இந்த வீட்டுக்காரியான முத்தம்மாளின் மகன் வைசூரி கண்டு இறந்து விட்டான். அதனால் தான் அழுகிறோம்!" என்றனர்.



வைசூரி என்ற வார்த்தையைக் கேட்ட சிப்பாய்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்!

'வைசூரி' என்ற கற்பனை நோய் நாடகத்தின் காரணமாகச் சிப்பாய்களின் பிடியிலிருந்து தப்பிய ஊமைத்துரை, விழுப்புண்கள் அனைத்தும் ஆறி, நலமும் பலமும் பெற்றபின், தன்னைக் காப்பாற்றிய முத்தம்மாளுக்கு மனமார நன்றி தெரிவித்து விட்டு, தன் சகோதரர் துரைசிங்கத்துடன் இரவோடு இரவாக அங்கிருந்து கிளம்பி, கடல், மடவு, கமுதி, முதலான ஊர்களில் தலைமறைவாகத் தங்கினர்.

ஆங்கிலேயக் கம்பெனியார் நடத்திய அடக்கு முறை தர்பாரைக் கண்டு நெஞ்சம் பொருமினர்!

பின்னர் கம்பெனியாருக்கு எதிரிகளாயிருந்த சிவகங்கைப் பாளையக்காரர்களான வெள்ளை மருது, அவருடைய தம்பி சின்ன மருது ஆகியோரின் துணையைப் பெற்று ஆங்கிலேயரை எதிர்க்கத் தொடங்கினர்.

அவர்களுடன் குளத்தூர், காடல்குடி, நாகலாபுரம், விருப்பாச்சி ஆகிய ஜமீன்களைச் சேர்ந்த இருபதாயிரம் வீர மறவர்கள் பக்கபலமாகச் சேர்ந்தனர்.

அதையெல்லாம் கேள்விப்பட்ட ஆங்கிலேயக் கம்பெனியாருக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது! கோபம் கொந்தளித்தது!

தங்கள் பிடிக்குச் சிக்காமல் தப்பியோடித் தலைமறைவான ஊமைத்துரைக்கும், துரைசிங்கத்துக்கும் மருது சகோதரர்கள் அடைக்கலம் கொடுத்திருக்

கிருர்களே என்று அவர்கள் மேல் ஆத்திரம் பொங்கியது பரங்கியருக்கு !

ஆகவே சிவகங்கையின் மீது படையெடுத்தனர்.

ஆதிக்க பலம் கொண்ட ஆங்கிலேயரை அவ்வளவு சுலபமாக மருது சகோதரர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை.

சிவகங்கைச் சீமை பறங்கியரின் படைகளால் சீரழிந்தது!

அப் போருக்கிடையே எப்படியோ தப்பிச் சென்ற மருது சகோதரர்களும், பாஞ்சைச் சகோதரர்களும் ஊர் ஊராகச் சுற்றி, கடைசியில் சங்கரப்பதிக் கோட்டையை அடைந்தனர்.

அங்கே, கூட இருந்தே குழி பறிக்கும் துரோகிகளால் அவர்கள் வெள்ளையருக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டனர்!

ஆனாலும் மாவீரர்களான அவர்கள் அம்முறையும் வெள்ளையரிடமிருந்து தப்பிக்காட்டிற்குள் ஓடி மறைந்தனர்.

அந்தக் காட்டைக் கம்பெனிப் படையினர் சல்லடை போட்டு சலிப்பது போலத் தேடி, அவர்களைக் கண்டு பிடித்துத் தாக்கினர்.

வெள்ளைச் சிப்பாயின் துப்பாக்கிக் குண்டு ஒன்று வெள்ளை மருதுவின் தொடையைத் துளைத்தது!

அவர் நிலை தடுமாறித் தரையிலே சாய்ந்தபோது, அவரைத் தாங்கிப் பிடிக்க ஓடோடி வந்தனர் சின்ன மருதுவும், ஊமைத்துரையும், துரைசிங்கமும்!

உடனே அவர்களை வளைத்துப் பிடித்துக் கைதாக்கி விட்டனர் ஆங்கிலேயச் சிப்பாய்கள்!



மருது சகோதரர்களை அவர்களுக்குச் சொந்தமான திருப்பத்தூர்க் கோட்டைக்குக் கொண்டு சென்று, அவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றனர் வெறிபிடித்த வெள்ளையர்!

ஊமைத்துரையையும், துரைசிங்கத்தையும் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு சென்று, கோட்டைக்கு மேற்கில், கோட்டையைப் பீரங்கிகள் வைத்துத் தகர்க்க வெள்ளையர் எழுப்பிய பீரங்கி மேடையின் மேல் தூக்கு மரங்களை நட்டு, 1801-ம் ஆண்டு, ஜூன் மாதம், பத்தாம் தேதி அவ்விரு சகோதரர்களையும் தூக்கிலிட்டு, விண்ணுலகம் அனுப்பினர் வெள்ளையர் !

வீரபாண்டியரின் வழிவந்த மன்னர்கள்— ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்த வீர மறவர்கள், சுயநலக்காரர்களின் சூதாட்டத்தில் வெட்டப்பட்ட காய்களானார்கள் !

சிறைபிடித்த புரட்சி வீரர்களையும், மருது சகோதரர்களின் வம்சத்தாரையும் சிங்கப்பூருக்கு அப்பாலுள்ள பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் என்ற தீவிற்குக் கொண்டு சென்று சிறையில் அடைத்தனர் ஆங்கிலேயர்.

தீவாந்திர சிட்சையில், சீரழிந்த அவர்கள் அங்கேயே உயிர் துறந்தனர் !

அவ்வாறெல்லாம் கொடுமைகள் புரிந்து, பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரையே தங்கள் தஸ்தாவேஜுகளிலிருந்து நீக்கிவிட்டனர், வணிகம் செய்ய நம்

நாட்டிற்கு வந்து, நாடாளும் வெறி கொண்ட ஆங்கிலேயர்!

மேலும் பாஞ்சாலங்குறிச்சி இருந்த இடத்தில் எந்த விதமான கட்டிடங்களும் கட்டக் கூடாது என்று கண்டிப்பாகத் தடை விதித்தது வெள்ளையர் ஆதிக்கம்!

காரணம் எதுவாக இருக்கும்?

மீண்டும் அங்கே கட்டிடங்கள் கட்டப்பட்டால், கோட்டைகள் எழுப்பப்பட்டால் பாஞ்சாலங்குறிச்சி வீர மறவர் கூட்டம் எங்கே வீறு கொண்டெழுந்து, வெள்ளையரை எதிர்க்குமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்ததன் விளைவே அதன் காரணம்!

—✱—

# பின்னுரை

பாஞ்சாலங்குறிச்சி இருந்த இடத்தில் எந்த விதமான கட்டிடங்களும் கட்டக் கூடாது என்று ஆங்கிலேயக் கம்பெனியார் கண்டிப்பாகத் தடை விதித்தனர்.

ஆனால்...

சீரழிந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை பாங்காகச் சீரடையவும், தகர்த்துத் தரைமட்டம் ஆக்கப்பட்ட கோட்டை தலை நிமிர்ந்து எழுந்து நிற்கவும் காலம் வராதா என்று ஏங்கினர் வீரபாண்டியக் கட்டபொம்மனின் பிற்காலச் சந்ததியினர்.

V211:514746
N79

அவர்கள் மட்டுமா ஏங்கினர்?

தமிழ்நாடே ஏங்கியது!

அவர்கள் அனைவருடைய ஏக்கத்தையும் ஏற்ற முறையில் போக்கத் தகுந்த வழியைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது.

தரையோடு தரையாகத் தகர்ந்து வீழ்ந்து, மண்ணோடு மண்ணாய்க் கலந்துவிட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை, அது தகர்த்துத் தரைமட்டமாக்கப்பட்ட அதே இடத்தில் முன்னை விடப் பன்மடங்கு பாங்குடன், கலை நயத்தோடு கூடிய எழிலுடன் 1973-ம் ஆண்டு எழுப்பியது தமிழ்நாடு அரசு!

அது தமிழ்நாடு அடைந்த பேறு!

தமிழர் செய்த தவப் பயன்!

—(நிறைவு)—

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 103099
EGMORE MADRAS

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |